


# கலைவாசல்

## 2019







## கலாசார மத்திய நிலையம்
## கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமானதும் உறுதியானதுமான அனைத்து வகையான
மரத் தளபாடங்களையும் பெற்றுக் கொள்ள...

# Asnath Furniture

## அஸ்னத் பேர்னிசர்

தேச அபிமானி
எம்.ஏ.எம்.ஹைதர் J.P





74/4, AL HAMBRA ROAD,
MARUTHAMUNAI-4
MOB.: 0778772726


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாசல்

# 2019

## சிறப்பு மலர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பிதழ்

இது......
கல்முனைப் பிரதேச
கலை, இலக்கிய
விளையாட்டு, கல்வியென
உச்சமடைந்த மூத்தவர்களுக்கும்
வளர்ந்துவரும் இளையவர்களுக்கும்
சமர்ப்பணம்.

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

கல்முனை பிரதேச செயலக வழிகாட்டலில் கலாசார மத்திய நிலையம் நடாத்துகின்ற கலாசார விழாவினை முன்னிட்டு "கலைவாசல்" எனும் பெயரில் முதன்முறையாக இப்பிரதேச கலைஞர்களின் படைப்பாற்றலை ஆவணப்படுத்தும் வகையில் இம்மலர் வெளியிடப்படுகின்றமை இவ்விழாவின் சிறப்பம்சமாகும். ஒரு சமூகத்தின் கலை, கலாசார, பாரம்பரியம், பண்பாடு, இலக்கியம் என்பன அச்சமூகத்தின் வரலாற்றையும் அதன் இருப்பையும் உறுதிப்படுத்தும் சான்றுகளின் வடிவங்களாகும். அந்த வகையில் முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்ற பிரதேசங்களில் ஒன்றான கல்முனைப் பிரதேசம் பல்வேறுபட்ட கலை இலக்கிய கலாசார பாரம்பரியங்களின் விம்பமாக பிரதிபலிக்கும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பூர்வீகமாக காட்ட முடியும்.

நாட்டார் பாடல். பொல்லடி, கவிபாடுதல், நாட்டுவைத்தியம் போன்ற கிராமிய கலை வடிவங்கள் தனித்துவம் இழக்காமல் இப்பிரதேசத்தில் இயங்கு நிலையில் உள்ளமை இப்பிரதேசத்திற்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

மேலும் கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், நாடகம், இசை, சங்கீதம், கஸிதா, சித்திரம், ஓவியம் ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளில் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்களிப்பு செய்கின்றமையும், இப்பிரதேசத்தின் மான்மியங்களாகும்.

குறிப்பாக சர்வதேச விருதுகள் பெற்ற கவிஞர்கள், சர்வதேச கலை இலக்கியத் துறை வளவாளர்களாக பங்குபற்றுகின்ற கலைஞர்கள், திறனாய்வு கட்டுரைகள் வரைகின்ற எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், இப்பிரதேசத்தையும் கடந்து செயற்படுகின்றமை இப்பிரதேசத்தின் மற்றுமொரு சாகித்தியமாகும்.

அந்த வகையில் பல்துறை கலை இலக்கிய ஆளுமை படைந்த, அதை உயிர்ப்பித்த இப்பிரதேச கலைஞர்களுக்கான கௌரவம் வழங்கும் இவ்விழாவின் ஆவணப்படுத்தலாக வெளிவருகின்ற 'கலைவாசல்' மலர் சிறந்த ஒரு படைப்பாகவும், எதிர்கால சந்ததிக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையுமென எதிர்பார்க்கின்றேன். இருந்தும் இம்மலராக்கத்திற்கு படைப்புகள் வழங்கிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், வாழ்த்துச் செய்தி வழங்கிய பெரியார்கள், கல்விமான்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இக்கலாசார விழா சிறப்பாக நடைபெற ஊன்று கோலாக நின்று செயற்பட்ட பிரதேச செயலாளர், கலாசார நிலைய பொறுப்பதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள், கலாசார மத்திய நிலையத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள், இதற்கான நிதி உதவிகள் வழங்கிய நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

A.R.M.சாலிஹ் Bsc, MBA
சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர்
பிரதேச செயலகம்
சாய்ந்தமருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரின் ஆசிச் செய்தி

## ආශිංසනය

ඉස්ලාම් ලබ්ධිකයන්ගේ කලා සහ සංස්කෘතික කටයුතු ප්‍රවර්ධන කිරීමේ අරමුණින් කල්මුනේ (මුස්ලිම්) සංස්කෘතික මධ්‍යස්ථාන විසින් වාර්ෂිකව පවත්වනු ලබන "මුනේ මවුඩම්" උත්සවය වෙනුවෙන් ප්‍රකාශයට පත් කරනු ලබන "කලයි වාසල්" සඟරාව ආශිර්වාද පණිවිඩයක් නිතුත් කිරීමට අවස්ථාවක් ලැබීම පිළිබඳව සතුටු වෙමි.

ඉස්ලාම් ආගමිකයන්ට ඔුහුන්ටම ආවේණික සංස්කෘතික අංග තිබෙන අතර ඔවුන් විසින් ඒවා සාම්ප්‍රදායිකව පවත්වාගෙන යාම සහ ආරක්ෂා කිරීමට කටයුතු කරනු ලැබේ.

ඒ නිමිත්තෙන් කල්මුනේ ප්‍රදේශවාසින්ගේ කලා, සංස්කෘතික චාරිත්‍ර ආරක්ෂා කිරීම හා ප්‍රවර්ධනය කිරීම වැනි අරමුණු මුල් කරගෙන කල්මුනේ සංස්කෘතික මධ්‍යස්ථානය විවිධ වැඩ සටහන් ක්‍රියාත්මක කිරීම ආඩම්බරයට කරුණකි.

තවද, පැවැත්වීමට නියමිත සංස්කෘතික උත්සවය හා සඟරාව ප්‍රකාශයට පත්කිරීම වැනි කටයුතු වල ඇප කැපවී කටයුතු කරන ප්‍රාදේශිය ලේකම්, ස්ථානභාර සංස්කෘතික ප්‍රවර්ධන නිළධාරී, සංස්කෘතික සංවර්ධන සංගමය හා මධ්‍යස්ථාන කාර්ය මණ්ඩලයට මගේ ප්‍රණාමය මෙයින් පිරිනමමි.

එල්. එච්. රම්‍යසිරි,
අතිරේක ලේකම් (ප්‍රවර්ධන / ඉදිකිරීම්)
නිවාස, ඉදිකිරීම් සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

கல்முனை பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் கலாசார விழாவின் சிறப்பு மலரான 'கலைவாசல்' க்கு வாழ்த்து செய்தி வழங்குவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சிடைகின்றேன். அம்பாரை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கல்முனை பிரதேச செயலகம் மிகவும் முன்னோடியானது. அத்தோடு கல்முனைப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் மூவின மக்களும் ஒன்றாய்க் கூடி வாழ்கின்ற பல்வகைமை கொண்ட பிரதேசமாகும். ஒருவருடைய கலாசார, பண்பாட்டு வாழ்வியலை மற்றவர் மதிக்கின்ற போதுதான் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையும், சகோதரத்துவமும், பரஸ்பர புரிந்துணர்வும் ஏற்படுகின்றது.

அதே போன்று ஒவ்வொரு பிரதேச மக்களும் தமக்கான தனித்துவ பாரம்பரிய, பண்பாடு, கலை, கலாசாரங்களை வாழ்வியலாகக் கொண்டு விளங்குகின்றனர். அந்த வகையில் கல்முனை மக்களது வாழ்வியலும் தனித்துவமானது என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு சமூகத்தினதும் கண்ணாடியாகி இருப்பவைகள் அச்சமூகத்தினுடைய படைப்பிலக்கியங்களும், படைப்பாளர்களுமாகும். அவ்வாறான பண்பாட்டியலை ஒன்று சேர்த்து தொகுக்கும் முயற்சியானது அவசியமானதாகும். இதன் ஆரம்பமாக வெளிக்கொணரப்படும் 'கலைவாசல்' மலர் இதனது பெறுமானத்தை வெளிக்காட்டும் என நம்புகின்றேன். மேலும் இவ்வாறான விழாக்கள் மூலம் ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகத்தின் கலை, கலாசார அம்சங்களை அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களின் மூலமாக பரஸ்பர ஒற்றுமையுடன் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி சந்தோசமாக வாழும் நிலை ஏற்பட பிராத்திக்கின்றேன்.

கல்முனை பிரதேச செயலாளர் M.M.நசீர் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுகள் வெற்றிகரமாக நடந்தேற ஆசிக்கின்றேன்.

D.L.M.பண்டாரநாயக்க.
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
அம்பாரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

அம்பாறை மாவட்டத்தின் மிகவும் தொன்மை வாய்ந்த கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார மேம்பாட்டு பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முனைமகுடம் விழா சிறப்பு மலர் 'கலைவாசலுக்கு' ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அம்பாறை மாவட்ட கிழக்கு கரையின் வட முனையில் அமைந்துள்ள கல்முனைப்பிரதேசமானது நாகரீக, பண்பாட்டு, கலை, கலாசார கோலங்களில் பண்பட்ட பிரதேசமாகும். பல ஊர்களையும், பல் சமூகங்களையும் கொண்டு பிட்டும் தேங்காய்ப் பூவும் போல் இருந்த இப்பிரதேசமானது அதிகார, நிருவாக தேவைகளால் பிளவுபட்டிருந்தாலும் சமூக, கலாசாரமாக தனித்துவங்களை இழக்காமல் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

கல்முனை, கல்முனைக்குடி, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை (மு.பி) பாண்டிருப்பு (மு.பி) இஸ்லாமபாத் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியதாக தற்போது மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், ஆரம்பத்தில் பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, சேனைக்குடியிருப்பு, சாய்ந்தமருது போன்ற கிராமங்களை உள்ளடக்கிய பரந்த பிரதேசமாகும்.

மனித நாகரீக வளர்ச்சி மேம்படுகின்ற போது பண்பாட்டு கலாசார விழுமியங்களும் உயர்ந்தே வந்திருக்கும். அந்த வகையில் கல்முனையும், தனித்துவமான பாரம்பரிய கலை கலாசார பண்பாடுகளைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். தனித்துவமான மத அடையாளங்களுடனும், மொழி வழக்காறுகள், தனியான இலக்கிய போக்கு, பண்பாட்டு விழுமியங்கள் என ஏனைய பிரதேசங்களிலிருந்து உயர்ந்து நிற்கின்றது.

ஒரு சமூகத்தினது விடுதலை மற்றும் இருப்புக்களையும் தக்க வைப்பதற்கான ஆயுதமாக இலக்கியமும் மொழியுமே இருந்து வந்துள்ளன. ஒரு சமூகத்தினது பூர்வீகம், வரலாறு, பண்பாடு என்பன அடுத்துவரும் சந்ததிக்கு ஆவண ரீதியாக கடத்தப்படாத போது அச்சமூக அரிச்சுவடிகள் வழக்கொழிந்து போவது தடுக்க முடியாததாக மாறுகின்றது.

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்கள் குறிப்பிட்ட முஸ்லிம் தேசியத்தின் அடையாளமாக கல்முனை இருப்பதற்கு இப்பிரதேச கலாசாரங்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்வியலாளர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் அவர்களின் தலைமையில் முன்கொண்டு செல்லப்படும் முனைமகுட விழா வெற்றிபெற வாழ்த்துகின்றேன். மேலும் கலாசார பேரவை மற்றும் அதன் செயலாளர் கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வான் மற்றும் ஏற்பாட்டுக் குழுவையும் பாராட்டுவதுடன் எல்லோருக்கும் அல்லாஹ்வின் அருள் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப்,
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி

கல்முனை பிரதேச செயலக பிரிவில் மிகவும் சிறப்பாக இயங்கி வரும் கலாசார அபிவிருத்திச் சங்கம் 2019 ஆம் ஆண்டுக்காக "முனைமகுடம்' எனும் பெயரில் ஏற்பாடு செய்துள்ள விழாவை சிறப்பிக்கும் ஒரு அங்கமாக பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி "கலைவாசல்" எனும் பெயரில் வெளியீடு செய்யப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் கல்முனை பிரதேச செயலக பிரிவில் இயங்கிக் கொண்டிருக்கும் கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் அண்மைக்கால அர்ப்பணிப்பான செயற்பாடுகள் பாராட்டத்தக்கதாகும்.

இலை மறை காயாக காணப்படும் கலைஞர்களை கலையுலகிற்கு வெளிக்காட்டி அவர்களை கௌரவிக்க வேண்டியதும், அது போல் அருகி வரும் எமது பண்டைய கலை, கலாசார பாரம்பரிய விழுமியங்களை ஊக்குவித்து தொடர்ந்து முன்னெடுத்து சென்று எமது எதிர்கால சமூகத்திடம் எழுத்துருவிலும் புகைப்படங்கள் ஊடாகவும் மற்றும் ஏனைய வழிகளிலும் ஒப்படைக்க வேண்டிய தலையாய கடமை எம்மனைவருக்கும் உண்டு. அதற்காக "முனைமகுடம்" எனும் தொனிப் பொருளுடன் கொண்டாடப்படும் இவ்விழாவானது பாரிய பங்களிப்பைச் செய்யும் என திடமாக நம்புகின்றேன்.

அதே போன்று கல்வித்துறையில் ஆர்வம் காட்டும் எமது இளம் தலைமுறையை பாராட்டி கௌரவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் கலை, கலாசார துறையில் மட்டுமல்லாது கல்வித் துறையிலும் மேம்பாட்டை ஏற்படுத்தும் என்ற நோக்கில் இவ்விழாவில் மாணவர்கள் பாராட்டப்படுவதும் இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

இந்த வகையில் இவ்வாறான மாபெரும் விழாவையும், பெறுமதி மிக்க நூலையும் வெளியீடு செய்யும் கல்முனை கலாசார அபிவிருத்தி சங்கத்தின் செயற்பாட்டையும் அதற்காக ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் நிதி உதவிகளை வழங்கிய அனைவரையும் பாராட்டி நன்றி கூறுவதில் மகிழ்ச்சிடைகின்றேன். இவ்விழாவின் நோக்கம் இனிதே நிறைவேற வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

எம்.எம்.நஸீர்,
பிரதேச செயலாளர்,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்முனை மாநகர முதல்வர் அவர்களின் ஆசிச்செய்தி

கல்முனை கலாசார மத்திய நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கலாசார விழாவில் வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்முனை பிரதேச செயலகத்தினால் மருதமுனையில் அமைக்கப்பபட்டுள்ள கலாசார மத்திய நிலையம் கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்கு மாத்திரமல்லாமல் கல்வி, சமூக, பொருளாதார விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொது நிகழ்வுகளுக்கும் பாரிய பங்காற்றி வருவதை நாம் அறிவோம்.

ஒரு சமூகத்தினதும் பிரதேசத்தினதும் தொன்மையை பறைசாற்றுவதில் கலாசார விடயங்களே அதிக பங்களிப்பு செலுத்தி வருகின்றன. அதற்கான களத்தை இந்த கலாசார மத்திய நிலையம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு தூரநோக்கு சிந்தனையுடன் இந்த உயரிய பணியை செய்திருக்கின்ற கல்முனை பிரதேச செயலகத்திற்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளை பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, காலத்தின் தேவைக்கேற்ப நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த நிலையத்தினால் இம்முறை நடாத்தப்படுகின்ற கலாசார விழாவும் அதில் வெளியிடப்படுகின்ற சிறப்பு மலரும் சமகால எதிர்கால சந்ததியினருக்கு எமது சமூக, பிரதேச கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை எடுத்தியம்புவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகம் கிடையாது.

இவ்விழா சிறப்பாக நிறைவேற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Lr. ஏ.எம்.றகீப் L.L.B JPUM
மாநகர முதல்வர்
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முனையின் கலைவாசல்

முப்பெரும் கலாசார அம்சங்களைச் சுமந்து முழு நாட்டிற்கே தமது கலை, விழுமியங்களை பிரபல்யப்படுத்தும் கல்முனை பிரதேசத்தின் மும்முனைகளாகத் திகழும் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை போன்ற நகரங்களின் கலாசாரப் பொக்கிசமான கல்முனை கலாசார மத்திய நிலையத்தின் "முனைமகுடம்" விழாவும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் "கலைவாசல்" விஷேட மலர் வெளியீடும் இப்பிரதேசத்தின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பாரம்பரிய கலை, கலாசார அம்சங்களை எமது முன்னோர்கள் தமது வாழ்க்கையில் பூரணமாக கடைப்பிடித்து ஒழுகினர். இதனால் இவர்கள் தங்களது அன்றாட வேலைகளை சலிப்பின்றி நிறைவேற்றியது மட்டுமன்றி சந்தோசமாகவும் தேக ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தார்கள். கலை என்பதன் பொருளை நன்றாக விளங்கியதன் காரணத்தினால்தான் இவர்களின் வாழ்வில் நிம்மதி, சந்தோசம், ஒற்றுமை, சௌபாக்கியம் என்பன பிரகாசித்தன என்றால் அது மிகையாகாது.

பொல்லடி (களிகம்பாட்டம்), சீனடி, சிலம்படி, குரவை, வாள்வீச்சு, நாடகம், தாலாட்டுப் பாடல், கிராமிய கவி, மற்றும் கிராமியப் பாடல்கள் என்பன எமது மண்வாசனை பொருந்திய கலாசார அம்சங்களாகும். முற்காலத்தில் மரண வீட்டில் ஒப்பாரி வைத்து அழுவதும் ஓர் கிராமிய பாடலாகவே கருதப்பட்டன. தற்போது இக்கலை மருவி விட்டது. ஏனைய கலை அம்சங்களும் அரிதாகவே காணப்படுகின்றன.

**களிகம்பாட்டம்**

கிராமத்தின் முக்கிய வைபவங்கள், பெருநாட்கள், கத்னா, கல்யாணம், காதுகுத்தல், பிரமுவர்களை வரவேற்றல் போன்ற சந்தர்ப்பங்களில் இடம்பெறும் நிகழ்வே கோலாட்டம் அல்லது பொல்லடி அல்லது களிகம்பாட்டம் என அழைப்பர். பொதுவாக 16 பேர்களைக் கொண்டு இவ்வாட்டம் நடைபெறும். இருந்த போதிலும் தற்போது 12 பேர்களைக் கொண்ட குழுவினரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். முன்னர் கிழக்கு மாகாணத்தில் பொல்லடி தத்திகள் காணப்பட்டன. இவர்கள் தொழில்கள் செய்து சலிப்படைந்து ஓய்வெடுக்கும் வேளைகளில் பொல்லடித்து மகிழ்வார்கள். இக்குழவிற்கு அண்ணாவியார் என்றழைக்கப்படுபவர். தலைவராக காணப்படுவார். இவர் பாடும் போதே மற்றவர்கள் கோல்களை கையில் எடுத்து அடித்தாடுவார்கள்.

**சீனடி**

சீனாவிலிருந்து எமது நாட்டிற்கு தாவப்பட்ட ஒரு கலையே சீனடியாகும். இது ஓர் தற்காப்புக் கலையாகும். இக்கலை முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது தமிழர்கள், சிங்களவர்கள் போன்றவர்களுக்கும் உரித்தான கலை வடிவமாகும். 'அங்கம்பொர'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இதனை சிங்களத்தில் அழைப்பர். இதனுள் சீனடி, வாள்வீச்சு, கத்திகுத்து போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை விளையாடுவதனூடாக தேக ஆரோக்கியம் ஏற்படுகின்றது. இவை மட்டுமல்லாது சிலம்பாட்டம், நாடகம், நாட்டார் கவி, வாள் வீச்சு என்பன இன்னும் எமது சமூகத்தில் காணப்படுகின்றமை கல்முனைப் பிரதேசத்திற்கே பெருமையாகும்.

**திருமண ஊர்வலம்**

1960, 1970 போன்ற காலங்களில் திருமண வைபவங்களின் போது மணமகனின் 'காவின்' பதிவு செய்த பிறகு மணமகனின் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் புடைசூழ மணமகனின் உற்ற நண்பர் ஒருவர் குடைபிடிக்க வீதியில் ஊர்வலமாக மணமகளின் வீட்டிற்கு செல்வார்கள்.

இவ்வாறு ஊர்வலமாக செல்லும் போது அரிக்கன் லாம்பு அல்லது பெற்றோ மெக்ஸ் ஒளி விட்டு முன்னே செல்ல, பின்னே பொல்லடித்துக் கொண்டு ஓர் குழுவினர் செல்வார்கள். இதன் பின்னே சிலம்படி காரர்களும் தடியை வீசிக்கொண்டே செல்வார்கள். மணமகனின் உறவுப் பெண்கள் குரவையிட்டபடி நிகழ்வை சுதியேற்றிக் கொண்டே மணமகளின் வீட்டை நோக்கி செல்வார்கள். வீதியின் இருமருங்கிலும் பொதுமக்கள் பார்வையிட்டபடி நின்று கொண்டிருப்பார்கள்.

சுருங்கக் கூறின் முஸ்லிம்களின் அனைத்து கலாசார அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே இத்திருமண ஊர்வலம் காணப்படுகின்றது. தற்காலத்தில் இப்பாரம்பரிய சம்பிரதாயம் எம்மை விட்டும் தூர சென்றுவிட்டது என்று கூறலாம்.

இது இவ்வாறிருக்க, எமது மண்ணின் மீனவ சமூகம் கடலில் கரைவலை இழுக்கும் போது பாட்டுப் பாடுவதும், தாய்மார்கள் குழந்தைகளை தூங்க வைக்க தாலாட்டுப் பாடுவதும் இன்றும் செவிகளுக்கு விருந்தாகவே இருக்கின்றன.

**கவிபாடல்**

எமது பிரதேசத்தின் ஆதி கலையாக விளங்கும் கவி பாடல் நிகழ்வு முன் காலத்தில் திருமண வைபவங்களில் பிரபல்யம் பெற்றிருந்தது. குறிப்பிட்ட குடும்பத்தில் சந்தோசமான ஓர் சம்பவமோ அல்லது துக்ககரமான சம்பவமோ நிகழ்ந்தால் அச்சம்பவத்தை கருப் பொருளாக வைத்து கவிப்பாடலை உடனே இயற்றிப் பாடுவார்கள். இத்திறமை குறிப்பிட்ட ஒரிருவருக்கே இருக்கும். உதாரணமாக குடும்பத்தில் ராத்தாவும், தங்கையும் சண்டையிட்டு உறவில்லாமல் பிரிந்திருந்தால் குறிப்பிட்ட சம்பவத்தை சுருக்கமாக 02 நிமிடங்கள் கூறினால் போதும். இதை வைத்துக் கொண்டு 02 மணித்தியாலங்கள் கவி பாடுவார்கள். திருமண வீட்டில் ஒலிபெருக்கியினூடாக கவி பாடினால் ஊருக்கே புரிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான எமது பாரம்பரியப் பண்பாட்டு நிகழ்வுகள் குறிப்பாக அம்பாரை மாவட்ட கரையோர முஸ்லீம்கள் மத்தியில் புரையோடிப் போயிருந்தன. இவைகள் ஒரு சில இன்றும் சில கிராமங்களில் காணப்போகின்றமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் எமது பிரதேச மண்ணிலும் கலாசார அம்சங்கள் மினிங்கிக் கொண்டிருப்பது மன நிறைவைத் தருகின்றது.

கலாசாரப் பாரம்பரியப் பண்புகள் ஒரு சமூகத்தை அடையாளப்படுத்துகின்றன. பௌத்த சமூகமாக இருந்தாலும் சரி, இந்து சமூகமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய சமூகமாக இருந்தாலும் சரியே, குறிப்பிட்ட சமூகத்தின் பழக்க வழக்கங்கள், பண்புகள், திறன்கள், நம்பிக்கைகள், மனப் பாங்குகள் போன்றவற்றினால் இச்சமூகம் ஓர் கட்டுக் கோப்புக்குள் அமைகின்றது. இதன் மூலம் ஓர் வரையறை அல்லது எல்லை நிர்ணயிக்கப்படுகின்றது. இதை தாண்டி அச்சமூகம் தனது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளாது. அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் பிற சமூகத்தின் கலாசார பண்புகள் குறிப்பிட்ட சமூகத்திற்குள் ஊடுருவும் நிலை ஏற்படும். இதனால் சமூகத்தில் சீர்கேடுகள் ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புண்டு.

**கலாசாரம் என்றால் என்ன?**

ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்கள், பண்புகள், மனோநிலை, கலை, மொழி, நம்பிக்கைகள், திறன்கள், சட்ட திட்டங்கள் போன்றவற்றை கலாசாரம் என அழைக்கப்படும்.

இவ்வாறான கலை, கலாசார விழுமியங்கள், எமது முன்னோர்களின் பாரம்பரிய அம்சங்கள் மங்கி மறைந்து விடக்கூடாது என்பதற்காகவும், இவைகளைப் பேணிப்பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதற்காகவே இலங்கையில் கலாசார மத்திய நிலையம் தோற்றம் பெற்றது.

இந்நோக்கங்களின் அடிப்படையில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி அதி உத்தம சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் எண்ணத்திலுதித்த இத்திட்டம் 1998ம் ஆண்டிலேயே அமுல்படுத்தப்பட்டது. இலங்கையின் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒரு கலாசார மத்திய நிலையம் அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மேலும் இலங்கையின் முஸ்லிம்களுக்கென தோற்றம் பெற்ற 03வது கலாசார மத்திய நிலையம் கல்முனை கலாசார மத்திய நிலையமாகும் என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் 194 கலாசார மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்டு மூவின சமூகங்களுக்கும் கலாசார சேவைகளை வழங்கிக் கொண்டு வருகின்றது. அந்த வகையில் கல்முனை கலாசார மத்திய நிலையம் கடந்த 2013.03.25ம் திகதி பி.ப.2.00 மணிக்கு கௌரவ கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் T.B.ஏக்கநாயக்க அவர்களினால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. எமது பிரதேசத்தின் கலைஞர்களுக்கான களமாகவும் மாணவர்களின் கல்வி விருத்திக்கான தளமாகவும், கலாசார அம்சங்களின் மேம்பாட்டுக்கான அரங்காகவும் இது காணப்படுகின்றது. அப்போதைய பிரதேச செயலாளர் ஜனாப். M.M.நௌபல் சேர் (நிதியமைச்சின் மேலதிகாரி) அவர்களின் முயற்சியின் பயனாகவே இம்மத்திய நிலையம் இங்கு தோற்றம் பெற்றது என்றால் அது மிகையாகாது.

2013.03.18ம் திகதி இந்நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜனாப் I.L.றிஸ்வான் ஆகிய நான் நியமிக்கப்பட்டேன். கட்டிட நிர்மான வேலைகள், சுற்றுமதில் வேலைகள் போன்றவற்றின் இறுதிக் கட்டத்தில் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட போதிலும் எஞ்சியிருக்கும் 07 நாட்களிலும் திறப்பு விழாவுக்குரிய ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தேன். கல்முனை பிரதேச மக்கள் இக்கலாசார மத்திய நிலையத்தின் திறப்பு விழாவுக்கு திரள் திரளாக வருகை தந்தனர். அந்த நாள் ஞாபகம் இன்னும் என் கண்களை விட்டகலவில்லை.

அன்றாடம் அதிகாலையில் ஆதவனின் கதிரொளியை தன்னுள் பதியவைத்து கம்பீரமாக காட்சியளிக்கும் எமது கலாசார மத்திய நிலையம் அன்று தொட்டு இன்று வரை இப்பிரதேச மக்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்கிக் கொண்டு வருகின்றது.

01. திறன் அபிவிருத்திப் பாடநெறிகள்
    (i) ஆங்கிலம்
    (ii) சிங்களம்
    (iii) சித்திரம்
    (iv) கர்நாடக சங்கீதம்
    (v) இஸ்லாமிய கிராமிய கலைகள்
    (vi) பரத நாட்டியம் (இந்து மதத்தை சார்ந்தவர்களுக்கு மட்டும்)
    (vii) கிராமிய சங்கீதம்
    (viii) புதிய ஆக்கங்களும் கிராமிய நடனமும்
02. வாசிகசாலை சேவைகள்
03. கலாசர சேவைகளை வழங்குதல்
04. சிறந்த நல்லொழுக்கமுள்ள சமூகமொன்றை கட்டியெழுப்புதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013ம் ஆண்டு மாணவர்கள் மத்தியில் இங்கு நடைபெறும் பாடநெறிகள் சம்பந்தமான பூரண விழிப்புணர்வின்மையால் 27 மாணவர்கள் மட்டும் சிங்களம், ஆங்கில திறன் அபிவிருத்தி பாடநெறியில் கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். மேலும் 2014ம் ஆண்டில் 121 மாணவர்கள் உட்பட 2018 ம் ஆண்டு வரைக்கும் 591 மாணவர்களை உள்வாங்கி கற்பித்து இறுதிப்பரீட்சையின் பின்னர் சான்றிதழ்களை வழங்கியுள்ளோம். இவ்வருடம் 85 மாணவர்கள் இங்கு சிங்களம், ஆங்கிலம், சித்திரம், கர்நாடக சங்கீதம் போன்ற பாடநெறிகளை பயின்று வருகின்றனர்.

கலாசார மத்திய நிலையத்தில் சிங்களம், ஆங்கிலம், சித்திரம் போன்ற பாடநெறிகள் நடைபெறுகின்றன போதிலும் வெளிப்பிரதேசங்களில் இருக்கும் மாணவர்களின் தேவை கருதி கிராமிய சமூகம் (Village Society) எனும் பெயரில் 2015 இலிருந்து காரைதீவு பிரதேசத்தில் கிராமிய சங்கீதம், கர்நாடக சங்கீதம் போன்ற பாடநெறிகளை நடாத்தியதோடு கடந்த 2014, 2015, 2016, 2018 ஆகிய காலப்பகுதிகளில் கல்முனை தமிழ் பிரிவில் பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், புதிய படைப்புகளும் கிராமிய நடனமும் போன்ற பாடநெறிகள் நடாத்தப்பட்டது. இதன் மூலம் எமது சகோதர இன சமூகம் நன்மையடைந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2015/2017 போன்ற காலப்பகுதிகளில் நற்பிட்டிமுனையில் பொல்லடி (களிகம்பாட்டம்) பாடநெறியும் நடைபெற்றது.

**வாசிகசாலை சேவை**

எமது நிலையத்திலுள்ள வாசிகசாலைகயில் 425 நூல்கள் உள்ளன. சிறுகதை, நாவல்கள், மொழிப் பயிற்சி, கல்வித் துறை சார்ந்த நூல்கள், கவிதைகள் போன்ற பல்வேறுபட்ட புத்தகங்கள் காணப்படுகின்றன. இங்கு 115 வாசகர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

**கலாசார சேவைகளை வழங்குதல்**

எமது சமூகத்தின் பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு வருடமும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன,

01. புனித இப்தார் நிகழ்வு
02. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் 'செனஹச' கற்பிணித் தாய்மார்களுக்கான விஷேட வேலைத்திட்டம்.
03. புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு நடாத்தப்படும் நிகழ்வு
04. சித்திரப் பயிற்சிப் பட்டறையும், சித்திரக் கண்காட்சியும்
05. பிரதேச கலை, கலாசர விழாக்கள்
06. பாடசாலை மாணவர்களுக்கான கிராமியக் கவி, கிராமிய பாடல்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை.
07. நூலக மேம்பாட்டுச் செயற்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக எதிர்காலத்தில் கலாசார மத்திய நிலையத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கும் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. கவிதை பயிற்சிப் பட்டறை
02. நாடகப் பயிற்சிப் பட்டறை
03. அரபு எழுத்தணி பயிற்சிப் பட்டறை மற்றும் கண்காட்சி
04. தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை.
05. கல்விச் சுற்றுலா மற்றும் கலாசார மாற்றீட்டுத் திட்டம்.
06. கனணிக் கற்கை நெறிகள்
07. இஸ்லாமிய பாரம்பரிய கலைக் குழுக்களை உருவாக்குதல்

மேலும் வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடா வருடம் நடாத்தப்படும் அனைத்து கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடைபெறும் பிரதிபா இசை, நடனப் போட்டிகளுக்காக மாணவர்களைத் தயார் செய்து மாகாண மட்டம், தேசிய மட்டம் போன்றவற்றில் கலந்து கொள்ளல்.

இப் 'பிரதிபா' இசை, நடனப் போட்டிகளில் கடந்த 2015 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் கர்நாடக சங்கீத குழு பாடல் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று 2015 இல் வாரியபொல இல் நடைபெற்ற தேசிய சாகித்திய விழாவிலும் 2018 இல் வெலஸ்முல்லை இல் நடைபெற்ற தேசிய சாகித்திய விழாவிலும் இரண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டோம். முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் எமது மாணவர்கள் உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் தேசிய மட்டத்தில் ஒழுங்கமைத்து 2016ம் ஆண்டுக்காக நடாத்தப்பட்ட கலாசார முகாம் (Cultural Camp) எனும் நிகழ்ச்சியிலும் 2018 இல் குவன்னா நாட்டிய நடன நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

எமது முன்னோர்களின் பாரம்பரிய கலாசார பண்பாடுகளில் மட்டும் கவனம் செலுத்துவது மட்டுமன்றி தற்காலத்துக்கேற்றவாறு சில கலை, கலாசார அம்சங்களிலும் நாம் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகவுள்ளது. ஏனெனில் தற்கால இளைஞர், யுவதிகளின் விருப்பம், சிந்தனைகள், செயற்பாடுகள் போன்றவற்றுக்கமைய நவீனத்துவத்திற்கு ஏற்றமாதிரி எமது கலைகளில் சிறுமாற்றங்களை செய்து அதற்கு செயல் வடிவம் கொடுத்தாக வேண்டும்.

உதாரணமாக றபான் அடித்தல், பக்கீர் பைத் பாடல், கஸீதா பாடல், றபான் நடனம் (ஆண்கள்) கோலாட்டம் போன்றவற்றில் இளைஞர் யுவதிகள் கவனம் செலுத்துகின்றனர். எமது சமூகத்திற்கு பொருந்தக்கூடிய இவ்வாறான சில கலைகளுக்கு உயிர் கொடுத்து புதிய படைப்பாக மாற்றியமைத்து இளைஞர்களை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உற்சாகப்படுத்துவது எமது கடமையாக காணப்படுகின்றது. 1930 களில் காணப்பட்ட கலைகளையே நாம் இன்று எமது முன்னோர்களின் கலை, கலாசாரங்கள் எனக்கூறிக் கொண்டிருக்கின்றோம். தற்போது புதிய படைப்பாக அல்லது புதிய ஆக்கமாக நாம் செயற்படுத்தும் கலை அம்சங்கள் இன்னும் 50 ஆண்டுகளின் பின்னர் முஸ்லீம்களின் கலைகளை கனதியாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறான விடயங்களில் கலாசார மத்திய நிலையம் மட்டுமன்றி பாடசாலைகள், பொது நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன அயராது முயற்சிகளை எடுக்க வேண்டும். இணைப்பாட விதானம் எனும் துறைக்குள் இவைகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மாணவர் மத்தியில் போதிய விழிப்புணர்வு காணப்படாமை, மற்றும் பாடசாலை சமூகத்தினரிடம் ஆர்வமின்மை போன்றன எமது எதிர்கால சந்ததியினரை பின்னோக்கித் தள்ளும் செயற்பாடாகவே அமைகின்றன.

க.பொ.த. (உ/த) மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றாலும் z score சற்று குறைவாகக் காணப்பட்டால் இவ்வாறான நிகழ்வுகளில் தேசிய மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்ற சான்றிதழ்களின் மூலம் குறிப்பிட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்கின்றனர். இவைகள் எமக்கு நன்றாக தெரிந்திருந்தும் நாம் எமது பிள்ளைகளை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கின்றோம். இதனைத் தடை செய்வது எது? என்ற கேள்விக்கு நாம் விடை தேட கடமைப்பட்டுள்ளோம்.

மேற்கூறப்பட்ட கலை, கலாசார துறைகளில் எம்மைவிட சகோதர இனத்தவர்கள் அதிகூடிய கவனம் செலுத்துகின்றமையினால் அவர்கள் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். அச்சமூகங்கள் முன்னோக்கி நகர்கின்றன. நாம் எங்கிருக்கின்றோம் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

எனவே எமது சமூகத்தின் கலாசார விழுமியங்களை மேம்படுத்தி பாதுகாப்பதனூடாக சிறந்த நல்லொழுக்கமுள்ள சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

## கலாசார அபிவிருத்திச் சங்கம்

கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடுகள், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆரம்ப கால கட்டத்தில் ஓர் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டது. பிற்காலத்தில் இதனது சேவைகள் விருத்தியடைந்த காரணத்தினால் முகாமைத்துவ சபை எனும் பெயர் வழக்கொழிந்து கலாசார அபிவிருத்தி சங்கம் ஒன்றை உருவாக்க நேர்ந்தது. இதன் பிரகாரம் மனித வள அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2003.09.01 ம் திகதி 3/3/1/Gen எனும் இலக்கமுடைய கடிதத்தின் பிரகாரம் இலங்கையிலுள்ள அனைத்து கலாசார மத்திய நிலையங்களிலும் கலாசார அபிவிருத்திச் சங்கம் தோற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் நிமித்தம் எமது கலாசார மத்திய நிலையத்தின் முதலாவது கலாசார அபிவிருத்திச் சங்கம் கடந்த 2013ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கல்முனைப் பிரதேசத்திலுள்ள கலை, கலாசாரங்களில் ஈடுபாடுள்ளவர்களை கொண்டு இக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக பதவி வழியாக நிலையப் பொறுப்பதிகாரியும் கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தரும் ஆலோசகராக பிரதேச செயலாளர் அவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

2013 இல் தெரிவு தெரிவு செய்யப்பட்ட கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபையின் விபரம்.

01. தலைவர் :- ஜனாப் I.L.றிஸ்வான் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்)
02. செயலாளர் :- கவிஞர் M.M.விஜிலி (ஆசிரியர்)
03. பொருளாளர் :- அல்ஹாஜ் A.L.அபுல் ஹஸன்
04. உப தலைவர் :- மர்ஹூம் A.R.M.நிஹ்மத்துல்லாஹ் (அதிபர்)
05. உப செயலாளர் :- கலைதாசன் S.L.A.ஹக்கீம்

**குழு அங்கத்தவர்**

06. கவிதாயினி A.H.சித்தி மாஜிதா
07. திருமதி M.S.சித்தி நிஹாறா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
08. புன்னகை வேந்தன் A.M.பாறூக்
09. ஜனாப் A.C.M.அஷ்ர.்.ப் (CDO)
10. சட்டத்தரணி M.M.M.முபீன் (L.L.B)
11. கவிஞர் A.R.A.ஜெமீல்
12. ஜனாப் A.S.M.முர்ஸித்
13. ஜனாப் M.J.அஹாஸ் அகமட்

இக்கலாசார அபிவிருத்திக் குழுவின் ஒத்துழைப்புடன் எமது சேவைகளை ஒவ்வோர் அடி அடியாக பார்த்து பார்த்து நடைமுறைப்படுத்தினோம். இக்கால கட்டத்தில் எமது கலாசார மத்திய நிலையத்திற்கு

01. திரு. L.பிரதீபன் 2013.06.07 ம் திகதியும்
02. ஜனாப் P.M.நிஸாம் 2014.02.13 ம் திகதியும்
03. ஜனாபா A.G.சித்தி பாஜியா - 2014.06.07 ம் திகதியும்
04. ஜனாப் M.A.M.ஹைதர் 2015.03.04 ம் திகதியும்

நியமிக்கப்பட்டார்கள், இவர்கள் வெவ்வேறு துறைசார்பாக நியமிக்கப்பட்ட போதிலும் கலாசார மத்திய நிலையத்தினால் ஒழுங்கமைத்து நடாத்தப்படும் விழாக்கள், மேம்பாட்டு நிகழ்வுகள், உள்ளக மற்றும் வெளிக்கள செயற்பாடுகளுக்கு இவர்களின் கணிசமான ஒத்துழைப்புக்கள் கிடைத்தன. குறிப்பாக ஜனாப் M.A.M.ஹைதரின் ஊக்கமும், ஒத்துழைப்புக்களும் மெச்சத் தக்கவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை பிரதேச கலாசார மேம்பாட்டு நடவடிக்கைகளில் அடைவுகளை எய்துவதற்கு எமது கலாசார அபிவிருத்தி குழுவும், பிரதேச செயலாளர்களின் ஆலோசனைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றன. 2013ம் ஆண்டிலிருந்து பிரதேச செயலாளர்களாக இங்கு சேவையாற்றிய ஜனாப் M.M.நௌபல் (நிதியமைச்சின் மேலதிகாரி), திரு A.விக்ரமாராட்சி, ஜனாப். M.H.அப்துல் கனி, அல்ஹாஜ் M.M.நஸீர் போன்றோரை நான் அவசியம் இங்கு குறிப்பிட வேண்டும். மேலும், தற்போதைய பிரதேச செயலாளர் அல் ஹாஜ் M.M.நஸீர் அவர்கள் இவ்விழா தொடர்பாகவும், வெளியிடப்படும் சிறப்பு மலர் தொடர்பாகவும் மிகுந்த கரிசனை எடுத்துள்ளார் என்பதை கூறிக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

'முனைமகுடம்' விழா, 'கலைவாசல்' ஞாபகார்த்த சிறப்பு மலர் வெளியீடு போன்றவற்றை சிறப்பாக நடாத்துவதற்கு என்னோடு பக்க பலமாக இருந்த பிரதேச செயலாளர், மலர்க்குழு, மற்றும் விழாக் குழுவினருக்கும், இம்மலருக்கு ஆசிச் செய்திகளை வழங்கிய வீடமைப்பு நிர்மாணத்துறை, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. L.H.றம்யசிறி அவர்களுக்கும், அம்பாரை மாவட்ட செயலாளர், திரு D.M.L.பண்டாரநாயக்க, மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி A.M.அப்துல் லத்தீப் (LLB), கௌரவ மேயர் சட்டத்தரணி A.M.றகீப் (LLB), பிரதேச செயலாளர் அல்ஹாஜ் A.M.நஸீர் SLAS-1 (Sp) போன்றோருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இம்மலருக்கான ஆக்கங்களை வழங்கியோர், மற்றும் கலாசார அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், அதிபர்கள், கலாசார மத்திய நிலைய பணியாளர்கள், வளவாளர்கள், மாணவர்கள், போன்றோருக்கும் மற்றும் குறிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டு தந்த மருதமுனை அப்னா அச்சக உரியமையாளர் U.L.M.நகீப் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எதிர்காலத்தில் இக்கலாசார மத்திய நிலையம் சிகரத்தின் ஒளி விளக்காய் என்றும் இப்பிரதேச மக்களின் கலை, கலாசார மேம்பாட்டிற்கு துணை நிற்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

ஆமீன்

I.L.றிஸ்வான்,
நிலையப் பொறுப்பதிகாரி,
கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்,
கலாசார மத்திய நிலையம்,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 1. போதைப்பொருட்கள் அல்லது போதைமருந்துகள்.

ஒரு மனிதனது அன்றாட வாழ்க்கைக்கு எவ்வாறு உணவு, உடை, வீடு போன்ற அத்தியாவசிய பொருட்கள் தேவைப்படுகின்றனவோ அதேபோல் மனிதனது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக மருந்துகள் காணப்படுகின்றன. இந்த அனைத்து மருந்துகளும் இரசாயனப் பதார்த்தங்களாகவே காணப்படுகின்றன. இவற்றை குறிப்பிட்ட அளவுகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பயன்படுத்தும்போது அவை மனிதனை குணப்படுத்தும் மருந்துகளாக மிகக்குறைந்த பக்கவிளைவுகளோடு செயற்படுகின்றன. இதற்கு மாறாக இம்மருந்துகள் பயன்படுத்தப்படும் பொழுது அவை மனிதனில் பலவிதமான பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன. இவ்வாறாக மனிதனில் துஸ்பிரயோகத்திற்குட்பட்டு நோயிலிருந்து சுகமடைதல் என்ற நோக்கமல்லாது வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகளே போதை மருந்துகளாக கருதப்படுகின்றது. இவை மனிதனில் ஏதோ ஓர விதமாக செயற்பட்டு உண்மைக்கு மாறான ஒரு உணர்வை மனிதனுக்கு கொடுக்கவல்லது. தொடராக பயன்படுத்தப்படும் பொழுது மனிதனை அடிமைப்படவைக்கக்கூடியது. மேலும் மனிதனுக்கு பலவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தவல்லன.

### 1.1. போதைப்பொருள் வகைப்படுத்தல்.

பொதுவாக இவ்வாறான போதைப்பொருட்களை அவை செயற்படும் விதத்தை, அவை தயாரிக்கப்படும் மூலப்பொருளை அல்லது அந்த போதைப் பொருளானது மனிதனில் ஏற்படுத்தும் தாக்கத்தை வைத்து சில வகைகளாக பிரிக்கப்படுகின்றன. பல புதிய போதைப்பொருட்களின் வருகையை கொண்டு காலத்திற்கு காலம் இவற்றின் வகைப்படுத்தலானது பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது. பிரதானமாக இப்பொழுது ஆய்வுகூடங்களில் தயாரிக்கப்பட்ட செயற்கையான மூலக்கூறுகளுடன் கூடிய போதைப்பொருட்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இதனடிப்படையில் பார்க்கும்பொழுது பின்வருமாறு போதைப்பொருட்களை வகைப்படுத்த முடியும். அவையாவன

1. Depressant - மூளைத்திறன் குறைப்பு மருந்துகள்.
2. Stimulant – ஊக்கிகள் அல்லது ஊக்கமளிக்கும் மருந்துகள்.
3. Hallucinogens – மாயத்தோற்றத்தை உருவாக்கும் மருந்துகள்.
4. Opioids – ஒபியம் சார்ந்த மருந்துகள்.
5. Inhalants - மூக்கினூடாக அகத்துறிஞ்சப்படக்கூடிய போதைமருந்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Cannabis – கஞ்சாவை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட போதை மருந்துகள்.

7. New Psychoactive substances – புதிய உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய போதைமருந்துகள்.

8. Anabolic Steroids – தடைசெய்யப்பட்ட ஊக்கிகள்.

### 1.1.1. Depressant - மூளைத்திறன் குறைப்பு மருந்துகள்.

இந்த விதத்திலான போதைப்பொருட்களானது பயன்படுத்தப்படும் பொழுது மனிதனது மூளையின் அல்லது மனித நரம்புக்கலங்களின் செயற்பாட்டு வேகத்தை குறைக்கக் கூடியனவாகும். இவற்றை பயன்படுத்திய ஒருவரது செயற்பாடானது மந்த கதியிலேயே காணப்படும். இவ்வகையான போதைப்பொருட்களானது மனிதனது மத்திய நரம்புத்தொகுதியில் நேரடியாக செயற்பட்டு அதில் ஒரு மயக்கத்தை அல்லது மந்தகதியை ஏற்படுத்தும். இதன்போது ஏற்படக்கூடிய இந்த தன்மை காரணமாக இவ்வகையிலான போதைப்பொருளை பயன்படுத்தியவர் பதட்டம் குறைதல், கவலை குறைதல், உடல் ரீதியான வலிகள் உணரப்படாமை, மயக்கநிலை அல்லது அதீத தூக்கம் போன்ற மாற்றங்களை உணரலாம். மேலும் இந்த வகையிலான போதைப்பொருளை பயன்படுத்தியவரது செயற்பாடுகள் மந்தமான வேகத்தில் காணப்படுவதோடு நரம்புத்தொகுதியில் ஏற்படும் மாற்றம் காரணமாக பார்வையிலும் சிலவிதமான வித்தியாசமான உணர்வுகள் காணப்படலாம். உதாரணமாக தூரத்தில் காணப்படக்கூடிய ஒரு பள்ளம் அருகில் இருப்பது போன்று தோன்றலாம். இவ்வகையான போதைப்பொருளுக்கு சிறந்த உதாரணமாக அற்கஹோலை (சாராயம்) குறிப்பிடலாம்.

### 1.1.2. Stimulant – ஊக்கிகள் அல்லது ஊக்கமளிக்கும் மருந்துகள்.

இவ்வகையிலான போதைபொருட்கள் அல்லது போதைமருந்துகளானது மனிதனது மூளை மற்றும் நரம்புத்தொகுதியின் செயற்பாட்டு வேகத்தை அதிகரிக்கவல்லன. இதன் காரணமாக இவற்றை பயன்படுத்தக்கூடியவர்கள் ஒரு மேலதிக சக்தியை அல்லது உட்சாகத்தை உணருவார்கள். அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட உலக போதைப்பொருள் அறிக்கையில் கஞ்சா உற்பத்திப்பொருட்களுக்கு அடுத்ததாக உலகத்தில் அதிகமாக துஸ்பிரயோகப்படுத்தப்படும் போதைப்பொருளாக இவ்வகையிலான போதைப்பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வகையிலான போதைப்பொருட்களை பயன்படுத்தியவர்களிடம் அதீதமான உடல் செயற்பாடுகள் மற்றும் அதீத பேச்சு போன்றவற்றை அவதானிக்கலாம். மேலும் இவர்களிடத்தில் பசியின்மையும் காணப்படும். பெரும்பாலான இரவு கேளிக்கை விடுதிகளில் இவ்வகையான போதைமருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காரணம் இவ்வகையிலான போதைமருந்துகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் தொடராக சில மணிநேரங்களுக்கோ அல்லது பல மணிநேரங்களுக்கோ அவர்களுக்கு சோர்வுத்தன்மை ஏற்படாது. எனவே இவற்றை பயன்படுத்திவிட்டு விடிய விடிய நடனமாடுதல் போன்ற விடயங்களை செய்ய முடியும் என்ற எண்ணமாகும். எனினும் உண்மையில் இவ்வகை போதைமருந்துகளின் பாதிப்பானது மிகக்குறுகிய காலத்தினுள் அவர்களை மரணத்திற்கு இட்டுச்செல்லக்கூடியதாகும் அண்மைக்காலங்களில் இரவு கேளிக்கை விடுதிகளில் ஏற்பட்டு செய்திகளாக வெளிவந்த மரணங்களின் பிரதான காரணமாக இவ்வகையிலான போதைப்பொருள் பயன்பாடு காணப்படுதை அவதானிக்கலாம். இவ்வகையிலான போதைப்பொருட்களுக்கு உதாரணமாக நிகோடின் (சிகரட்டில் அடங்கியுள்ளது), எக்ஸ்டசி வில்லைகள் மற்றும் கொகய்ன் (Cocaine) போன்றவற்றை குறிப்பிடலாம்.

### 1.1.3. Hallucinogens – மாயத்தோற்றத்தை உருவாக்கும் மருந்துகள்.

இவ்வகையிலான போதைமருந்துகள் மனிதனது மத்திய நரம்புத்தொகுதியில் செயற்பட்டு அதனுள் நடக்கக்கூடிய தகவல் பரிமாற்றத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவல்லன. இவற்றை பயன்படுத்தியவர்களுக்கு அவர்களது உண்மையான புலனுணர்வு பாதிக்கப்பட்டுவிடும் அல்லது உண்மைக்கு மாறாக மாற்றப்படும். இதன் காரணமாக இவ்வகை போதை மருந்துகளை பயன்படுத்தியவர்கள் உண்மையிலேயே அவ்விடத்தில் இல்லாத சப்தங்கள் மற்றும் காட்சிகளை காணக்கூடியவர்களாக இருப்பார்கள். உதாரணமாக தன்முன்னே பலவிதமான கார்டூன் சித்திரங்களில் மட்டும் காணக்கூடிய பல உருவங்கள் தன்னுடன் பக்கத்தில் இருப்பதாக உணருவார்கள். பொதுவாகவே இவ்வகையான போதைமருந்துகளை பயன்படுத்த முன்னதாக ஒரு மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கியபின்னரே இவற்றை பயன்படுத்துவார்கள். இவ்வகையிலான போதைமருந்துகளுக்கு உதாரணமாக மெஜிக் மஸ்ரூம் என்றழைக்கப்படும் ஒருவகை காளான் மற்றும் L.S.D என்றழைக்கப்படும் lysergic acid diethylamide போன்றவற்றை குறிப்பிடலாம்.

### 1.1.4 Opioids – ஓபியம் சார்ந்த மருந்துகள்

இவ்வகையிலான போதைமருந்துகள் மனிதனது மூளையில் காணப்படும் ஓபியம் கூறு வாங்கிகளில் (Opioid receptors) செயற்படக்கூடியன. இவ்வகையிலான


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மருந்துகள் அதிகமாக மருத்துவத்துறையில் வலி நிவாரணிகளாகவும் இருமல் போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் மருந்துகளாகும். இவை துஸ்பிரயோகப்படுத்தப்படும்பொழுது மனிதனது மூளையில் காணப்படும் வெகுமதி செயற்பாட்டிற்கு பொருப்பான பகுதியில் உள்ள டோபமின் எனப்படும் நரம்புதொகுதித் தகவல் பரிமாற்ற இரசாயனக்கூறுகளை தூண்டுவதன் மூலம் மாயமானதொரு மகிழ்ச்சியை ஏற்படுத்தவல்லன. பெரும்பாலான இவ்வகை போதைமருந்துகள் மிக விரைவாக மனிதனில் அடிமைத்தன்மையை ஏற்படுத்தவல்லன. இவ்வகையிலான போதைமருந்துகளுக்கு உதாரணமாக ஹேரோயின் (Heroin) மற்றும் கோடேன் (Codeine) போன்றவற்றை குறிப்பிடலாம்.

### 1.1.5. Inhalants - மூக்கினூடாக அகத்துறிஞ்சப்படக்கூடிய போதைப்பொருட்கள்.

இவ்வகையிலான போதைமருந்துகளாவன மூக்கினூடாக அகத்துறிஞ்சப்படக்கூடியதாக அறை வெப்பநிலையில் ஆவியாக காணப்படக்கூடியனவாக இருக்கும். பெரும்பாலான இவ்வகை போதைமருந்துகள் வீட்டு பாவணைப்பொருட்களாக காணப்படக்கூடியன. இவ்வகை போதைப்பொருட்கள் பொதுவாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களினால் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்வகை மருந்துகள் நுரையீரலினூடாக இரத்த சுற்றோட்டத்தொகுதியை சென்றடையக்கூடியன. இவை சிறிய அளவில் உடலினுள் சேர்க்கப்படும் பொழுது கூட மத்திய நரம்புத்தொகுதியை மந்தகதியில் செயற்படவைப்பதன் மூலமும் இரத்த நாளங்களை விரிவடையசெய்து இரத்த அழுத்தத்தை பாதிப்படையசெய்வதன் மூலமும் மனித உடலில் போலியான சில மாயஉணர்வுகளை உருவாக்குகின்றன. இவை மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தனவாகவும் சிறு அளவில் பயன்படுத்தப்படும்பொழுதுகூட மனிதனுக்கு மரணத்தை கொண்டுவரக்கூடியனவாகவும் அல்லது மனித மூளை மற்றும் இரத்த சுற்றோட்டத்தை பாதிக்கக்கூடியனவாகவும் இருக்கின்றன. இவற்றிற்கு உதாரணமாக பெயின்ட், டினர், பேனையின் மை, பெற்றோல் போன்ற அரை வெப்பநிலையில் வாயுவாக மாறக்கூடியவற்றை கூற முடியும்.

### 1.1.6. Cannabis – கஞ்சாவை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட போதைப்பொருட்கள்

இவ்வகையான போதைப்பொருட்கள் இயற்கையான கஞ்சா செடியை கொண்டு தயாரிக்கப்படுகின்றன. உலகத்திலேயே மிகவும் அதிகமாக துஸ்பிரயோகப்படுத்தப்படும் போதைப்பொருளாக இவ்வகையே காணப்படுகின்றது. இவ்வகையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருட்கள் உட்கொள்ளப்படுமிடத்து அவற்றில் காணப்படும் செயற்படு மூலப்பொருளான delta-9-tetrahydrocannabinol ஆனது மனித மூளையில் உள்ள கனபினோய்ட் கூறு வாங்கியில் (cannabinoid receptor) செயற்படுகின்றது. இவ்வகையிலான போதைப்பொருட்கள் பயன்படுத்தப்படுமிடத்து குறுகியகால ஞாபகசக்தியில் இழப்பு ஏற்படுவதோடு நீண்டகால பயன்பாட்டின்போது மூளைக்கலங்களில் ஏற்படும் சேதம் காரணமாக மீளச்சரிப்படுத்த முடியாத மனநோய்கள் ஏற்படும். இவ்வகையிலான போதைமருந்துகளில் மருத்துவ பயன்பாடுகள் இருப்பதாக சிலர் கருத்து தெரிவித்தாலும் அவற்றிற்கான போதிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் இல்லை என்றுதான் கூறவேண்டும். மேலும் அவ்வாறு கூறப்படக்கூடிய மருத்துவக் குணங்களை விட அவற்றை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு குணப்படுத்தலாம் என்று கூறப்படுகின்ற நோய்களுக்கு கஞ்சா சம்பந்தப்பட்ட மருந்துகளை விடவும் ஆராய்ச்சி செய்து நிரூபிக்கப்பட்ட மிகச்சிறந்த மருந்துகள் சந்தையில் விற்பனைக்கு உண்டு. இலங்கையில் தேசிய மருத்துவத்துறையில் இவ்வகைக் கஞ்சா சம்பந்தப்பட்ட மருந்துகள் பயன்படுத்தப்பட்டாலும் அதில் காணப்படக்கூடிய விஷம் நீக்கப்பட்ட பின்னர் தான் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வகையிலான போதைமருந்துகளுக்கு உதாரணமாக கஞ்சா, ஹசீஸ் போன்றவற்றை குறிப்பிடலாம்.

### 1.1.7 New Psychoactive substances – புதிய உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய போதைமருந்துகள்.

இவ்வகையிலான போதைமருந்துகள் இரசாயன ஆய்வுகூடத்தில் பலவகையான இரசாயனப்பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுபவையாகும். இவை தயாரிக்கப்படுவதற்கான பிரதானமான நோக்கமாக தற்போது நடைமுறையிலுல்ல போதைப்பொருள் சம்பந்தமான சட்டங்களுக்கு உட்படாமல் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை தொடர்தலை குறிப்பிடலாம். இவ்வகையிலான போதைப்பொருட்களில் காணப்படும் மூலக்கூறுகள் பெரும்பாலும் ஏனைய போதைப்பொருட்களின் மூலக்கூறுகளுக்கு ஒத்ததாக செயற்படக்கூடியனவாகவும் மூலக்கூறு கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டனவாகவும் காணப்படும். இவ்வகையிலான போதைமருந்துகளுக்கு உதாரணமாக செயற்கை கஞ்சா, மற்றும் ஐஸ் என்றழைக்கப்படும் மெத்எம்படமின் கிரிஸ்டல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

### 1.1.8. Anabolic Steroids – தடைசெய்யப்பட்ட ஊக்கிகள்.

இந்த தடைசெய்யப்பட்ட ஊக்கிகள் பெரும்பாலும் விளையாட்டுத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன. இவை விளையாட்டு வீரர்கள் பருகக்கூடிய பால் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானங்களில் கலக்கப்பட்டிருக்கும். இவற்றை பயன்படுத்துவதால் அவர்களது உடம்பின் கலங்கள் புரதச்சத்தை தேக்கிவைத்து குறுகிய காலத்தினுள் உடல் வளர்ச்சியை ஏற்படுத்தவல்லன. மேலும் இவற்றில் சில ஆண்மைத்தன்மைக்குரிய ஹோமோன்களாகவும் காணப்படுவதால் அதீதமானதொரு பலத்தை விளையாட்டு வீரர்களில் ஏற்படுத்த சந்தர்ப்பம் இருக்கின்றது. எனவேதான் இவை அனைத்தும் விளையாட்டு வீரர்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வகையிலான மருந்துகளை பயன்படுத்துவதன் காரணமாக ஈரல், இருதயம், சிறுநீரகம சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் புற்றுநோய், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இவ்வகையிலான மருந்துகள் பெரும்பாலும் இளைஞர்களாலேயே துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றது. மேலும் இவற்றின் நீண்டகால பயன்பாடானது உளரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்தவள்ளன. இவையும் அடிமைத்தன்மையை ஏற்படுத்தகூடிய மருந்துகளாகவே காணப்படுகின்றது.

## 1.2 போதைப்பொருள் பயன்பாட்டை வைத்து பயன்பாட்டாளர்களை வகைப்படுத்தல்.

போதைப்பொருள் பயன்பாட்டை வைத்து பயன்பாட்டாளர்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும். 1. பயன்படுத்தாதவர். (Nonuser)

2. பயன்படுத்துபவர். (User)
3. தவராக பயன்படுத்துபவர் (Misuser)
4. கட்டுப்பாட்டை மீறி பயன்படுத்தக்கூடியவர். (Abuser)
5. அடிமையானவர். (Addicted)

### 1.2.1 பயன்படுத்தாதவர் (Nonuser)

இவ்வகையினர் தற்போதைக்கு போதைப்பொருள் பயன்படுத்தாத நபராவார். மேலும் எதிர்காலத்தில் இவ்வகையினர் போதைப்பொருள் பயன்படுத்துபவராக மாறக்கூடும். பெரும்பாலும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் கடத்தல்காரர்களின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இவ்வகையினரே காணப்படுகின்றனர். இவ்வகையினரை பாவனையாளர்களாக மாற்றுவதற்காக பல உத்திகள் கையாளப்படுகின்றன. எமது எதிர்கால சந்ததியை போதைப்பொருள் பாவனையில் இருந்து பாதுகாக்க வேண்டும் எனில் இந்த பயன்படுத்தாதவர்களை அதே நிலைமையில் தக்கவைக்க முயற்சிப்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருள் தடுப்பு என்பது இந்த பகுதியினருக்கு கட்டாயமாக தொடர் முறையில் செய்தல் அவசியமாகும். தவறும் பட்சத்தில் இவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தக்கூடியவர்களாக எதிர்காலத்தில் மாறிவிடுவார்கள்.

### 1.2.2 பயன்படுத்துபவர் (User)

இவ்வகையினர் சாதாரணமாக போதைப்பொருள் பயன்படுத்தக்கூடியவராவார். அதாவது தொடராக எந்நேரமும் தேவையுடையவாராக அன்றி எப்போதாவது ஏதும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம் இவர் போதைப்பொருட்களை பயன்படுத்துவார். திருமண வைபவங்கள் அல்லது விஷேட வைபவங்களில் மாத்திரம் போதைப்பொருளை பயன்படுத்தக் கூடியவர்களை நாம இந்த தலைப்பில் சேர்க்க முடியும். இவர்கள் போதைப்பொருட்களை பயன்படுத்தும் கால இடைவெளியானது மிகவும் அதிகமாக இருக்கும். அதாவது வருடத்தில் ஒருமுறையோ அல்லது சில முறைகளாகவோ மாத்திரமான பயன்பாடாகவே இருக்கும். இவர்கள் சில காலங்களின் பின்னர் தவறாக போதைப்பொருளை பயன்படுத்தக்கூடியவராக மாறும் சாத்தியக்கூறுகள் அதிகம். இந்த நிலையில் இவர்களது பயன்பாட்டை நிறுத்திக்கொள்வது மிகவும் இலகுவான ஒரு விடயமாகும். இந்நிலையில் உள்ளவர்கள் பெரும்பாலும் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட ஆனாலும் அனுமதிக்கப்பட்ட மதுசாரம் மற்றும் புகையிலை பொருட்களையே பயன்படுத்துவதால் இவ்வகை பயன்பாட்டை விட்டும் மீளும் பொழுது விலகலின் போது ஏற்படும் பிணி நிலைமையானது மிகவும் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும். இந்நிலமையில் இருக்கக்கூடிய ஒருவருக்கு சிகிச்சையளிக்க குடும்பத்தினரினால் கூட முடியும். இவர்களை ஏனைய படிகளுக்கு முன்னேற விடாமல் தடுத்துக்கொள்ள முயற்சிப்பது சாலச்சிறந்ததாகும்.

### 1.2.3 தவராகப்பயன்படுத்துபவர் (Misuser)

இவ்வகை பயன்பாட்டாளர்களது பாவணையின் இடைவெளியானது குறைவானதாக காணப்படும். பெரும்பாலும் மாதம் ஒருமுறையாவது பயன்படுத்தக்கூடியவராக காணப்படுவார். மேலும் தனது போதைப்பொருள் பயன்பாட்டுக்காக பொய் செல்லக்கூடியவராகவும் இவர் காணப்படுவார். பொதுவாக இந்த பொய்கள் தான் போதைப்பொருளை பயன்படுத்த பொருளீட்டிய முறைமையை மறைக்கக்கூடியதாகவோ அல்லது தமது பயன்பாட்டை நியாயப்படுத்தக் கூடியதாகவோ இருக்கும். உதாரணமாக "இன்று குடிப்பதற்கு நான் செலவளிக்கவில்லை, எனது நண்பன் தான் சகல செலவுகளையும் செய்தான்". அல்லது "நான் இன்று குடிக்க நினைக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் நண்பர்கள் வற்புறுத்தியதால் நட்புக்காக குடித்தேன்'' போன்றவற்றை குறிப்பிடமுடியும். இவ்வகை பயன்படுத்துனர்களை சரியான முறையில் அணுகுவதன் மூலமும் போதைப்பொருள் பற்றி அவர்களது உள்ளத்தில் இருக்கக்கூடிய பிழையான கருத்துக்களையும் புலக்காட்சிகளையும் மாற்றியமைப்பதன் ஊடாக நல்ல நிலைக்கு கொண்டுவரக்கூடிய நிலமை காணப்படுகின்றது. இவ்வகையினர் இனங்காணப்படுமிடத்து தொழில் வாய்மையான உளவளத்துணையாளர் ஒருவரை நாடுவதன் மூலம் அவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியும். தவறும் பட்சத்தில் அல்லது அவர்களது பாவணைக்காக அவர்கள் கூறும் பொய்யான வார்த்தைகளுக்கு ஏமாறுமிடத்து இவர்கள் மிகக்குறுகிய காலத்திற்குள் போதைப்பொருட்களை கட்டுப்பாடின்றி பயன்படுத்தக் கூடியவர்களாக மாறிவிடுவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகின்றது.

### 1.2.4. கட்டுப்பாட்டைமீறி பயன்படுத்துபவர். (Abuser)

இவ்வகையினர் போதைப்பொருள் பயன்படுத்தும் கால இடைவெளி குறைவாக காணப்படும். பெரும்பாலும் வாரத்தில் இரண்டு மூன்று தடவைகள் இவர்களுக்கு போதைப்பெருள் பயன்படுத்தும் தேவை உடையவர்களாக இருப்பர். தான் போதைப்பொருளின் பாதிப்பிற்கு உட்பட்டிருக்கின்றோம் என்ற சிறந்த அறிவை கொண்டிருப்பர். அதாவது எனது போதைப்பொருள் பாவணையானது சிறிது சிறிதாக அதிகரித்து வருகின்றது என்பதையும் தான் இதன் மூலம் பாதிப்பிற்கு உட்பட போகின்றேன் என்ற அறிவையும் கொண்டிருப்பர். இவ்வகையினருக்கு தனது போதைப்பொருள் பாவனையிலிருந்து வெளிவருவதற்கான தேவை காணப்பட்டாலும் அதிலிருந்து வெளிவர முடியாதவர்களாக இருப்பார்கள். இவ்வகையினர் தொடர்ந்தும் சில நாட்கள் இந்த போதைப்பொருள் பயன்பாட்டை தொடரும்போது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாக மாறிவிடுகின்றனர். இவர்கள் தமது போதைப்பாவனையை விட்டு விலகும் சந்தர்ப்பத்தில் பல உடல் உள ரீதியிலான பிரச்சினைகளுக்கு சில நாட்கள் முகம்கொடுக்கவேண்டி ஏற்படலாம்.

### 1.2.5. அடிமையானவர் (Addicted)

இவ்வகையினர் தான் விழித்தெழுந்தது முதல் தூக்கத்திற்கு செல்லும் வரை பயன்படுத்தும் போதைப்பொருளை பற்றி மாத்திரமே சிந்திக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இச்சிந்தனைகளானது குறித்த போதைப்பொருளை எங்கு பெற்றுக்கொள்ள முடியும் அதை பெற்றுக்கொள்வதற்காக எவ்வாறு பணம் ஈட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் போன்றவை சம்பந்தமானதாக இருக்கும். இவ்வகையினருக்கு மூளையில் டோபமின் எனப்படும் மகிழ்ச்சிக்கு சொந்தமான சுரப்பு சுரக்காமையினால் போதைப்பொருள் இல்லாவிடின் மிக சோகமானவர்களாக காணப்படுவார்கள். இவர்களுக்கு சாதாரண மனிதர்களை போன்று தனது குடும்பம், குழந்தைகள், சமூக அந்தஸ்த்து, சுய சுத்தம், அன்றாட வேலைகளும் பொறுப்புக்களும் போன்றவிடயங்கள் குறித்து எந்தவிதமான சிந்தனையும் காணப்படமாட்டாது. இவர்கள் போதைப்பொருள் பாவனைக்காக வேண்டி எப்படிப்பட்ட தியாகங்களையும் செய்யத் தயாரானவர்களாகவும் சில சந்தர்ப்பங்களிலே போதைப்பொருளுக்காக வேண்டி தனது உயிரை கூட துச்சமாக எண்ணி வேலைகளை செய்யக்கூடிய தன்மையும் காணப்படும். கொலை, கொள்ளை, களவுகள் போன்ற சட்டவிரோத செயல்களை கூட பணமீட்டுவதற்காக செய்வார்கள். இவ்வகையினருக்கு சாதாரண மனிதர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அறுசுவை உணவுகள், பொழுதுபோக்குகள், பாலியல் உறவு போன்ற விடயங்களில் கூட எந்தவித நாட்டமோ மகிழ்ச்சியோ இருக்க மாட்டாது. பெரும்பாலும் தனிமையை விரும்பக்கூடியவர்களாக இருப்பார்கள். தொழில்களில் ஈடுபாடும் இவர்களுக்கு காணப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலில் ஆரம்ப இரு கட்டங்கள் தவிர்ந்த ஏனையவர்கள் கட்டாயமாக ஒரு தொழில் வாண்மையான உளவளத்துணையாளர் அல்லது உளநலமருத்துவர் ஒருவர் மூலம் சிகிச்சையளிக்கப்படல் வேண்டும்.

M.M.G.B.M.றஸாட்
உதவி போதைப் பொருள் கல்வி மற்றும் தகவல் அதிகாரி
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலையத்தின் கலாசார அபிவிருத்திக் குழு



(இ.வ-1) ஜுல்பிகா ஷரீப், ஏ.எல்.ஐ.ஹுஸைஸன், ஐ.எல்.நெய்னா முகம்மட், ஏ.எம்.ஏ.சமட், ஐ.எல்.றிஸ்வான், எம்.எம்.நஸீர்(பி.செ) ஏ.ஆர்.எம்.சாலிஹ். எம்.எச்.ஏ.கரீம், ஏ.எம்.பாறூக்.
(இ.வ-2) ஏ.பி.ஜெஸீமா, எம்.ஏ.எம்.ஹைதர், ஏ.எஸ்.எம்.முர்ஸித், எம்.ஐ.எம்.றபீக், ஏ.ஆர்,ஏ.நபாயிஸ், எம்.எம்.முகம்மட் ஹஸினி, எம்.ஐ.ஹைறுன்னிஸா, எம்.எம்.விஜிலி, ஏ.ப்துல் கபூர் (ab)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலையத்தின் விழாக் குழு - 2019



(இ.வ-1) எம்.எம்.விஜிலி, எஸ்.எல்.எம்.ஜலாலுத்தீன், ஜுல்பிகா ஷரீப், ஏ.எல்.ஐ.ஹுஸைன், ஐ.எல்.நெய்னா முகம்மட், ஏ.எம்.ஏ.சமட், ஐ.எல்.றிஸ்வான், எம்.எம்.நஸீர் (பி.செ), ஏ.ஆர்.எம்.ஸாலிஹ், எம்.எச்.ஏ.கரீம், ஏ.எம்.பாறுாக், எஸ்.எல்.அஸீஸ், எம்.ஏ.எம்.ஹைதர், (இ.வ-2) எம்.ஏ.மாஹிறா, எம்.எச்.பௌசுல் ஹிபானா, ஏ.பி.ஜெஸீமா, எம்.ஆர்.காமில் பயாலஸ், ஏ.எஸ்.எம்.முர்ஷித், எல்.பிரதீபன், பி.எம்.நிஸாம், எம்.ஐ.எம்.றபீக், ஏ.எல்.எம்.சினாஸ், ஏ.எம்.எம்.றியாஜத், ஏ.ஆர்.எம்.நபாயிஸ், எம்.எம்.முஹம்மட் ஹஸினி, எம்.ஐ.கைறுன் நிஸா, ஏ.ஜி.சித்தி பாஜியா, எஸ்.யஸ்மின் இஸ்ஸத், ஏ.அப்துல் கபூர் (ab)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்கள் - 2019



(இ.வ) திருமதி ஏ.ஜி.சித்தி பாஜியா, திரு எல்.பிரதீபன், ஜனாப் பி.எம்.நிஸாம், அல்-ஹாஜ் எம்.எம்.நஸீர் (பிரதேச செயலாளர்) ஜனாப் ஐ.எல்.றிஸ்வான் (நிலைய பொறுப்பதிகாரி), ஜனாப் எம்.ஏ.எம்.ஹைதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலைய வளவாளர்கள் - 2019



(இ.வ) திருமதி பி.ஜெயகணேஸ், ஜனாப் எம்.எம்.மிஹ்ஸார், ஜனாப் எம்.ஐ.எம்.சுல்பிகார், அல்-ஹாஜ் எம்.எம்.நஸீர் (பிரதேச செயலாளர்), ஜனாப் ஐ.எல்.றிஸ்வான் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்), எம்.ஏ.எம்.மர்சூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசூரியர்கள்



இருள்கொண்ட உலகிதனை....
கிழித்து....
உருண்டையாய் நின்று
ஒளி சிந்தும்
உதய சூரியர்கள்....
எமது ஆசான்கள்....!

எதுவும் புரியாத
சின்னச் சிட்டுக்களது....
அறியாமை இருளகற்றி....
கல்வி இறக்கைகளைப் பூட்டி....
இயன்றவரை பறந்திட....
பாதை வகுப்பவர்....
எங்களது ஞான சூரியர்கள்....!

கலங்கிய நீர்ச்சுனைகளாய்....
தெரியாதவை....!
தெரிந்தவையாய்....
அறிவுத்திக்கினைக் காட்டும்....
திரும்பிப்ப பார்க்க வைக்கும்.......
திங்களும் நீங்களே....!

வீட்டிலிருந்து விக்கி....
விழுந்து, எழுந்து வந்தோம்....
நாட்டிற்குகந்த நற் பிரஜைகளாய்....
ஆக்கி நீங்கள்....
காட்டிய அறிவுலகம்....
காலத்தால் அழியாது....!

ஏட்டினை ஏந்தும் போதும்....
இருவிழிகள் செலுத்தி....
பாட்டிலும்.... படிப்பிலும்....
பண்புகள்சார் விருத்தியிலும்....
தீட்டிய பட்டைகள்....
இன்று வைரங்களாக....
பலர்....

"எழுத்தறிவித்தவன்....
றைவனென்பார்....!"
எப்போதும் இல்லை....
சந்தேகம்....!
பழுத்த கருத் திதற்கு....
சொந்தக்காரரரே....
ஆசிரியர் நீங்கள்தான்....!

கழுத்தினை நெரித்திடும்....
கஷ்டங்கள்....கவலைகள்....
இழுத்து நின்றாலும்....
நேரத்தோடு வருகை....
நேரசூசிப் பளு....
பாடத் திட்டம்.... பாடக் குறிப்புகள்...
கணிப்பீடுகள்... மதிப்பீடுகள்....
அலகு, தவணைப்பரீட்சைகள்....
புத்தகங்கள் பகிர்வு....
சீருடைக்கான முத்திரைகள்....
விநியோகம்.....
களப் பயணங்கள்....
காரியாலய கெடுபிடிகள்....
ஐயஹோ...
எத்தனை கடுகதி ஓட்டங்கள்....?!
இத்தனைக்கும் நடுவே....
ஏற்றிடும் கல்வித் தீபமோ....
கனதியானது....!

வாழ்வில் பல வடிவங்களாய்....
வார்த்து அழகு பார்த்து....
தாழ்வின் சுவடின்றி....
தலை நிமிர்த்திடும்....
ஆழத்தில் முத்தெடுத்து....
சமூகத்திற்கு...
அர்ப்பணித்து....
ஆனந்திக்கும்....
உங்களோடு....

சில சில்லறை வாத்திமாரை...
சேர்த்துவைத்து பேசுகையில்....
சிந்தையோ அழுகிறது....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்.... ஆசு + இரு + அர்....
அண்டியிருக்கும்....
குற்றங்களை....
இருக்குமிடத்திலிருந்து....
இல்லாமல் செய்பவர்....
ஆமாம்....
அப்படியே அகற்றிவிடுபவர்....!

இதற்காகவே....
"கல்விக்கு உயிர் கொடுப்போர்
மரணிப்பதில்லை..."

"கற்பவனாக இரு.... அல்லது....
கற்பிப்பவனாக இரு.... அல்லது....
கற்பவனுக்கு உதவுவனாக இரு....
நான்காவது ஆளாக இராதே....!"

கண்மணி நபிகளார்....
கவின்றார்கள்...!

"ஆசிரியர் என்பது..."
உயர்திறன் வாய்ந்த தொழில்....
ஆசிரயர்.... ஆட்சேர்ப்பு...
அவசியமானதே...!
தவிர...
கையாகாவர்களின்...
குப்பைக் குழிகளல்ல...!
நினைவில் வைப்போம்....!

எங்களது நாடிகள்....
நாடிகள்.... நாளங்கள்....
நரம்புகளெல்லாம்....
ஓடிக்கொண்டிருக்கும் குருதிகள்
கூட....
நன்றியுணர்வோடு
நின்று புன்னகைக்கிறது....
உங்களை நினைத்து....!

உச்சத்தில் ஏற்றிவைத்து....
மெச்சி மகழ்கின்ற....
நட்சத்திரக் கனவுகள்....
நள்ளிரவுச் சூரியர்கள்....!

கரும்பலகை....
வெண்கட்டிகள்....
கடதாசி, சீலை அழிப்புகள்....
கதைகள் சொல்லும்....
உங்களுகளுக்காக....!

தொண்டைக் குழிக்குள்....
கடைசிச்சொட்டு நீரும்....
வற்றிப்போக....
சிந்தை....
உண்டதை எல்லாம்....
கொட்டி.... நட்டு....
வானத்தையும்....
எட்டிப் பிடிக்கவைக்கும்....
ஏணிகள் இவர்கள்....!

ஆசிரியம் ஓர்....
ஆச்சரியம்...!
பேசும் வரையில்
பேசுவோம்....
அவரை நாளும்....!
வாசம் நுகர்ந்தவர்....
வாழ்த்துவோம் நாங்கள்....!

நீங்கள் பட்ட அவஸ்தைகளை....
ஆனந்தங்களை....
நாங்கள் ஆசிரியரானபோது...
உணர்ந்தோம்....!
பனிக்கிறோம்...
கண்ணீர் துளிகளை....!
பல்லாண்டுகள் வாழ்கவே....!

----"தேசமானிய, கலாரெத்னா..."
கல்முனை ஜுல்பிகா ஷெரீப்----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வறுமைத் தணிப்பும் சமுர்த்தி சமூக அபிவிருத்தியும்

ஏ.ஆர்.எம்.சாலிஹ் சிரேஷ்ட தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர்.

வறுமையை ஒழிப்பதற்காக இலங்கையின் முன்னைய அரசாங்கங்களினால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1944 ல் கூப்பன் வழங்கப்பட்ட திட்டமும் 1978 இல் உணவு முத்திரை திட்டமும், 1989 ல் ஜனசவியத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனால் வறுமை ஒழிக்கப்பட்டதாக இல்லை. வறுமையினை ஒழிக்க வேண்டுமாயின் நல்ல திட்டம், போதியளவு நிதிவசதி ஆகிய இரண்டும் தேவையாகும். இவை இரண்டையும் கொண்டதாக 1994 இல் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டம் கானப்படுகின்றது.

சுபீட்சமுள்ள தேசத்தினை கட்டியெழுப்பும் நோக்கில் வறியநிலையிலுள்ள பெண்கள், சிறுவர், இளைஞர், யுவதிகள் முதியோர்கள் ஆகியோரின் சமூக நலன் மற்றும் பொருளாதார அபிவிருந்தி இலக்கைக் கொண்டதாக சமுர்த்தித் திட்டம் காணப்படுகின்றது. இதன் கீழ் 19 இலட்சம் குடும்பங்கள் நேரடியாக தொடர்புபட்டு நன்மை அடைகிறார்கள். தற்போதைய அரசு மேலும் 6 லட்சம் குடும்பங்களை இத்திட்டத்தில் உள்வாங்கியுள்ளது.

வறுமைப்பட்டவர்களின் குடும்பங்களை சுபீட்சமுள்ள குடும்பங்களாக மாற்றும் நோக்கில் சமுர்த்தி திட்டமானது வாழ்வாதார அபிவிருத்தி, ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி, மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகிய மூன்று அபிவிருத்தியையும் கொண்டுள்ளது. வறிய குடும்பங்களின் சமூக அபிவிருத்தியை மேம்படுத்தி அன்பும் கலையழகும் நிறைந்த கிராமம் ஒன்றினை உருவாக்கும் பொருட்டு இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நாட்டில் இருந்து வந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் பொருளாதார தரத்தினை உயர்த்தும் உதவிகளை மட்டுமே வழங்கியது. ஆனால் ஒரு குடும்பத்தினை வறுமையிலிருந்து நீக்குவதென்றால் ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2030 ம் ஆண்டாகுமிடத்து வறுமை நிலையற்ற சுபீட்சமிகு இலங்கையினை உருவாக்குவதற்காக செய்யப்படும் முன்னோடி நிறுவனமொன்றாகத் திகழ்வதும் சமுர்த்தி அபிவிருத்தி தினைக்களத்தின் நோக்கமாகும். அதன் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டும் பொருட்டு சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2030 ம் ஆண்டில் சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் முகங்கொடுக்கும் சமூக, உடல் மற்றும் உள ரீதியான பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு அப்பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு கூட்டு முயற்சியொன்றாக செயற்படுத்துவதற்கு நவீன சமூக விரிவாக்கத்தின் முன்னால் மறைந்து செல்கின்ற கலாசார மற்றும் இலக்கிய பெறுமானங்களை பாதுகாக்கும் நோக்கில் சிறார்களின் இலக்கிய மற்றும் கல்வியல் ரீதியான மேம்பாட்டினை இலக்கிட்டு சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கும் வேலைத்திட்டங்கள் திட்டமிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதனூடாக பின்வரும் பணிகள் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

01. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு, வீட்டு முகாமைத்துவ மற்றும் மகிழ்ச்சியாக குடும்ப வேலைத்திட்டம்.
02. "திரியபியச" வீடமைப்பு வேலைத்திட்டம்
03. சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழக கலாசார வேலைத்திட்டம்.
04. சமுர்த்தி பயனாளிகள் உடல், உள நல வேலைத்திட்டம்.
05. கடற்கரைச் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டம்.

ஒரு குடும்பத்தினை மகிழ்ச்சியுடையதாகவும் வறுமை நிலையிலிருந்தும் விலக்குவதாயின் அக்குடும்பத்தில் உள்ளவர்கள் விலக்கத்தக்க செயற்பாடுகளான போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனை, வீட்டுவன்முறைகள், சிறுவர்களுக்கான துஷ்பிரயோகங்கள் அகற்றப்பட்டு ஆத்மீக விருத்தியை ஏற்படுத்தி சமயத்தலங்களுடன் மக்களை ஒன்றினைப்பதன் மூலம் அன்பும் அழகும் கொண்ட குடும்பத்தினை உருவாக்க முடியும். என்பது சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று இலங்கையில் போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையானது வறியகுடும்பங்களில் அதிகளவு காணப்படுகிறது. இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 6000 க்கு மேற்பட்ட பணத்தினை செலவு செய்கிறார்கள். இந் நிலையானது குடும்பங்கள் தொடர்ந்தும் வறுமையில் இருப்பதற்கு காரணியாக அமைகிறது.

இவ்வாறான குடும்பங்களின் வறுமையை போக்குவதற்கு வாழ்வாதார உதவிகள் மட்டும் போதாது. இதனால்தான் சமூக அபிவிருத்தி பிரிவினூடாக இக் குடும்பம் வழிநடாத்தப்பட்டு இத் தீங்கிலிருந்து விலக்கப்பட்டு போதையற்ற வீட்டினை உருவாக்க முடியும். இப்போதையற்ற குடும்பங்கள் பின்னர் போதையற்ற கிராமமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைகிறது. இந்த இலக்கை அடையும் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பின்வரும் செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றது.

- ✦ போதைப் பொருள் பாவனை, விநியோகம், அதற்கான கேள்வித்தன்மை பற்றிய தகவல்களை பெறுதல்.
- ✦ சிறுவர் மற்றும் இளைஞர் குழுக்களை பண்பாடுள்ள போதை பொருள் நிவாரண செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல்.
- ✦ போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனைக்கான அங்கீகாரம் கிடைக்காத வகையில் மக்கள் அமைப்புக்கள் ஊடாக மக்களை விழிப்பூட்டல்.
- ✦ சிறுவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு எதிராக பெற்றார் அமைப்புக்களை தோற்றுவித்தல்.
- ✦ மதுபானம், புகைபிடித்தல் பாவனையில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பவர்களை விடுவிப்பதற்கான முறையான செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தல்.
- ✦ புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அங்கீகார சபை சட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்தச் செய்வதற்கு மக்களை விழிப்பூட்டல்.
- ✦ மேலும் புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வதை வெறுக்கக்கூடிய வியாபாரிகளை உருவாக்குதல்.

மேலும் குடும்பத்தில் நாளைய சந்ததிகளாக (சமூகத் தலைவர்களாக) சிறுவர்கள் கருதப்படுகிறார்கள். அவர்களை நல்லொழுக்கமுள்ளவர்களாக மாற்ற வேண்டிய பொறுப்பு சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவுக்குக் காணப்படுவதை உணர்ந்து ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் ஒவ்வொரு சிறுவர் கழகம் உருவாக்கப்பட்டு அதனூடாக அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற கலை, கலாச்சார திறன்களை விருத்தி செய்யவும் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளவும், சேமிப்பினை ஊக்குவித்து அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதன் ஊடாக நற்பண்பும், நல்லொழுக்கமுள்ள சிறுவர் சமூகம் உருவாக்கப்படுகிறது.

மக்களின் சமூக மற்றும் கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் பொருட்டு அவர்களை சாதாரண வாழ்க்கைக்கு பழக்கப்படுத்துவதன் மூலம் சுகாதார வசதியுள்ளவர்களாக மேம்படுத்துகின்றது. சரியான போசனையுள்ள உணவு வகைகளை உட்கொள்ளவும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசனை மற்றும் உணவு ஆரோக்கியம் தொடர்புடன் கூடியதான வேலைத்திட்டத்தினூடாக சமூக கலச்சார விழுமியங்கள் வறிய குடும்பங்களிடையே உயர்த்தப்படுகிறது.

சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு 'சிசுதிரிய' எனும் பெயரில் புலமைப்பரிசில் திட்டமும் செயற்படுத்தப்படுகிறது. இதற்கான நிதியம் பிரதேச தனவந்தர்களிடமிருந்தும் மற்றும் பிரதேச மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் நிதியில் இருந்தும் பெறப்பட்டு வழங்கப்படுகிறது. இதனூடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கல்வி எதிர்காலம் பாதுகாக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக விளையாட்டில் அவர்களின் தேசிய ரீதியான அடைவுகளுக்காகவும் சமுர்த்தி திணைக்களத்ததில் இருந்து வருடாந்தம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. இதனூடாக அவர்களின் விளையாட்டுத் திறன் ஊக்குவிக்கப்படுகின்றது. மேலும் சிறார்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் பொருட்டு சிறுவர் கழக நூலகங்கள் உருவாக்கப்பட்டு அதற்கான நூல்கள் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

இளைஞர்கள் குடும்ப அபிவிருத்தியில் பங்கெடுக்கும் நோக்கிலான வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு, நல்லொழுக்கங்களை உருவாக்குதல், மற்றும் தொழில் வழிகாட்டல் ஊடாக சிறந்த திருமண வாழ்க்கைக்கு அவர்களை ஆயத்தப்படுத்தல் என்பன செயற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு ஒரு குடும்பத்தின் வறுமை ஒழிப்பு செயற்பாட்டிற்கு எதுவெல்லாம் தடையாக உள்ளதோ அவற்றை இனங்கண்டு அதற்கான சிறந்த நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக நீக்கிவிடுவதுதான் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டமாகும்.

வறுமையான குடும்பங்கள் சமூகத்திலிருந்து பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். இதனால் அவர்களின் வீடுகளில் பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கும். மேலும் குடும்ப அங்கத்தவர்களிடையே சிறந்த தொடர்பாடலின்மை குடும்ப மகிழ்ச்சியைக் கெடுத்துவிடுகிறது. மேலும் குடும்பத்தில் ஆண், பெண் சமநிலை காணப்படாத காரணத்தினால் ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையும் தோன்றுகின்றது. இவ்வாறான நிலையில் உள்ள குடும்பங்களை இனங்கண்டு அவர்களிடையே புரிந்துணர்வையும், நல்ல தொடர்பாடல் முறைகளையும் கற்றுக் கொடுப்பதன் மூலம் பிரச்சினையை எல்லோரும் எதிர் கொள்ளும் சக்தி உருவாக்கப்படுகின்றது. இதனால் குடும்பத்தின் வறுமையான நிலையில் இருந்து நீங்கிவிட முடியும். இவ்வாறான செயற்பாடுகளை சமூக அபிவிருத்தி பிரிவு மேற்கொண்டு வருகின்றமை சிறப்பம்சமாகும். சிலர் தங்களது பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதவர்களாக தற்கொலை முயற்சிக்கு செல்கின்ற நிலையினை தடுக்கும் பொறுப்பு சமூக அபிவிருத்தி பிரிவுக்கு உண்டு. இதனடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு உளவளத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஊடாக நல்ல பல ஆலோசனைகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு தடைகளும் நீக்கப்படும் போதுதான் மகிழ்ச்சி மிக்க குடும்பத்தினை உருவாக்க முடிகிறது. இதனூடாக வறுமை ஒழிப்புத் திட்டத்தினை வெற்றியடையச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு மிகவும் கவர்ச்சியான ஒரு வேலைத்திட்டமாக "திரியபியச" வீடமைப்புத் திட்டம் செயற்பட்டு வருகிறது. வீடு ஒன்றினை அமைத்து கொள்வதில் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ள கணவனை இழந்த பெண்கள், அங்கவீனமுற்றவர்கள், காணியுள்ள நிலையில் பாதுகாப்பற்ற வீடில்லாத சமுர்த்தி குடும்பம், அதிக பெண் பிள்ளைகள் அல்லது மாற்றுத் திறனாளியுள்ள குடும்பம், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பம் எனும் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் அமைக்கப்படுகிறது. இதனூடாக வீட்டினை அமைக்க முடியாத சமுர்த்தி குடும்பங்கள் பல இத்திட்டத்தின் ஊடாக பயன் பெறுகிறது.

மேலும் குடும்பங்களிடையே வீட்டு முகாமைத்துவ வேலைத்திட்டம், வீட்டுத் தோட்ட அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு பிரதேச செயலகம் தோறும் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுர்த்தி பயனாளி ஒருவரை தலைவராக கொண்டுள்ளதுடன் அனைத்து சமுர்த்தி சமுதாய அமைப்புக்களையும் உள்வாங்கிய சபையாக காணப்படுகிறது. இச்சபையினூடாக நிதியைப் பெறவும் செலவு செய்யவும் அதிகாரம் உண்டு. இதற்காக அதிகமான நிதி புகைத்தல் எதிர்ப்பு கொடிவாரத்தின் மூலம் பெறப்படுகிறது. இவ் அமைப்பு முழுக்க முழுக்க சமுர்த்தி பயனாளிகளை நிர்வாக உறுப்பினர்களாக கொண்டு செயற்படுகிறது. நிதிகளை கையாளுகின்ற பொறுப்பும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களது கணக்கு நடவடிக்கைகள் சமுர்த்தி வங்கிச் சங்கத்தினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் கண்காணிப்பும் செய்யப்படுகிறது.

சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றமானது சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொறுப்பு வாய்ந்த செயற்பாட்டில் தங்கியுள்ளது. இத்திட்டங்களைய் வறிய மக்களை இலக்காக் கொண்ட முழுமையான சமூக மாற்றத்தினை எதிர்பார்க்க வேண்டுமாயின் ஒரு பிரிவில் வாழும் அனைத்து குடும்பங்களையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். இதற்காக 'ஜனசபா', இளைஞர் குழுக்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் சிறுவர் குழுக்கள், சிறுவர் கழகங்கள் பிரிவிலுள்ள அரச உத்தியோகத்தர்களினதும் சிரேஷ்ட பிரஜைகளினதும் ஒத்துழைப்பினை பெற்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கடற்கரை பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தூய்மையான ஒரு கடல் எனும் தொனிப் பொருளின் கீழ் இலங்கை சமுத்திரவியல் பாதுகாப்பு அதிகார சபையின் இணக்கப்பாட்டுடன் கடற்கரையினை பாதுகாப்பதற்காக சமுர்த்தி பயனாளிகளை ஈடுபடுத்துவதன் ஊடாக நாளாந்தம் கடற்கரைப் பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டு அழகுபடுத்தப்படுகின்றன.

ஏ.ஆர்.எம்.சாலிஹ்
(சிரேஷ்ட தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர்)
பிரதேச செயலகம்
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிஞர் விஜிலியின் இரண்டு கவிதைகள்

### தலைகீழாய் ஒரு கனவு

ரகசியங்களைக் கோர்த்தபடி
நீண்டு மறைகிறது
ஒற்றையடிப்பாதை
கலப்படமற்ற முட்களை
சிலர் தூவிச் செல்வது
தெரிகிறது
கடிவாளம்
இன்னும் இறுக்கப்பட்டிருக்கிறது

இருட்டு:
தெளிவு தேசத்திலும்
இருட்டு :
கொடுந்தணல்
பற்றி எரிகின்றது
சிலர் இதயக் கீறல் போல :

ஒடுங்கிய பாதையினூடே
கால் விலங்குகள்
பூட்டப்படும் சத்தம்
எனக்குள் கேட்கின்றனவே :

அசந்து போய் கண்விழித்தேன்
உணர்வும் சுதந்திரமும்
தொங்கிக் கொண்டிருந்தன
தலை கீழாய்

நேரம் : காலை **6.20** மணி
***2019.10.19***

### காடுகளின் மௌனம்

காட்டின் கதவுகளை
யாரும் திறப்பதில்லை

மனிதனின் கனவுகளை
காடுகள் ஒரு கணமும்
தட்டி எழுப்புவதுமில்லை :

மனிதனைவிட
அதிகம் மௌனமாய் இருப்பது
காடுகள்தான்.

அடந்து -
முடங்கிப் போனாலும்
தானாக தலைநிமிர்ந்து நிற்பது
காடுகளே!

வேர்கள் ஒரு போதும்
சண்டையிடுவதில்லை.
களைத்துப் போய் மனிதனிடம்
தண்ணீர் கேட்பதுமில்லை
காடுகள் மூடிய புத்தகம்
வாசித்து முடிக்காமலே
நடந்து முடிந்திற்று
பெரும் விஷப்பரீட்சை
மனிதா!

காடுகள் தானாகச் சரிவதில்லை
ஆனால் எரிந்து வீழ்வது
பூமியில் மனிதன் மட்டும்தான்

பிறேசில் தேசத்தில் அமேசன் காடுகள்
பற்றியபோது
என்னிலிருந்து எழுந்தவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தன்னையிழந்து மிதக்கிறது மனம்

வானமெங்கும் பறந்து திரியும் பனித் துளிகளில்
ஜொலிக்கும் மின்னொளியின் சுடர்
வானமெங்கும் பரவிக்கிடந்து
காலைப் புலர்வை உணர்த்திச் செல்கையில்...
சன்னமாய்த் தூறும் மெல்லிய மழைச் சாரல்களை
யாரோ ஒருவர் கூட்டிச் செல்கையில்
வானமெங்கும் படபடத்தும் பறந்து
காட்சிக்குட்படாத பட்சிகளின் சிறகசைவை
மனக் கண்ணில் விரித்து வைக்கிறது....
விழுந்தெழும்பும் பறவைகள் மீன்களை
காவிச் செல்கின்றன கூடு நோக்கி...
வியாபித்துக் கிடக்கும் ஆரோக்கியங்களின் மருங்குகளில்
மெலிந்து கிடக்கும் சாலைகளின் ஏக்கத்தில்
மனதைப் பறிகொடுத்த நிலையில் தேகம் தள்ளாடுகிறது...

திசை மறதியில் எழுந்து பறக்கும்
பறவைக் கூட்டங்களின் குரல்களை பதியவிடுகையில்
என்னில் படர எத்தனிக்கும்
உவர் நீரத் திவலைகளில் மனம் நீந்திச் செல்கிறது...
காற்றசைவில் ஆடும் இலைகளின் மீது குந்தியிருக்கும்
நீர்க் குமிழிகளின் மாய்வின் உரு
நிழலின் திகிலில் காட்சிப்படுகிறது...
காற்றுக் கற்றைகள் பெரு வெளியெங்கும்
திரையிட்டுக் களிக்கையில் ஆற்றின் மேற்பரப்பில்
பழுத்த இலைகள் பல் நிறங்களை என் முன் விரிக்கையில்
சிறு மேனி கொண்ட இரு மீன்கள்
ஒற்றோடொன்று முத்தமிட்டுக் கொள்கின்றன...
எண்ணற்ற நிறங்களையணிந்து வட்டமிடும்
ஒற்றைப் பறவையின் சிறகிலிருந்து உதிரும்
உவகையின் நிழலில் சுகந்தம் குடி கொள்கையில்
கிளைகளுக்கிடையே விழும் வெளிச்சத் துளிகளில்
தன்னையிழந்து தவிக்கிறது மனம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாளரத்தின் தாரகையாய்

பேரன்பின் சேகரமாய் உன் மனம் தென்படுகையில்
பல் வர்ணங்களில் உன்னைத் தீட்டிக் கொள்கிறது மனது...
இரகசியக் குறியீடாய் உன் கன்னங்களில் வாழும்
குறு நகை உன் நெஞ்சத்து நேசத்தின் வெளிப்பாடுதானே...
உன் கண்களில் ஒளிந்திருக்கும் உருவம் நானென
கண் படபடப்பில் தினமும் சேதி சொல்கிறாய்...
மனதின் ஆழத்திலிருந்து எழும் எண்ணப் பந்தில்
எந்தப் பக்கம் நீ என்று சொல்லேன்....
கனவின் நித்தியத்துள் கண்கள் உறங்குகையில்
நேர்முன்னே பிரசன்னமாகின்றாய்...
தென்படலின் சாளரத்தின் தாரகையாய்
மினுங்கும் தருணங்களில்
என் கண்களில் வேர் உன்னில் ஆழப் பதிக்கிறது...
மனதின் சேர் பிளந்து காதல் துளிர்கையில்
என் மனம் மொழிகிறது உன் நாட்டத்தையே....
வெளிச்சப் புலமாய் வந்தமர்கையில்
பகல் வெளித் தூறலாய்
பரம்பிக் கிடக்கிறாய் என் தேகமெங்கும்...
அந்தரங்கமாய் அகத்துள் நீ தவழும் கணங்களில்
பருவங்களில் நிகழும் எல்லாம்
உயிர்த்தெழுகிறது மேனியெங்கும்...
மென் காற்றாய் ஆடி அசைந்து நம் மேனிகள்
ஒன்றோடொன்று இணையத் தொடங்குகையில்
எல்லாமுமாய் மனதில் நிகழ்கிறது
நிஜத்தில் நிகழ்வது போல்...

ஜனாப். எம்.எம்.நௌபல்,
நிதியமைச்சின் மேலதிகாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுற்றாடல் சீர்கேடு

மனித வாழ்வு பல்வேறுபட்ட செயற்பாடுகளால் ஆனது. செயல்கள் தன்னையண்டிவாழும் மனிதனுக்கு தீமை பயக்காததாக அமைய வேண்டும். ஒருவரின் செயல் அவரை உயர்ந்தவராகக் காட்ட வேண்டும்.

இழிந்த செயல்களின் மூலம் மனிதன் வேதனைப் படுத்தப்படுவதை மனிதவர்க்கத்தைப் படைத்த இறைவன் ஏற்பதில்லை. இறைவன் பார்வையில் அனைத்தும் சமமே. ஒரு சிறு உயிரும் பாதிப்படைவதை இறைவன் பொறுப்பதில்லை. இதை உணர்த்தவே தண்டனை தருகின்றான். நஷ்டத்தை ஏற்படுத்துகின்றான்.

இறைவனை நேசிக்கும் மனிதன் அவன் படைத்த உயிர்களையும் நேசிக்க வேண்டும். பகுத்தறிவும், சிந்தனை சக்தியும் பெற்ற மனிதன் அதனைத் தன் வாழ்வுக்கே பயன்படுத்தி பிறரை நிந்திக்க முற்படும் இழி செயலையே செய்கின்றான்.

மனித சமூக விழுமியங்களை உதாசீனம் செய்து மானிட தார்மீக உரிமைகளை அவமதித்து தான் மட்டுமே நிம்மதியாக வாழ வேண்டும் என்ற அவாவுடன் வீதியோரங்களில் உள்ள தமது நிலத்தில் நிரந்தரக் கட்டிடங்களையும் சுவர்களையும் தமது சுய தேவைக்காக அமைக்க அழகான வீதியையும், வடிகான்களுக்கான நிலப்பரப்பையும் அபகரிக்கின்றான். இதனால் சுற்றாடல் மாசுபடுத்தப்பட்டு நகரத்தின் அழகும் அமைப்பும் அலங்கோலப்படுத்தப் படுகின்றன.

மருதமுனை வேகமாக வளர்ந்துவரும் நகரம். நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் இங்குள்ளன. அயற் கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தினம் தினம் இங்கு வந்து தமது அனைத்துத் தேவைகட்குமான பொருட்களைப் பெற்றுச் செல்கின்றனர். தூர இடங்களிலிருந்து சொந்த வாகனங்களில் வந்தும் பொருட்களைக் கொள்வனவும் செய்கின்றனர்.

மருதமுனையில் கிழக்கு மேற்காக அமைந்துள்ள பதினைந்திற்கும் மேற்பட்ட பாதைகள் பிரதான வீதியைத் தொடுகின்றன. மேற்குத் திசையிலிருந்து 10 சிறிய வீதிகளும் பிரதான வீதியைச் சந்திக்கின்றன. நகரத்தின் உள்ளக போக்குவரத்திற்கான எந்தப் பாதையும் அதற்கான நியம அளவுடன் காணப்படவில்லை. பல பாதைகள் ஒடுங்கி சந்து பொந்து போல் காட்சி தருகின்றன. இப்பாதைகளில் சிறிய வாகனங்கள் கூட ஒன்று மற்றொன்றிற்கு வழிவிட்டு விலகிச் செல்ல முடியாத நிலையே காணப்படுகின்றன.

பிரதான வீதியைத் தொட்டு நிற்கும் வீதியின் இருமருங்கிலும் கட்டப்பட்ட கட்டப்படும் கட்டிடங்கள் பாதைக்கு போதிய இடம் விடாமல் பாதையை விழுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. இதே நிலைதான் குறுக்கு வீதிகளிலும் காணப்படுகின்றன. இதனால் பாதைகள் ஒடுங்கிவிட்டன.

இவ்வாறான இழி செயல்களை படித்த, பாமரர், பணக்காரர், அதிகாரிகள் ஓதியுணர்ந்து ஊருக்கு உத்தேசிக்கும் உலமாக்கள் போன்றவர்களும் செய்துள்ளனர். ஏன்? நாடுவிட்டுச் சென்று நாகரீக நாடுகளையும், கட்டிடங்களையும், அமைப்புக்களையும் கண்டுவந்தவர்கள் கூட செய்துள்ளனர்.

ஊர்க்குருவிகள் உயரப் பறந்தாலும் பருந்தாவதில்லை என்பது போல் வெளிநாடென்ன? வேறு கிரகங்கட்குச் சென்று வந்தாலும் இவர்களின் எளிய அசல் மாறிவிடாது.

பொது மக்களின் அவலங்களைத் துடைக்க பணியாற்ற வேண்டிய அதிகாரிகள் கடமையுணர்வுடன் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி நேர்மையாக நடந்து தவறுகளைத் தடுக்க முன் வராமையினால் நகரச் சுற்றாடல் பாழ்படுத்தப்படுகின்றன.

சட்டங்களைப் புறந்தள்ளி கட்டிடங்களை அமைப்பவர்களை அதிகாரிகட்கு அறிவித்தால் அறிவித்தவர்களை தவறு செய்பவரிடம் காட்டிக் கொடுத்து பகைமையையும் குரோதத்தையும் வளர்த்துவிட்டு தமக்குரிய பங்கைச் சுருட்டிக் கொள்கின்றனர். இதனால் கண்முன்னால் நடைபெறும் மிகப் பாதிப்பான தவறுகளையும் சுட்டிக்காட்டுவதற்கு யாரும் முன்வருவதில்லை. சம்பிரதாயத்திற்காக கடிதங்களை அனுப்புகின்றனர். நேரிலும் பார்வையிடுகின்றனர். இவர்களின் கருத்தை ஏற்காது தவறு செய்பவர் தனது எண்ணத்தை நிறைவு செய்கின்றனர்.

அதிகாரத்திலுள்ளவர்கள் கட்டி வளைக்கப்படுவதால் அவர்கள் வழங்கும் ஆலோசனைகளால் தவறு தொடர்கிறது. வார விடுமுறை நாட்களிலும் அதிகாரி சொந்த லீவு பெற்றுக் கொண்ட நாட்களிலும் அதிகமான கூலியாட்களைப் பயன்படுத்தி தமது கட்டுமானப் பணியை முடித்துக் கொள்ளும் இவர்கள் தமக்குரிய நிலத்துண்டு முழுவதும் உள்ளடக்கி வீடு கட்டி வீட்டின் முன்னால் உள்ள பாதையில் நிலம் அபரித்து மதில் சுவரையும், வீட்டிற்குள் நுழையும் படிக்கட்டையும் அமைத்து விடுகின்றனர்.

குறுக்கு வீதிகளில் வசிப்பவர்களும் தம்மைப் போன்றே வீடுகள் நிருமாணிக்க கல், மண் போன்றவைகளை வாகனங்களில் எடுத்துச் செல்ல வழி விட வேண்டும் என்று இவர்கள் சிந்திப்பதேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளின் திறமையின்மை, அலட்சியப் போக்கு, அசமந்தம், ஆசை என்பன தவறுகளை ஊக்குவிக்கின்றன. தவறுக்கு துணை நின்ற அதிகாரிகள் செல்வாக்கையும், சொல்வாக்கையும் இழந்து பேசாமடந்தைகளாகி நிற்கின்றனர்.

ஒருவர் புரியும் தவறு பலருக்கு வழிகாட்டலாக அமைந்து விடுகின்றன. தவறு செய்தவரைப் பின்பற்றக் கூடாது என்று மனிதாபிமான உணர்வுடன் சிந்திக்க முற்படாமல் செய்யப்பட்ட தவறை முன்னுதாரணமாக கொள்ளும் பாரால் குற்றச் செயல்கள் மேலும் பெருகுகின்றன.

பல தசாப்தங்கட்கு முன்பு கட்டப்பட்ட பல மதில்கள் இன்னும் இடிக்கப்படாமல் பாதைகளை விரிவாக அமைக்கத் தடையாக இருக்கின்றன. பக்கத்தில் கட்டப்பட்ட மதில் உள்நோக்கி அமைந்திருக்கும் போது தமது மதில் சுவர் பாதைக்குள் தள்ளியிருப்பதையும் சிலர் கவனிப்பதில்லை.

பூமியில் சீர்திருத்தத்தின் பின்பு சீர் கேட்டை உண்டாக்காதீர்கள் - அல் குர்ஆன் 7:56

குர் ஆன் வசனங்கள், நபி மொழிகள் கொண்ட இஸ்லாம் நமக்கு வாழ்வதற்கும், வாழ்ந்து காட்டுவதற்கும், வழிகாட்டும் அற்புத மார்க்கமல்லவா? தன் தவறைத் திருத்திவிட்டு பிறருக்கு உபதேசித்த உம்மி நபியின் உண்மை மார்க்கமல்லவா? இஸ்லாமியன் வேடதாரியாக வாழ முடியுமா? போலிகளின் இஸ்லாமிய பிரச்சாரம் யாரை ஈர்த்து இஸ்லாத்தில் சேர்க்கும்.

தூய உள்ளத்தையும் இறையச்சத்தையும் விரும்புகின்ற எல்லாம் வல்ல இறைவனை ஏமாற்ற முற்படலாமா?

தேச கீர்த்தி அல்-ஹாஜ் AMA.சமட் (J.P),
ஓய்வு நிலை அதிபர்,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலக்கிய நிகழ்வுகளில் ஆட்களை விரட்டுதல்

இலங்கையின் கிழக்கு மாகாணம் கடந்த ஒரு தசாப்தங்களுக்குள் அதிகமான இலக்கியம்சார் வெளியீடுகளையும் நிகழ்வுகளையும் நடத்திக் கொண்டு வருகிறது என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. கவிஞர்கள், சிறுகதையாளர்கள் , நாவலாசிரியர்கள் ,விமர்சகர்கள் ,ஆய்வாளர்கள் ,கட்டுரையாளர்கள் என அதன் பக்கங்களை கட்டுப்படுத்த முடியாமல் பிரவாகமெடுக்கிறது எமது இலக்கிய முன்னெடுப்புக்கள். தரம்-தரமின்மை என்பவைகளுக்கு அப்பால் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவைகளே.

நிகழ்வொன்றை வடிவமைக்கும் போது மிக முக்கியத்துவமுடையது அந்நிகழ்வின் தொகுப்பாக்கமாகும். கணீரென்ற குரலில் வாசிப்பதும் பின் பற்றல் பாணிகளில் உச்சரிப்பதும் மாத்திரம் தொகுப்பாக்கத்தின் கடமையாகாது. குறித்த நிகழ்வை ரசமுடையதாகவும் கட்டுக்கோப்புடையதாகவும் ஆக்குகின்ற ஆளுமை தொகுப்பாளனுக்குரியதே. நடைபெறப்போகும் நிகழ்வு எத்தகையது? அழைக்கப்பட்டிருப்பவர்கள் எத்தகையவர்கள்? இவைகளைப் பற்றிய முன் அறிவு தொகுப்பாளனுக்கு இருக்க வேண்டியது நியாயமானது. வெளியீடுகளில் அழைக்கப்படுகின்றவர்கள் திரும்பிச் சென்றுவிடுவதற்கு பலவழிகளில் இவர்கள் காரணமாய் இருப்பது குறித்து வெளியீட்டாளர்கள் கவனமெடுப்பது அவசியமானது. மிகச் சிறந்த சந்தர்ப்ப ஆளுமை மிக்க தொகுப்பாளர்களும் எம்மிடையே இருப்பதை நாம் பாராட்டியேயாக வேண்டும். இத்தொகுப்பாளர்களுக்கு முன்னறி விளக்கமளிக்காத வெளியீட்டாளர்களே முதன்மைக் குற்றவாளிகள்.

இலக்கியம்சார் வெளியீடுகளில் அழைக்கப்படுகின்றவர்கள் கலந்து கொள்வது மிகக் குறைவு என்ற ஆதங்கம் படைப்பாளிகளிடம் மேலோங்கியுள்ளது. இதற்கான அடிப்படைக் காரணிக்குரியவர் தாங்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரத்தவறி விடுகிறோம். நமது பிரதிகள் தொடர்பில் நாம் நினைக்கின்ற எல்லோருமே உரையாற்றிவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அது நமது நிகழ்வு என்பதால் அதனை ஜீரணிக்கும் பக்குவம் நம்மிடம் இருந்த போதிலும் சாதாரண நிலையிலுள்ளவர்கள் மட்டுமன்றி இலக்கிய ரசனையுடையவர்களும் கூட வெளிப்படுத்த வழியின்றி உமிழ்ந்து கொள்ளுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். உரையாளர்கள் சிலரும் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பமாக எண்ணி தம் அறிவுப்புலத்தை ஒரு மேடையிலேயே விளாசிவிட எத்தனிக்கின்றனர்.

எல்லா எழுத்தாளர்களும் பேச்சாளர்களாக இருக்க முடியாது என்பதை உணரத் தவறி விடுகின்ற பலர் பழகுநிலை முயற்சிக்காகவும் தன் பல்துறை விரிவை வெளிப்படுத்த களம் தேவை என்பதற்காகவும் நகைச்சுவைப் பாத்திரத்தை விட்டு விட்டு வில்லனாக பாத்திரமேற்க முனைகின்றனர். இவற்றால் அரங்க எதிர்ப்பலைகளை மட்டுமன்றி தன் பாடைப்பாளுமை குறித்த சந்தேகத்தையும் ஏற்படுத்த வழிசமைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் எழுதுதலென்பது வேறு வாசித்தல் என்பது வேறு. சொல் அடுக்குகள் மட்டுமே உடைய பொருளற்ற கவிதைகள் கூட வாசித்தலால் உணர்வு பெறவும் அழகிய அல்லது நல்ல கவிதைகள் சாகடிக்கப்படவும் முடியும். இதனால் இவ்வாறான விசப்பரீட்சைக்குள் இறங்காமல் உரியவர்களுக்கு வழி விட்டு ரசித்தலென்பது பக்குவமான முயற்சியே.

ஒரு துறைசார் அரங்கத்தை வேறு திசையில் மாற்றிவிடுகின்ற முயற்சிகளும் அண்மைக்காலமாக அரங்க ஆற்றுகைக்குள் நுழைந்து விட்ட ஒன்றாக மாறிவிட்டன. வித்தியாசமொன்றிற்காக ஒருபாடலோ நகைச்சுவையோ வருவது ரசமுடையதானாலும் அவை தெவிட்டலாக மாறி அரங்கத்தின் நோக்கத்தைத் திசைதிருப்புவது குறித்தும் வெளியீட்டாளர்கள் சிந்திக்க வேண்டும்.

ஒரு வெளியீட்டாளன் தன் பிரதியைப் பெற்றுக் கொள்ள தன் உறவுகளையும் நண்பர்களையும் தன் சக தொழில் பார்ப்பவர்களையும் அழைக்கிறான். இதில், இலக்கியத்தின் மீது கவனம் அல்லது அக்கறை கொண்டவர்கள் அரைவாசியையும் எட்டுவதில்லை. இப்பிரதியை எடுத்துக் கொண்டு செல்பவர்களில் சக படைப்பாளிகளே அதனை வாசித்துப் பார்த்துக் கொள்ள முடியாத சூழலில் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் விழா நிகழ்வின் போது இடம்பெறும் நூலின் மீதான உரைகளே பிரதி பற்றியும் பிரதியாளன் பற்றியுமான தகுதிகாண் நிலையை அங்கு வழங்க வேண்டியுள்ளது. ஆயினும் அவை நிறைவு செய்யப்படாமல் நூலின் மீதான உரையாளர்கள் தன் சுயபுராணங்களையும் பிரதிகளுக்கு வெளியே நின்று பயணிக்கின்ற உரைகளையும் ஆற்றுகின்றனர். "யானை மண்ணை அள்ளித் தன் தலையில் போடுகின்ற முயற்சி" யாகவே பிரதியாளனுக்கு இந்நிலை அமைந்து விடுகிறது. ஏலவே சிந்திக்காத சில படைப்பாளிகள் கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமும் செய்கின்றனர்.

நமது நிகழ்ச்சி நிரல்களை நேரமுகாமைத்துவத்துடன் வடிவமைக்கும் போதுதான் எமது நிகழ்வுகளை நோக்கி ஏனையவர்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அவ்வாய்ப்புக்களே எமக்கான அடையாளத்தையும் வெளியீடுகளுக்கான தொடர் மன உறுதியையும் ஏற்படுத்தும்.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் இலக்கிய நிகழ்வுகளில் ஆட்கள் விரண்டோடுகின்ற சூழல் அதிகரிக்க வாய்ப்புண்டு. தகுதி இழந்து செல்லும் நமது வெளியீடுகளில் அல்லது நிகழ்வுகளில் உள்ள இது போன்ற விடயங்களை இனங்கண்டு நிகழ்வுகளை செம்மைப்படுத்துவோம். அப்போதுதான் இலக்கிய நிகழ்வுகள் தம் இலக்கை நோக்கி நகர வாய்ப்புண்டு.

(ஜெஸ்மி எம்.மூஸா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மும் முனைகள்

தென் கிழக்கின் முக வெற்றிலையாகவும் அம்பாறை மாவட்டத்தின் முதலாவது மாநகரம் என்ற பெருமையை கொண்டதாகவும், கல்முனை இருந்து வருகிறது. புவியியல் ரீதியில் இயற்கை வளங்களும் செழிப்பு மிக்க நகரமாகவும் இருப்பதோடு வர்த்தக மற்றும் நிர்வாக ரீதியில் தலை நிமிர்ந்தும் நிற்கிறது. இம்மாநகர சபையின் எல்லைக்குள் கல்முனை கல்முனை வடக்கு சாய்ந்தமருது பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன. இப்பிரதேச செயலகங்களானது **1992** ஆம் ஆண்டின் **58** ஆம் இலக்க அதிகாரங்களைக் கையளித்தல் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் உருவாக்கப்பட்ட கல்முனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் மருதமுனை நற்பிட்டிமுனை கல்முனை(க்குடி) போன்ற அழகிய மூன்று ஊர்களும் காணப்படுகின்றன.

கல்முனை நகரின் வடக்கே சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள "மருத மொழி" பேசுகின்ற மருதம் மணக்கின்ற அழகிய குட்டிக் கிராமமே மருதமுனைக் கிராமமாகும். இதன் வடக்கே பெரிய நீலாவணைக் கிராமமும், தெற்கே பாண்டிருப்புக் கிராமமும், கிழக்கே வங்கக் கடலும் மேற்கே துரைவந்திய மேட்டுக் கிராமத்தையும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது.

ஆரம்ப காலங்களில் இவ்வூரின் மேற்குப் பகுதியில் ஆற்று மேடை ஒன்று இருந்துள்ளது. இவ்வாறு மேடுகளும் பள்ளங்களும் வந்து சென்றுள்ளன. இதனைச் சுற்றி அதிகமான மருத மரங்கள் காணப்பட்டுள்ளது. இதனால் இவ்விடம் "மருதமுனை" என அழைக்கப்பட்டு காலப்போக்கில் அதுவே ஊரின் பெயராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் ஆரம்பத்தில் குடியேறியோர் ஜீவனோபாயமாக நெசவுத்தொழில், கடற்றொழில், நன்னீர் மீன்பிடி விவசாயம், பாயிழைத்தல், பனையோலை கொண்டு பெட்டியிழைத்தல், பீடி சுற்றுதல், கூலி வேலை என்பவற்றை செய்து வந்துள்ளனர். சிறப்பு தேர்ச்சி பெற்ற மீனவர்கள் கடற்றொழிலில் பெரும் முயற்சியுடன் பாரிய மீன் அறுவடையை பெற்றுக் கொள்வார்கள். கடற்றொழில் சிறக்காத காலங்களில் படுவான்கரை பிரதேசங்களில் நன்னீர் மீன் பிடியும், மீன் உலர்த்துதலும் கைகொடுத்தது. தொடர்ந்து வந்த காலங்களில் இக்கிராமம் கல்வி கைத்தொழில் மற்றும் வர்த்தகம் போன்ற விடயங்களில் முக்கிய இடத்தை பெற்றுக் காணப்படுகிறது.

நீண்ட காலமாக மருதமுனை கிராம மக்களில் அதிகமானோர் தெரிவு செய்த தொழில்களாக நெசவு, குழித்தறி, கைத்தறி என்பவற்றை குறிப்பிடலாம். இதனூடாக தரமான ஆடைகளை உற்பத்தி செய்து அயல் கிராமங்களுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற்று பெரும் வர்த்தக களஞ்சியமாக மருதமுனையை மாற்றியுள்ளார்கள். இன்று நெசவுத் தொழிலில் உயர் தொழிநுட்பத்துடன் வளர்ச்சி பெற்று வருகின்றது. இக்கிராமமானது 8 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டமைந்து காணப்படுவதுடன் சுமார் **17453** மக்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாரை மாவட்டத்தின் கல்முனையின் மேற்கே வரலாற்றுத் தொன்மை மிக்க கிராமங்களில் நற்பிட்டிமுனை ஒன்றாகும். கல்முனை நகரின் மேற்குப் பிரதேசத்தில் கிட்டங்கி வீதியில் சுமார் **0.5** கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்தால் வரும் அழகிய கிராமமே நற்பிட்டிமுனையாகும். இதன் கிழக்கு மேற்கு எல்லைகளாக முறையே மணற்சேனை, சேனைக்குடியிருப்பு கிராமங்களும் வட தென் எல்லைகளாக பசுமை மிகு நெல் வயல்களும் அமைந்துள்ளன.

இயற்கையாகவே வளமான மருத நிலமும் வற்றாத நீரோடைகளும் கனி தரும் மரங்களும் காடுகளும், புல் வெளிகளும் இக்கிராமத்தின் சுற்றுப் புறங்களில் அமைந்திருந்தமையால் ஆரம்பத்தில் மக்கள் இக்கிராமத்தில் குடியேறி மந்தை வளர்க்கின்றவர்களாக இருந்தார்கள் எனக் கூறப்படுகிறது.

இக்கிராமத்தை ஆரம்பத்தில் நாய்ப்பந்துமுனை, நாய்ப்பட்டி முனை, நெற்பிட்டிமுனை, நெய்ப்பிட்டிமுனை என்பன போன்ற பல பெயர்கள் கொண்டு அழைத்து வந்துள்ளார்கள். நாளாந்தம் அளவுக்கதிகமாக பெறப்பட்ட பாலை நெய்யாக உருக்கியெடுத்து மண் பாத்திரங்களினுள் வைத்து விதியோரங்களில் விற்பனைக்காக குவிக்கப்பட்டு இருந்தமையினால் இக்கிராமத்திற்கு "நெய்ப்பிட்டிமுனை" எனவும் கூறப்பட்டும் வந்துள்ளது.

அண்டிய தாழ் நிலங்களை அழித்து மக்கள் நெற்செய்கைகளில் ஈடுபட்டு அளவுக்கதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட நெல் ஒவ்வொருவருடைய வீட்டு முற்றத்திலும் குவித்து பண்டமாற்று செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக அக்காலத்தில் "நெற்பிட்டிமுனை" என பெயர் பெற்றதாகவும் வாய்மொழிக் கதைகள் உள்ளது என்றும் கூறப்படுகிறது. காலப் போக்கில் இப்பெயர் திரிபடைந்து " நற்பிட்டிமுனை" என்று அழைக்கப்பட்டு வரும் இக்கிராம் **5** கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதுடன் சுமார் **5449** மக்களையும் கொண்டமைந்து காணப்படுகிறது.

கல்முனையின் வடக்கே பாண்டிருப்பும், கிழக்கே வங்கக் கடலும், தெற்கே சாய்ந்தமருதும், மேற்கே நற்பிட்டிமுனையையும் எல்லையாகக் கொண்டமைந்தும் காணப்படுகின்றன. கல்முனை என்னும் போது கடற்கரைக் கொடியேற்றப்பள்ளி வாசலை இலகுவில் மறந்து விட முடியாது. கல்முனை நகரின் கிழக்குப் புறமாக கடற்கரையை அண்மித்து இந்தப் பள்ளிவாசல் அமைந்துள்ளது.

கல்முனையினுள் ஓர் அங்கமாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமமாக கல்முனைக் குடியைக் கொண்டுள்ளது. கல்முனை மற்றும் கல்முனைக்குடி என்ற பெயர் நிருவாக ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பெயர் இயற்கையாக அமைந்த ஒன்று. கல்முனையை கன்முனை, கண்மனை, கெய்முனை என்ற பெயர்கள் சொல்லி புலவர்கள் பாடல்களில் பாடியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் கிழக்கே கடலை நோக்கி கல்லாலான பாறையொன்று நீட்டிக் கொண்டு முனை போன்று காணப்பட்டது. கல்லாலான முனை காணப்பட்ட இவ்விடத்தை கல்முனை என்று அழைக்கலானார்கள். கல்முனையை தலைநகராகக் கொண்டு முன்னோர்கள் வர்த்தகம், போக்குவரத்து, குடியிருப்பு மற்றும் ஆட்சி அதிகாரங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். இயற்கையாக கடலினுள் நீண்டு கொண்டு விளங்கும் கல்லாலான முனையை கடல் வழிப் பாதையில் ஒரு அடையாளமாகவும் துறைமுகமாகவும் கடல் வழி வர்த்தகர்களும் யாத்திரிகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

கல்லாலான முனையை அண்டிய பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புக்களை அமைத்து வாழத் தொடங்கியதிலிருந்து கல்முனைக்குடி என்று அழைத்தனர். கல்முனையில் வாழும் மக்கள் அனேகர் வர்த்தகர்களாக காணப்படுகின்றார்கள். வர்த்தக நிலையங்களில் முழு நேர வர்த்தகம் செய்பவர்களாகவும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் செய்பவர்களாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை கொள்வனவு செய்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

நன்னீர் மற்றும் கடல்நீர் மீன்பிடி, விவசாயம், கால்நடை போன்ற தொழில்களிலும் வேலைகள் போன்ற தொழில்களிலும் இதர வேலைகளிலும் தமது ஜீவனோபாயத்தை செய்து வருகிறார்கள். கல்முனை-01 என்னும் பிரிவானது இஸ்லாமபாத் என்று அழைக்கப்படுகிறது. "கல்முனை" (கல்முனைக்குடி) என்று அழைக்கப்பட்டு வரும் இக்கிராமம் 16 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதுடன் சுமார் 17453 மக்களையும் கொண்டமைந்து காணப்படுகிறது.

ஆக்கம்
சாமசிறி தேசகீர்த்தி" "தேச அபிமானி"
அ.றா.அஹ்மட் நபாயிஸ் (BA. MA.)
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிற்ப மூலிகையின் அற்புத சக்தி

மனித ஜீவராசிகளின் வாழ்வுக்கு எவையெல்லாம் மிக மிக அவசியமோ, அவற்றை எளிதாகவும், சுலபமாகவும், சிரமின்றிப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இயற்கை வளத்தை இறைவன் மிக மிக இலகுபடுத்தியிருக்கிறான். உதாரணமாக நீர், காற்று மற்றும் மரம், செடி, கொடி, பூண்டு போன்றவற்றைக் கூறலாம்.

அந்த வகையில் இறைவனின் பேருபகாரமாக இயற்கையாகவே தோன்றி உலக ஜீவராசிகளுக்கு ஏற்படும் நோய்களை அகற்றும் தன்மையில் மிகவும் சக்தி வாய்ந்த அற்புத மூலிகையாகிய கரிசாலங்கன்னி பற்றிச் சிறிது ஆராய்வது மிகவும் பொருத்தம் மிக்கது எனக் கருதியே இக்கட்டுரையை வரைகின்றேன்.

இம்மூலிகை அனேகமாக எல்லோரும் அறிந்த ஒன்றாகும். எங்கும் எளிதாகப் பெறக்கூடியது. வயல்களிலும், வாய்க்கால் வரம்பு ஓரங்களிலும், ஓடை, சாலை மட்டுமல்ல எமது கொல்லைப் புறங்களிலும் வளர்ந்திருப்பதைக் காணலாம். ஊனக் கண்ணுள்ள எமக்கு அதன் சக்தி விளங்கவில்லைஆனால் ஞானக் கண் உள்ளவர்களின் பார்வையில் அதைப் போன்ற அற்புத சக்தி வாய்ந்த மருந்தைக் காண முடியாது.

பித்தநீர் பெருக்கியாகவும், மலமகற்றியாகவும் பயன்படும் இம்மூலிகையை ஆங்கிலத்தில் (ECLIPTA PROCENA)என்றும், காலபேத சூழலுக்கேற்ப சுமார் பதினைந்து பெயர்கள் கொண்டு அழைப்பதாகவும் என் பார்வைக்குட்பட்ட ஏடுகளில் காணக் கூடியதாக உள்ளது.

இம்மூலிகையில் நான்கு வகைகள் உள்ளன. பூவின் நிறங்களை அடிப்படையாக வைத்தே இவ்வகைகளைக் கண்டு கொள்ளலாம். எங்கும் கிடைக்கக்கூடியனவாக வெள்ளை, மஞ்சள் உள்ளன. ஆனால் நீலம், சிவப்பு எனவும் இருவகைகள் உள்ளன. இவற்றை மலைச்சாரலிலும, மலையடிவாரங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. இவை யாவும் குணம் செய்வதில் ஒன்றே என்றாலும், மஞ்சள் நிறக் கரிசலாங்கன்னி மகத்துவம் மிக்கதாகக் கணிக்கப்படுகிறது. என்பது அனுபவ ரீதியான ஓர் உண்மை.

இதன் இதர பெயர்களான கரிப்பான், கையான், கைகேகி, கைவீசி, பிருங்கராஜம், கரிசாலை, கரசனாங்கண்ணி, கஞ்சுண்ணி, பங்காரு, கரியசாலை, கையாந்தகரை, தேகராஜம், நேரஞ்சா, இட, அருபதம் போன்றவாறு சுமார் பதினைந்து பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இதன் அற்புத சக்தியை வைத்தே அகத்தியர் தன் பாடலில்,

"குரற் கம்மிற் காமாலை குட்டமொடு சோகை
        யுரப்பாண்டு பன்னே யொழியும் - நிரற்சொன்ன
மெய்யாந் கரையொத்த மீளியண்ணும் நற்குலத்துக்
        கையாந் தகரை யொத்தக் கால்"

என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொற்றலைக் கையான் பொன்னிறமாக்கு முடலை
சுத்தமுறக் கட்டுஞ் சுகங்கொடுக்கும் - சிற்றிடையாய்
சிந்தாதுரங் கட்காகுஞ் சிந்தை தனைத் துலங்க வைக்கும்
முந்தி வளர் குன்ம மொழிக்கும்"

என்றும் பாடியுள்ளார்.

கரிசலங்கண்ணியின் சிறப்புக் குணம் உடலைப் பொன்னிறமாக்கும். கண்களுக்கு ஒளி தரும். ஈரற் கட்டியைக் கரைத்துவிடும். சகலவித காமாலைகளும் விலகிவிடும். குன்மக் கட்டிகள், சகல வித அழலைக் கட்டிகள், குட்டம் வீக்கம், நாட்பட்ட சுரம், காசரோகம் போன்றவைகளைப் போக்கும் குணமுடையது. இதன் விஷேட குணம் யாளிக்குள்ள பலம் இம்மூலிகைக்கு உண்டு என அகத்தியர் அழகாக வர்ணிக்கின்றார்.

இது கலைவாணியின் அருங்குணம் பொருந்தியது. ஆதலால், புத்திக்குத் தெளிவை எற்படுத்தி உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும், வனப்பையும் தர வல்லதெனச் சித்தர்கள் வர்ணிக்கின்றார்கள். பைத்தியத்தைப் போக்கும் பண்பும் இம்மூலிகைக்கு உண்டு. மஞ்சக் காமாலை எனும் நோயைக் குணம் செய்வதில் மகா வல்லமை பொருந்தியது. அன்றியும் கல்லீரல், மண்ணீரல் பெருக்கமடைந்தவர்கள் எல்லாம் இம்மூலிகையால் குணமடைந்து உயிர் பிழைத்துள்ளார்கள். என அறியக்கிடக்கிறது. இன்னும் சொல்லப் போனால் ஒரு சில சருமரோகங்களையும் கரிசலாங்கன்னி சுகப்படுத்தும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இதன் எளிய முறையில் பிணி தீர்க்கும் முறையை அடுத்த இதழில் ஆராய்வோம்.

இப்படிக்கு சாம ஸ்ரீ சமூக ஜோதி
டாக்டர் அல்-ஹாஜ் A.L.M.இப்றாஹிம் (J.P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காத்திருப்பு

ஆழியிலே மீன் பிடிக்க
தோணியோட போனவங்க
கூடையிலே மீன் குதிக்க
கொண்டுவர நேரம் போறதென்ன...

ஆழ்கடல் முத்து எல்லாம்
உங்க அழகு கண்டு
ஓடி வரும்
சிப்பியோடு முத்து எடுத்து
இந்த தங்கத்துக்கும் கொண்டு வாங்க...

தங்கமென்ற பெயர்
எனக்கு தங்கம் கூட மதிப்பில்ல
வைரக்கல் எடுத்து
வளையலோடு தோடும் செய்து தாங்க
மாணிக்கக்கல் பதித்து
மோதிரமாய் ஒன்று போதும்
நங்கை இவள் கழுத்துக்கு
நாகக்கல் எடுத்து
நகையாய் சூடினாலும்
பெரும் சொத்துதான் நீங்க எனக்கு
சொணங்காம வந்துடுங்க...

உச்சி நிலா பட்டு
உங்க மேனியெல்லாம் பளபளக்கும்
உங்க தோளோடு நிலா உறங்க
தூரமென ஏங்கி நிக்கும்
நீந்தி வரும் மீன்கலெல்லாம்
நிலைகொண்டு பாத்திருக்கும்
சொர்க்கமாய் நான் இருக்கேன்.
சொணங்காம வந்துடுங்க...

மஞ்சலோடு தேங்காயும்
மிளகும் விட்டும் அரச்சி
அம்மியோடு வெச்சிருக்கன்
காய்ந்த மிளகாயோடு
புளியிட்டு அரச்சி
வேறாக வெச்சிருக்கன்.

கூரையிலே நிண்ட சேவல்
நேரம் சொல்லி கூவுதுங்க
காட்டு குருவியெல்லாம்
கானம் பாடி பறக்குதுங்க
சோலைக் கிளிகளெல்லாம்
ஜோடியோட கவி பாடுதுங்க

பாயும் அலை மேல
கொதிக்கும் மீன் போல
தவிக்கும் என் மனச
என் நலம் காப்பவனே
இன்னும் தான் ஏன் அறியல...

கதவு மூலையிலே
கிழிந்த வேலியால
கிழக்கே பார்த்திருக்க
கண் கசங்கி
கால அசந்து போனேங்க

கயல் மீன் இழுத்து வந்து
கமுகு பாளையில போட்டு
துண்டு துண்டா வெட்டயில
பொன்னி ராத்தாவும்
புது பொண்டுகளும் சுத்தி நிக்க
பாழாப் போன குயில்
பதறி அடிச்சி கூவ
தினுக்கிட்டு முளிச்சேங்க
திண்ணையிலே நீங்க இல்ல...

சத்தியமா சொல்லுறேங்க
சலிப்பாக இருக்குதுங்க
விடிவெள்ளி பூக்குமுன்னே
வீட்டுக்கு வந்துடுக்க...

கவிதை
கட்டுரை சிறுகதை
சிறுவர் ஆக்கம்
நாட்டார் பாடல் மற்றும்
சித்திரம் சிற்பி அலங்காரம்
கலையரசி
தேசாபிமானி சமூக தீபம்
ஜெசீமா முஜீப்
பெரியநீலாவணை-02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அழகு

நீரும் நிழலும்
நிலத்திற்கழகு
வேரும் மரமும்
நிழலுக்கழகு
ஊரும் உறவும்
உலகிற்கழகு
சேரும் நட்பே
சிறப்பிற்கழகு

இரவும் நிலவும்
பொழுதுக்கழகு
பரவும் மணமே
மலருக் கழகு
சுருக்கும் மடியே
பசுவுக் கழகு
சிறக்கும் அறிவே
மனிதனுக் கழகு

கவியும் கருவும்
தமிழுக் கழகு
குவியும் மனவே
குணத்திற் கழகு
தவிக்கும் வாய்க்கு
தண்ணீரழகு
தெவிட்டாச் சுவைகள்
தினமு மழகு

மாதா பிதாவே
மக்களுக்கழகு
ஊதா உடலே
சுகத்திற்கழகு
நீதி நியாயம்
நிஜத்திற்கழகு
ஓதி உணர்தல்
உயர்வுக் கழகு

M.H.A.கரீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "கல்முனை நகரம்" தமிழ் - முஸ்லிம் இனநல்லுறவு பூர்வீக வரலாறாக கொண்டது

கல்முனை மாநகரம் இன்று தேசியரீதியில் பேசப்படுகின்ற ஒரு நகரமாக திகழ்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியின் தலை நகர் என்றால் அது கல்முனையாகவே இருந்தது. தென்கிழக்கின் முகவெற்றிலையாகவும் அம்பாரை மாவட்டத்தின் முதலாவது மாநகரமாகவும் கல்முனை நகரம் காணப்படுகின்றது.

புவியியல் ரீதியில் இயற்கை வளங்களையும் மக்கள் வாழ்வதற்கு பெருத்தமான நில அமைப்பையும் கொண்ட கல்முனை மாநகரம் வர்த்தகம், கல்வி மற்றும் அரசியல் துறைகளில் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தமிழ் - முஸ்லிம், கிறிஸ்தவர்கள், சிங்களவர்கள் என்று பல்லின மக்களும் வாழும் இங்கு மத பேதங்கள் பிரதேச வாதங்களுக்கு அப்பால் 'பிட்டும் தேங்காய்பூவும் போல... தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்ந்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபையின் நிருவாகத்தினுள் காணப்படும் துறைவந்தியமேடு, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய ஒவ்வொரு ஊர்களும், சமூகங்களும் ஒவ்வொரு வகையில் சீரும் சிறப்பும் கொண்டதாக காணப்படுகின்றன. இந்த ஊர்கள் ஒவ்வொன்றினதும் வரலாறுகளை புரட்டிப் பார்க்கும் போது தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் இன நல்லுறவை அறிய முடிகிறது.

1992ஆம் ஆண்டு 58ம் இலக்க அதிகாரப்பரவலாக்கச் சட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் சிவில் நிருவாகத்தில் பல படித்தரங்களை கடந்து வந்த 'கல்முனை' ஒரு பிரதேச செயலகமாக மாற்றம் பெற்றது.

1989 ஆம் ஆண்டு கல்முனை பிரதேச நிருவாகத்தின் கீழ் இருந்து வந்த 75 கிராம சேவகர் பிரிவுகளுள் தமிழ் மக்கள் செறிந்துவாழும் 29 கிராம சேவகப் பிரிவுகளை ஒன்றிணைத்து கல்முனை (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலகம் தனியாக பிரிக்கப்பட்டது. ஏனைய 46 கிராம சேவகப் பிரிவுகளும் கல்முனை பிரதேச செயலகத்தின் நிருவாகத்திற்குள்ளேயே காணப்பட்டது. முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் கலந்து வாழும் இப்பிரதேசத்தில் இந்தப் பிரிப்பின் மூலம் எவ்வித பிளவும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

இதன் பின்னர் கல்முனை பிரதேச செயலக நிருவாகத்திற்கு உட்பட்டதாக இருந்த சாய்ந்தமருது பிரதேச செயலகம் 1984 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக 1999.12.19 ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்தின் உப அலுவலகமாக பிரகடனப்படுத்தப்பட்டு பின்னர் 2001.02.04 ம் திகதி பொது நிருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் றிச்சட் பத்திரனவினால் சாய்ந்தமருது தனியான பிரதேச செயலகமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 17 கிராம சேவகர் பிரிவுகளை கொண்ட சாய்ந்தமருதின் மொத்த சனத்தொகை 26,813 ஆகும்.

கல்முனை பிரதேச செயலகம் தற்போது 29 கிராம சேவகர் பிரிவுகளில் 49,682 சனத்தொகையை உள்ளடக்கியதாக இயங்கி வருகின்றது.இவ்வாறு கல்முனை நகரத்தின் சிவில் நிருவாக சேவை கல்முனை பிரதேச செயலகம், கல்முனை (தமிழ்ப் பிரிவு), சாய்ந்தமருது என மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளன.

1989.04.12ல் கல்முனை(தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகம் அமைக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். தமிழ் மக்கள் செறிவாக வாழும் பெரியநீலாவணை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, துரைவந்தியமேடு, கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கி 29 கிராம சேவகர் பிரிவுகளை கெண்டதாக கல்முனை(தமிழ்ப் பிரிவு) காணப்படுகின்றது. இதன் மொத்த சனத்தொகை 35,526 ஆகும்.

தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவை அறிவதற்கு முன்னர் சிவில் நிருவாக வரவாற்றை ஓரளவிற்காவது தெரிந்திருப்பது அவசியமானதாகும். விரிவாக அறிவதற்கும் ஆராய்வதற்கும் இந்தப் பக்கம் போதுமானதல்ல.

புவியியல் நிலத் தொடர்பில் முஸ்லிம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள், சிங்களவர்கள் என பல்லின மக்களும் இவர்களது இருப்பிடங்களும் பின்னிப் பிணைந்து ஒற்றுமையாகவும் அந்நியோன்னியமாகவும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இங்கு வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களுக்குள் பிரிக்க முடியாத ஓர் உறவு முறை பல்லாண்டு காலமாக காணப்படுகின்றது.

கல்முனையில் போத்துக்கேயரின் வருகைக்கு முன்பிருந்தே மக்கள் ஒற்றுமையாக வாழ்தாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அரேபியர்கள் வர்த்தக நோக்கம் கருதி மட்டக்களப்பு வாவி-கிட்டங்கி துறைமுகம் ஊடாக வருகை தந்தததையும் இவர்களை சிங்கள மன்னர்கள் குடியேற்றி நல்லுறவோடு வாழ்ந்த வரலாற்றை வி.சி.கந்தையா, கவிக்கோ வெல்லவூர்க்கோபால் ஆகியோர் தமது வரலாற்று நூல்களில் பதிவு செய்துள்ளனர். இந்தியாவிலே இருந்து வந்த தாதன், கவுத்தன் ஆகியோர் பெரியநீலாவணையில் வாழ்ந்தபோது துலுக்கர்கள் (முஸ்லிம்கள்) மத வேறுபாடுகள் பாராமல் தலுக்கர்களுடன்(தமிழர்களுடன்) உறவு கொண்டு வாழ்த வரலாற்றையும் 'மட்டக்களப்பு தமிழகம்' எனும் நூலில் வி.சி.கந்தையா பதிவு செய்துள்ளார். இதன்மூலம் இங்கு தமிழ்-முஸ்லிம் உறவு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதை அறியமுடியும்.

பின்னரான காலப்பகுதியில், துறைநீலாவணை எனும் பழம் பெரும் கிராமத்தில் குடியமர்ந்து வாழ்ந்த முஸ்லிம்கள் மருதமுனை கிராமத்தின் ஆதிக்குடிகளான சீர்பாத குலத்துடன் ஒத்துமாறிய ஒரு முஸ்லிம் குழுவினரையே மருதமுனையின் பூர்வீக முஸ்லிம்களாக கொள்ளப்படுகின்றது என்பதை புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 'மருதமுனை வரலாறு' என்ற நூலில் கூறியுள்ளார். இவ்வாறு வாழ்த முஸ்லிம்களின் ஜீவனோபாயத் தொழிலாக நெசவு காணப்பட்டது. முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு தமிழர்கள் தொழிலாளர்களாக பணியாற்றி ஒற்றுமையாக வழ்ந்து வந்துள்ளனர்.

இனத்தால் மதத்தால் வேறுபட்ட போதிலும் பெயர்களில் சீனித்தம்பி-சின்னத்தம்பி, தங்கராசா-வெள்ளைத்தம்பி, பிச்சையம்மா-வெள்ளையம்மா போன்ற பெயர்கள் இரு சமூகத்திற்கும் பொதுவானதாக பயன்படுத்தப்படுவதை கானுகிறோம். திருமண நடைமுறையிலும் மோதிரம் இடல், கால் கழுவி மாப்பிள்ளை கூட்டி, கட்டியம் கூறி, தாலி கட்டி, ஆலாத்தி எடுத்து, பால்-பழம் கொடுத்து சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கும் பழக்கம் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் இருந்து வருகிறது. வீடு கட்டுவதற்கு நாள்சாஸ்திரம் பார்த்து நிலம் எடுப்பதை இன்றும் முஸ்லிம் சகோதரர்கள் சம்பிரதாயம் என்ற பெயரில் செய்து வருகின்றமை அன்றைய இன நல்லுறவின் வெளிப்பாடுகளாகும்.

இலக்கியத்திலும் தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவும், இலக்கிய பாரம்பரியமும் துளிர்விட்டு வளந்திருக்கிறது. தமிழ்-முஸ்லிம் மக்களிடமிருந்து புலவர் பரம்பரை உருவாகியிருக்கிறது. தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த வரலாற்றுப் பின்புலத்திலிருந்து பல காத்திரமான இலக்கிய படைப்புக்கள் வெளிவந்திருக்கின்றன.

நவீன கவிதையின் தோற்றத்திற்கு வித்திட்ட கவிஞர் நீலாவணனில் தொட்டு பத்திரிகை துறை வரைக்கும் தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவு பாரம்பரியத்திற்கு பங்களிப்பு செய்திருக்கிறார்கள். இவர்களுள் கல்முனை பிரதேசத்தில் நீலாவணன், மு.சடாச்சரம், பாவலர் பஸீல் காரியப்பர், மருதுக்கொத்தன், எம்.ஏ.நு.்.மான், புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன், சன்முகம் சிவலிங்கம், மருதூர்கனி, எம்.எச்.எம்.அஷ்ரப், அ.ச.அப்துல் சமது, வீ.ஆனந்தன், உமாவரதராஜன், சோலைக்கிளி, எஸ்.முத்துமீரான் அன்புடீன் என நீண்டுகொண்டு செல்கிறது. இவற்றுள் எம்.ஏ.நு.்.மான்- சன்முகம் சிவலிங்கம்

ஆகியோர் இணைந்து இலக்கியத்துறைக்கு பல சஞ்சிகைகளை தந்திருக்கிறார்கள். அதேபோன்று நீலாவணன், மருதுக்கொத்தன், மருதூர்கனி போன்றோர் ஒற்றுமையோடு வாழ்ந்து இலக்கியப் பணியை முன்னெடுத்துள்ளார்கள்.

ஆங்கிலயரின் காலப்பகுதியில் கிறிஸ்தவ கத்தோலிக்க மெதடிஸ்த மிஷன் பாதிரிமார்கள் கல்விக்கூடங்களை நிறுவி இன, மத, மொழி வேறுபாடுகள் இல்லாமல் கல்வி அறிவை போதித்தனர். தமிழ்-முஸ்லிம் பிள்ளைகள் ஒன்றாக கல்விகற்றனர். தமிழ்-முஸ்லிம் கலவன் பாடசாலைகள் உருவாக்கப்பட்டபோதும் இனநல்லுறவு மேலும் வளர்ச்சியடைந்தே சென்றது.

உள்நாட்டு யுத்தம் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் பல கசப்புணர்வுகளை விதைத்திருந்தாலும் இலக்கியம் அதற்கு இடைவெளி வைக்கவில்லை எனலாம். ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயறு தாக்குதல். இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு கறைபடிந்த நாளாகும். மாற்று சகோதரர்கள் மாற்றானை பார்பது போலவே எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்கள். இதன் பின்னணியில் கல்முனை தமிழ் மக்களின் – கல்முனை வடக்கு தனிப்பிரதேச செயலக கோரிக்கையும் முஸ்லிம்களின் சாத்வீக் போராட்டங்களும் தமிழ் - முஸ்லிம் உறவில் இடைவெயியை ஏற்படுத்த முனைந்தது.

எனினும் இதற்கு பின்னராக மருதமுனையில் நடைபெற்ற கலாநிதி பிர்தௌஸ் சத்தர் எழுதிய "கிழக்கிலங்கை தமிழ் நாவல்கள் சமூக அரசியல் நோக்கு", எழுத்தாளர் உமா வரதராஜன் எழுதிய "மோகத்திரை" நூல் வெளியீட்டு நிகழ்வுகள், தமிழ் - முஸ்லிம் உறவுகளின் நீண்ட தூரப் பயணங்களை வெளிச்சமிட்டு காட்டியது.

இது இன்றும் தொடர்வது வரவேற்கத்தக்கதாகும்.

அரசியலிலும் கல்முனையில் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடனும் இன நல்லுறவோடும் செயற்பட்டிருக்கிறார்கள் கோல்புறூக் ஆணைக்குழுவில் இந்த ஒற்றுமை மதிக்கப்பட்டிருக்கிறது. செல்லையா வன்னிமை, சத்துரக்கப் போடி வன்னிமை, கே.ஏ.மஜீட் வன்னிமை, கேட்முதலியார் எம்.எஸ் காரியப்பர் வன்னிமை போன்றோரது காலத்தில் இன, மத முரண்பாடுகள் இல்லாமல் நல்லுறவோடு மக்கள் வாழ்தனர்.

1946 ஆம் ஆண்டு முதலாவது பட்டினசபை தேர்தல் நடைபெற்ற போது அதன் முதல் தவிசாளராக பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவோடு எம்.எம்.இஸ்மாயில் காரிப்பர் தெரிவு செய்யப்பட்டார். இவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் பெரிய தந்தையாவார். உப தவிசாளராக எஸ்.தங்கராசா மாஸ்டர் தெரிவு செய்யப்பட்டார். 1949 இறுதிப் பகுதியில் கேட்முதலியார் எம்.எஸ் காரியப்பர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது கல்முனை-03 ஆம் குறிச்சியில் வடிகான் அபிவிருத்தி செய்யப்பட்டது இதன் திறப்பு வழாவிலே பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.காரியப்பர் உரையாற்றும் போது, இந்தப் பிரச்சினைக்கு துயர் தீர்த்த பிரதேச இறைவரி உத்தியோகத்தர் எம்.நடராஜாவின் பெயரில் 'நடராஜா வாய்க்கால்' என நாமம் சூட்டினார். முஸ்லிம் பிரதேசத்தில் காணப்படும் இவ்வாய்க்கால் இன்றும் நடராஜா வாய்க்கால் என்றே மக்களால் அழைக்கப்படுகிறது. இதனை கல்முனை மாநகரம் என்ற நூலில் ஏ.எம்.பறக்கத்துல்லாஹ் பதிவு செய்துள்ளார். பிற்பட்ட காலப் பகுதிகளில் எஸ்.இஸட்.எம்.மசூர்மௌலானா, எம்.சீ.அஹமது, ஏ.ஆர்.மன்சூர் போன்றோர்களும் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் தலைவர் என மதிக்கப்பட்ட மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.ஃப்பும் தமிழ் அரசியல் தலைவர்களோடு ஒற்றுமையோடு அரசியல் செய்திருக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ்-முஸ்லிம் மக்களின் வாழ்வியல் பண்பாடு, சமூக, பொருளாதார, அரசியல், சமய விடயங்களில் ஒருவருக்கொருவார் விட்டுக்கொடுப்போடும் ஒற்றுமையோடும் வாழ்ந்து வந்துள்ளனர். இதனால் தமிழ் மக்களது சமய சமூக பண்பாட்டு விழுமியங்கள் சகோதர முஸ்லிம் மக்களது வாழ்கை முறையிலும் முஸ்லிம் மக்களது சமூக பண்பாட்டு விழுமியங்கள் தமிழ் மக்களது வாழ்கை முறையிலும் காணப்படுகின்றன.

தமிழர்களின் தைத் திருநாளில் முஸ்லிம் சகோதரர்கள் பொங்கல் உண்டு மகிழ்வதும், முஸ்லிம்களின் பெருநாள் பலகாரங்களை தமிழர்கள் உண்டு மகிழ்வதும் வழக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன நல்லுறவு விரிவடைந்து செல்கிறது. பள்ளிவாசல் அதான் ஓசையும் கோயில் மணியோசையும் ஒன்றாக சங்கமித்து ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் பிரசித்தி பெற்ற தீப்பள்ளய உற்சவத்திற்கு முஸ்லிம்கள் செல்வதும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் கொடியேற்ற நிகழ்வுக்கு தமிழர்கள் செல்வதுமாக இனநல்லுறவு வளர்ந்து செல்கிறது. இன்றும் கூட தமிழ் மக்கள் ஹலால் முறையில் அறுக்கப்பட்ட மாமிச உணவுகளை பெற்றுக் கொள்வதற்கு முஸ்லிம் பிரதேசங்களை நாடிச் செல்கின்றனர்.

முருகேசப்பிள்ளையிடம் மூத்தம்மா மருந்து எடுக்கப் போனதையும் சீனித்தம்பியிடம் பக்கத்தூர் பாண்டிருப்பு பாக்கியவதி நோய்தீர்த்ததையும் மருதமுனை தாத்தா சொத்தியன் பரிசாரியிடம் தூள் வாங்கிச் சாப்பிட்டதையும் இன்றுள்ள இளைஞர்கள் தெரிந்திருப்பார்களா? என முன்னுள்ளோர் முணுமுனுக்கின்றனர்.

1980க்கு பின்னர் உக்கிரமடைந்த யுத்த சூழல் மற்றும் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை காரணமாக உயிர்களையும், உறவுகளையும், சொத்துக்களையும் இழந்து நிர்கதியாகி நின்றோம். பட்டாம்பூச்சி விட்ட காலம் தொட்ட உறவுகள் ஒரே பாடசாலை, ஒரே நூலகம், ஒரே தபலகம், ஒரே சந்தை, ஒரே மைதானம், ஒரே வைத்தியசாலை, ஒரே வயல், ஒரே கடல், ஒரே வழிப்பாதை என்று தொடர்ந்த உறவு சிலகாலம் இடைவெளியாகிக் கிடந்தது.

இன்று கல்முனை நகரில் தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவு புது மலர்களாக மீண்டும் பூத்துக்குலுங்குக ஆரம்பித்திருக்கிறது. இந்த மலர்களில் வாசம் நேசத்தோடு தேசம் பூராகவும் வீசட்டும்... இங்கு ஒரு சமூகத்தின் உதவியின்றி மறு சமூகத்தினர் வாழ முடியாது என்ற உண்மை நிதர்சனமாகி கிடக்கும் இன்றைய சூழ்நிலையில், கல்முனை நகரில் வாழும் பல்லின சமூகத்தவர்களும் தங்களது சமய சமூக விழுமியங்களோடு நல்லிணக்கம், விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு போன்ற மானிடப் பண்புகளை கடைப்பிடித்து நல்லுறவோடு வாழ்வது காலத்தின் கட்டாயமானதாகும்.

ஏ.எல்.எம்.ஸினாஸ் B.A (Hons)
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி
0772282919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மர நடுகை விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு



வெலஸ்முல்லையில் நடைபெற்ற தேசிய சாகித்திய விழாவின் போது
கர்நாடக சங்கீதப் போட்டியில் வெற்றியீட்டியமைக்காக பெற்றுக் கொண்ட விருது - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச கலாசார விழா - 2014



புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட விஷேட கலை நிகழ்வு - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டார் பாடல் பயிற்சிப் பட்டறை - 2017



கலாசார மத்திய நிலையத்தில் முதன் முதலில் பாடநெறிக்காக
அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் - 2013



கற்பிணித் தாய்மார்களுக்காக நடாத்தப்படும் விஷேட நிகழ்வு "செனஹச"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரம் நடுவோம் உரம் இடுவோம்

மரம் நடுவோம்
உரம் இடுவோம்
அதை மதித்து
நீரிடுவோம்

தென்னை மரங்களை
நட்டுவோம்
அது தரும்
தேங்காயைத் தட்டுவோம்

வாழை மரங்களை
நட்டுவோம்
நாம் வாழ வாழ
அது நன்றியுடன்
வாழைப்பழம்
காய் தரும்
அதைக குலை குலையாய்
வெட்டுவோம்.

நல்ல மா மரங்களை
நடுவோம்
எமது கஷ்டத்துக்கும்
அது உதவும்
காய் கனியை
விற்றுப் பணத்தை
பையில் இடுவோம்.

நிழல் தரும்
மரங்களை வைத்து
நீரிடுவோம்

மனிதர்கள் நிம்மதியாய்
களைப்பாறிப் போவார்
நாம் ஆண்டவன்
கருணையைக் பெறுவோம்

மரம் அது ஆண்டவன்
மனித குலத்துக்கு
கொடுத்த வரம்

மரம் மட்டுந்தான்
மனிதனோடு அதிகம்
ஒட்டி வாழும்
மரங்கள் இல்லையே
மனிதர்கள் இல்லை
மரங்களால் மனிதர்களுக்கு
ஒரு போதும் இல்லையே
தொல்லை.

புதுமணத் தம்பதிகளுக்கு
கட்டில் தரும்
பிள்ளை பெற்றால்
தொட்டில் தரும்

மானிடன் மரணித்தால்
பெண்கள் கடக்கும்
வரை வருவார்
ஆண்கள் காடுவரை
வருவார்.

எம்மோடு
கடைசிவரை
துணையாய் வருவது
மரம் மட்டும்தான்
எனவே மரங்களை
மதிப்போம்
நாம் உயிரோடு
இருக்கும் போது
அதனைத் துதிப்போம்

மரங்களை நட்டவன்
மண்ணறை செல்வான்
அதன் நிழலில் இருந்து
மக்கள் பிராத்தனை
செய்தால்
நிச்சயம் அதன்
நன்மையை அடைவான்

பேரீத்தம் மரங்களை
வைப்போம் - அது
பாளை போட்டு
குலை தள்ளும்
பார்ப்பதற்கு
பல வகையான
பழங்களைத் தரும்
பேரீத்தம் மரம் என்றால்
ஒரு சிலர் வெறுப்பார்
அதன் பழங்களைச்
சுவைப்பார்

மரங்களை உருவாக்கினால்
நாட்டுக்கு நல்ல
மழை தரும்
எம் நாடோ
இயற்கை வளம்
பெறும்

உலகன் சுவாசம்
அமேசன் தீயால்
அழிந்தன
அதனைக் கண்டு
அகிலத்தார் கண்களில்
கண்ணீர் வடிந்தன

நாட்டின் வருமானம்
காடுகளில் உள்ளன.
எனவே காட்டை
காத்து
நன்மை அடைவோம்.

காட்டுக்கு ஆபத்து
என்றால்
நாட்டுக்கு ஆபத்து
என்று நினைப்போம்

எனவே மரம்
நடுவோம்
மரம் நடுவோம்
மதித்து அதற்கு
உரமிடுவோம்.

இப்றாஹிம் எம்.றபீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை கலாசார
மத்திய நிலையம்
நான் கருத்தரித்து
தங்கியிருந்த தாய்மடி

கனநாளாய் காதலித்து
காலம் வரும்வரை காத்திருந்து
நான் கருவுற
காரணமாய் அமைந்தது
கலாசார அபிவிருத்தி சபை

பிறந்தபின் பிள்ளைக்கு
பெயர் வைத்து அழைப்பதே
பெற்றவர் கடமை

நான் பிறக்குமுன்னே
பெயரோடு பிறந்தவள்
அதனால்தான்
இந்தப் பெருவிழா

கடல்வாசல் கரையினிலே
கலாசார அரங்கினிலே
கலைவாசல் பெயரோடு - இந்த
கலியுகத்தில் பிறந்தவள்

அழகான பிள்ளையாய்
அறிவான குழந்தையாய்
பலருக்கும்
பயன்தரக்கூடியவளாய்
நான் பிறந்திட வேண்டுமென்று
பிரயாசப் பட்டவர்கள் பலர்

கவிஞர்களின்
கற்பனை சிற்பிக்குள்
விலைமதியா
சிந்தனை துளிகளால்
வித்தாகி முத்தாகி
கலைவாசல் தாள்களிலே
கவிதைகளாய்
களைகட்டி ஜொலிக்கிறது

எழுத்தாளர்களின்
எழுதுகோல்
உழுது விதைத்த
சொல்லென்னும் மணிகளால்
அறுவடை செய்யப்பட்ட
பல கட்டுரைகளை
கலை வாசல்
தாங்கி நிற்பதில்
தன்னிகரில்லா
மகழ்ச்சி அடைகிறது

மருதமுனை மண்ணிலே
மக்கள் உங்கள் கரங்களிலே
மலராக நான் தவழ்ந்து
மடலாக விரிகிறேன்.

வாசகர்கள் மனதிலே
வாசம் தரும் வரிகளால்
உள்ளத்தில் இடம்பிடித்து
உங்கள் இல்லத்திலும்
நான் குடியிருப்பேன்

*நன்றி*
*கவியாக்கம்*
*கவிஞர் ஜீனாறாஜ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்முனையின் பொது நிர்வாகம்**

இலங்கையின் பொது நிர்வாகம் 1946ம் ஆண்டு வன்னிமைகள் நிர்வாக முறை இல்லாமலாக்கப்பட்டதோடு D.R.O. இறைவரி உத்தியோகத்தர் முறை உருவானது. கரைவாகுப் பற்றின் கடைசி மென்னிமையாக கேட்ட முதலியார் M.S.காரியப்பர் அவர்கள் இருந்தார்கள்.

DRO முறையின் முதற்காரியாலயம் மணற்சேனையில் உள்ள ஜோசப் காடியார் என்பவரது இல்லத்தில் இயங்கியது. 1958 காலப்பகுதியில் கந்தவாசா கட்டடத்தில் இயங்கியது. 1973 இல் கல்முனை பட்டினசபை கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

1978 ம் ஆண்டு 23 நிருவாக சேவைகள் பிரிவுகளாக இருந்த கல்முனை பிரதேசம் கரைவாகுப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவாக காணப்பட்டது. இதன் போது கரைவாகு பற்றின் எல்லைகளாக. மாளிகைக்காடு வீதி, மேற்கே துரைவந்தியமேடு ஆற்றையும் கொண்டதாக மேலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

**பிரதேச சபையின் நிர்வாகம்**
**கரைவாகு பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

**பிரதேச சபையின் நிருவாக எல்லைகள்**

கரவாகுப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு

வடக்கு - துறைவந்தியமடுவுக்கு அண்மையில் ஏரியின் மத்திய புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் மீண்டும், கிழக்கு நோக்கியும் அங்கிருந்து கார்ட் வீதியின் மத்திய கோடு நெடுகிலும் கடற்கரைக்கு (அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட எல்லை)

**கிழக்கு - கார்ட் வீதியிலிருந்து மளியக் கட்டு வீதிக்கு கடற்கரை நெடுகிலும்.**

தெற்கு - கடற்கரை நெடுகிலும் மளியக்கட்டு வீதியின் மத்திய கோடு நெடுகிலும், கொழும்பு மட்டக்களப்பு பெருவழிக்கு அங்கிருந்து சொல்லப்பட்ட பெருவழியின் மத்திய கோடு நெடுகிலும் காரைதீவு சந்திக்கும் அங்கிருந்து காரைதீவு - சம்மாந்துறை பெருவழி நெடுகிலும் மாவடிப்பள்ளி பள்ளிவாசலுக்கு அங்கிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் கும்புறுகொட இடத்தின் எல்லை நெடுகிலும் மீண்டும் காரைதீவு, சம்மாந்துறை பெருவழியின் மத்திய கோட்டுக்கு, அங்கிருந்து சொல்லப்பட்ட மத்திய கோடு நெடுகிலும் வெட்டை ஆறுக்குக் குறுக்காகவுள்ள மதகின் மத்தியபுள்ளிக்கு.

மேற்கு - கடைசியாகக் கூறப்பட்ட மதகின் மத்திய புள்ளியிலிருந்து வேட்டை ஆறின் மத்திய கோடு நெடுகிலும் வடக்கு நோக்கி துறைவந்தியமடுவுக்கு அண்மையிலுள்ள ஏரியின் மத்திய புள்ளிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட 23 கிராம சேவைகர் பிரிவுகளும் இவ்வாண்டில் 76 ஆக வகுக்கப்பட்டது.

02 பிரிவாக காணப்பட்ட பெரிய நீலாவணை - 07 பிரிவாகவும்
02 பிரிவாக காணப்பட்ட மருதமுனை - 06 பிரிவாகவும்
02 பிரிவாக காணப்பட்ட பாண்டிருப்பு - 08 பிரிவாகவும்
02 பிரிவாக காணப்பட்ட நற்பிட்டிமுனை - 08 பிரிவாகவும்
01 பிரிவாக காணப்பட்ட சேனைக்குடியிருப்பு - 03 பிரிவாகவும்
03 பிரிவாக காணப்பட்ட கல்முனை - 13 பிரிவாகவும்
05 பிரிவாக காணப்பட்ட கல்முனைக்குடி - 14 பிரிவாகவும்
06 பிரிவாக காணப்பட்ட சாய்ந்தமருது - 17 பிரிவாகவும்
வகுக்கப்பட்டது.

2001.02.04 சாய்ந்தமருது தனியான பிரதேச செயலகமாக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் 1989.04.12 இல் கல்முனையின் உதவி அரசாங்க அதிபராக M.H.முயினுடீன் அவர்கள் கடமை செய்தார். அப்போது தமிழ் ஆயுத தாரிகளும், பொது மக்களும் AGA காரியாலயத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த அலுவலர்களில் சுமார் 30 பேரை வேறாக்கி அந்த கட்டிடத்தின் ஒரு அறையில் சட்டவிரோதமாக ஆயுத முனையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் தமிழ் பிரிவு என ஒரு நிர்வாகத்தை ஆயுத முனையில் பலவந்தமாக ஆரம்பித்தார்கள். இது பின்னர் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான கட்டிடடத்திற்கு மாற்றப்பட்டது.

1992 ம் ஆண்டின் 58 ம் இலக்க அதிகாரப் பரவாக்கச் சட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்களாக உருவாக்கம் பெற்றது. அதிகாரங்கள் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டது. கல்முனை மாநகர சாலை வளவுக்குள் 1993.10.10ம் திகதி கௌரவ வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மர்ஹூம் A.R.மன்சூர் அவர்களால் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

1989.04.12 இல் தனியாக ஆயுத முனையில் பிரித்து செல்லப்பட்ட AGA தமிழ் காரியாலயம் பிரதேச செயலாளர் நிர்வாகத்தின் போது ஒரே கூரையில் இயங்க வேண்டிய உப பிரதேச செயலாளர், உப பிரதேச செயலாளர் கல்முனை பிரதேச செயலாளர் முன் பதவி ஏற்றுவிட்டு வேறு கூரையின் கீழ் பிரதேச செயலாளர் தமிழ் பிரிவு என்று இயங்கியது. பின் கல்முனை வடக்கு, கல்முனை பிரதேச செயலக உப அலுவலகம் (வடக்கு) என நாளுக்கொரு பெயர் கொண்டு இயங்குகிறது.

அக்காரியாலயம் சுனாமியின் பின் கட்டப்பட்ட இலங்கை வங்கி வீதியில் இயங்குகிறது. இக்காரியாலயம் உப பிரதேச செயலகம், கல்முனை என அழைக்கப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக பின்வருவோர் கடமையாற்றினார்கள்.

1. ஏ.எல்.எம்.பழீல் - 1992 - 1994
2. எம்.ஐ.அமீர் - 1994 - 1995
3. ஏ.எல.எம்.பழீல் - 1996 - 2003
4. ஏ.எச்.எம்.அன்சார் - 2003 - 2007
5. ஏ.மன்சூர் - 2007 - (ஜூன்)
5. எம்.எம்.நௌபல் - 2007 - 2014
7. ஐ.எம்.ஹனிபா - 2014 (மே)
8. ஏ.மங்கள விக்ரம ஆராச்சி - 2014 - 2015
9. எம்.எச்.எம்.கனி - 2015 - 2018
10. எம்.எம்.நஸீர் - 2018 - இன்றுவரை

கல்முனையின் பொது நிர்வாகம் ஒரே கூரையின் கீழ் இயங்காமல் பிரதேச செயலாளரும், உப பிரதேச செயலாளரும் வேறு கூரையின் கீழ் இயங்குவது இனமுரண்பாடுகளையும் நிர்வாக சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றதை அண்மைக்கால செயற்பாடுகள் உணர்த்துகின்றது.

இன முரண்பாடுகளை களைந்து ஐக்கியமாக வாழ கல்முனையின் பொது நிர்வாகம் ஒரே கூரையின் கீழ் இயங்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஹாஜி. நஸீர்
04.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்



இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் உலகின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் காணப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பது நவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி ஒருவருக்கொருவர் தகவல்களை பரிமாறிக் கொள்வதையே குறிக்கின்றது. ஆரம்ப காலங்களில் அதாவது 20 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலங்களில் மனிதன் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக பல்வேறு வகையான யுத்திகளை கையாண்டான். உதாரணமாக புறா விடுதல், புகை மூட்டல், பறை அடித்தல், அம்பு எய்தல், அஞ்சல் ஓடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் குறிப்பாக முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பிற்பாடு கணினியின் கண்டுபிடிப்பின் காரணமாக இந்த புராதன தகவல் தொடர்பாடல் முறைகள் செயல் இழக்க ஆரம்பித்தன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் எனும்பொழுது கணனி மற்றும் கையடக்கத்தொலைபேசியினையே அது குறித்து நிற்பதை நாம் அவதானிக்கின்றோம்.

கணினியின் ஆரம்ப காலத்தில் கணினியானது கணித ரீதியான வேலைகளை மாத்திரமே மேற்கொள்வதற்காகவே இவை உருவாக்கப்பட்டன. ஆனால் அதன் பிற்பட்ட காலங்களில் கணனி இல்லாமல் இவ்வுலகமே இயங்காது என்ற நிலை தோன்றியுள்ளது என்றால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி, இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் எந்த அளவுக்கு உச்சத்தை அடைந்துள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அதேபோல் ஆரம்ப காலங்களில் ஒரு தகவல் ஒருவரை சென்றடைய வேண்டுமாக இருந்தால் நாள் கணக்கில் மாதக்கணக்கில் காத்திருத்தல் வேண்டும் ஆனால் இன்று ஒரு தகவல் ஒரு நொடிப்பொழுதில் பல லட்சக்கணக்கான நபர்களை சென்றடைவதானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்ச கட்டமேயாகும்.

இவ்வாறு தனித்து விளங்குகின்ற தொடர்பாடல் தொழில் நுட்பமானது உலகில் காணப்படுகின்ற அனைத்து துறைகளிலும் பின்னிப்பிணைந்து செல்வதனை காணலாம் குறிப்பாக சுகாதாரத் துறை, போக்குவரத்துத் துறை, பொருளாதார துறை, வங்கித் துறை, கல்வித் துறை, விவசாயத்துறை என்பவற்றை குறிப்பிடலாம்.

சுகாதாரத் துறை எனும் போதும் ஒரு நோயாளி தனது வீட்டில் இருந்தவாரே வைத்தியரின் ஆலோசனைகள் மற்றும் மருந்து வகைகள் என்பவற்றினை பெறக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை அபிவிருத்தி அடைந்த சில நாடுகளில் தொழில்நுட்பத்தின் உச்சகட்டம் ஒரு நோயாளிக்கு ரோபோக்களை பயன்படுத்தி சத்திரசிகிச்சையை மேற் கொள்ளக் கூடிய அளவுக்கு இன்று தொழில்நுட்பம் காணப்படுகின்றது.அதாவது குறித்த சத்திரசிகிச்சை நிபுணர்கள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வழங்குகின்ற கட்டளைகளைக் (தகவல்களை) கொண்டு இவ்வகையான ரோபோக்கள் தங்களது பணிகளை செவ்வனே செய்து வருகின்றன.

அதேபோன்று போக்குவரத்து துறை இனை நாம் எடுத்து நோக்கும் போது ஒரு பிரயாணி தனது வீட்டில் இருந்தவாரே சுயமாக தனது பிரயாணத்திற்கான கடவுச்சீட்டு, ஏனைய மற்றும் பயணச்சீட்டு என்பவற்றை முன்கூட்டியே பதிவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் கடல் வழி, தரைவழி மற்றும் ஆகாய போக்குவரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிக்க கூடியதாகவும் அவற்றை இலகுவாக தொடர்பு கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றமையானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியையே சாரும்.

மேலும் கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலானது அளப்பரிய சேவைகளை செய்து வருகின்றது. குறிப்பாக மாணவர்களுக்கு தேவையான ஆரம்பக் கல்வி முதல் முதுதத்துவமானி வரையிலான கல்வி தரவுகளை பெறக்கூடியதாக இருக்கின்றமையானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் எந்த அளவுக்கு கல்வித் துறையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை ஊகிக்க கூடியதாகவும் இருக்கின்றது. இவ்வாறு அனைத்து துறைகளிலும் தனது அளப்பரிய சேவைகளை செய்து வருகின்ற தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமானது மனிதனின் நலனினை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட விடயங்கள் அவற்றின் உன்னத செயற்பாடுகளில் இருந்து விலகிச் சென்று இன்று மனிதனை அழிவின் விழும்பில் கொண்டு சென்றுள்ளது என்றால் யாராலும் மறுக்க முடியாத நிதர்சனமான உண்மையாக இருக்கின்றது.

உதாரணமாக சில விடயங்களை கூறுவதாயின் தகவல் தொடர்பாடலுக்காக உருவாக்கப்பட்ட கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசியை எடுத்து நோக்குவோமாயின் அவை அவற்றின் சிறப்பான நோக்கத்தை அடைய பயன்படுத்துவதைவிட தேவையில்லாத அநாகரிகமான, ஆபாசமான விஷயங்களுக்காகவே இவை இன்று பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன என பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வறிக்கைகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. உதாரணமாக ஆபாசமான வீடியோக்களை பார்வையிடும் நாடுகளின் பட்டியலில் எமது நாடு (இலங்கை) முதலாவது இடத்தில் இருக்கின்றது என்பதை எம்மால் ஒருபோதும் மறக்க முடியாது. இத்தரவினை 2012 ஆம் ஆண்டு கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள அதேவேளை இந்தியா, பாப்புவா, எத்தியோப்பியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் முதல் ஐந்து இடங்களையும் பிடித்துள்ளது என்பதும் இதில் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இத்தகவல் தொடர்பாக தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இன்னும் ஒரு நபரின் உடைய அல்லது ஒரு நிறுவனத்தினுடைய இரகசிய தகவல்களை களவாடக்கூடிய சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்ற அதேவேளை இதனால் நாளாந்தம் தற்கொலைகளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அதுமட்டுமன்றி ஆரம்ப காலங்களில் இருந்த சமூக ஒற்றுமைகள், சமுக விழுமியங்கள் மற்றும் கலாச்சாரங்கள் யாவும் அருகி இன்று பல்வேறு பட்ட சமூகவிரோத செயற்பாடுகளும் சமூக சீரழிவுகளும் மலிந்து காணப்படுகின்றன இதற்கு பிரதான காரணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வியலின் அபரிமிதமான வளர்ச்சி யே காரணம் என சமுக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆக இறுதியாக மனிதனின் நலனுக்காக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை மனிதனின் நலனை மேம்படுத்துவதற்காக மாத்திரமே பயன்படுத்தி ஒரு ஒழுங்கான, ஒழுக்கமுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சமூகமாக வாழ முயற்சிக்க வேண்டும்.

"நாமே நமக்குரிய புதைகுழியினை தோன்றாமல்
இருக்க முயற்சிப்போம். வாழ்வு வளமாகும், நாடு செழிப்பாகும்."

A.L.Abdul Basith (BA in ICT. Dip in computer science, CAA-L3)
VISITING LECTURER
TECHNICAL COLLEGE
AKKARAIPATTU.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அங்கே ஒரு ஜனாஸா வீடு

"நிஸா... நிஸா..." என்னம்மா கடும் யோசனையில இரிக்க மாரி விளங்குது..."

"என்ன இவள் அசையாம இரிக்காள்"

"ஏய்...! என்று ஸிறீன் சத்தம் போட, மெல்ல திரும்பினாள்... நிஸா. "என்ன நடந்த ஒனக்கு?" "ஆழ்ந்த யோசனையில் இரிக்காய்??"... "ஒன்டும் அல்ல ஸிறீன்." "யாருக்கிட்ட கத உடுகாய்?"... "ஒன்னப்பத்தி எனக்கி தெரியாதா என்ன? "சொல்லு என்ன ஆச்சு?" "காரணம் இல்லாம நீ இப்படி இரிக்க மாட்டியே..." என்று நிஸாவின் தலையைத் தடவினாள் ஸிறீன். ஸிறீனின் கையைப் இறுகப் பிடித்துக் கொண்டாள் நிஸா. "என்னம்மா நடந்த? எங்க போனாய்?" "என்னவோ ஒன்ட மனசை தாக்கிற்று சொல்லு!" நிஸா இளகிய மனம் கொண்டவள். நிஸாவைப் பற்றி பூரணமாக புரிந்தவள் ஸிறீன். ஸிறீனும் நிஸாவும் நெருங்கிய உயிர்த் தோழிகள். கண்களில் கண்ணீர் துளித்துளியாய் வெளிவர அதனைத் துடைத்தவளாய் எழுந்து நின்றாள் நிஸா. விடயத்திற்கு வருவதற்கு முன் வெறொரு விடயத்தை ஸிறீனிடம் நிஸா கேட்க வந்தாள்...

"ஸிறீன் நம்மட ஊரிலே ஸனாஸா அறிவித்தாலோ இல்லாட்டி கோள் வந்தாலோ இல்லாட்டி நம்மட பக்கத்து வீட்டு யாராச்சும் மௌத்தானதாம் என்டு கேள்விப் பட்டா நம்ம என்ன செய்வோம்? மௌத்தான ஊடு எப்படி இரிக்கிம்?? அந்த ஏரியாவே எப்படி இரிக்கிம்?" "இதென்ன கேள்வி நிஸா, மௌத்தான ஊடென்டாலே அப்படி ஒரு சனக் கூட்டம். ஊர்க்காரர்கள், ஒறவுக் காறாக்கள் எல்லோரும் நெறஞ்சி ஊடுவாசலே எடம் காணாம இரிக்கிம். அது மட்டும் இல்ல கொஞ்சநாளைக்கி சனமாவே இரிக்கிம். பக்கத்திலே இருந்துக்கு ஆறுதலே சொல்லுவாங்க மௌத்தான வீட்டாக்களுக்கு. அது செரி ஏன் இத இப்ப நீ கேக்காய்? மொதல் விசயத்துக்கு வாவன்." "விசயம் இதிலதானே இரிக்கி ஸிறீன்." "என்ன? விசயம் இதிலதான் இரிக்கா?" "செரி விசயத்த சொல்லு பாப்பம்" என்றாள் ஸிறீன். "ஹூம்... நேத்து எங்கட தூரத்து சொந்தக்காற மாமி ஒன்டு மௌத்தானதாம் என்டு கோள் வந்திச்சு.

நாங்களும் வெளிக்கிட்டு எல்லோரும் உடனே போயிட்டம். மாமிர வீடு மெயின் றோட்ல இருந்து 200 மீட்டர் தூரம் உள்ளுக்கு போகனும். அப்படி போய் இன்னொரு சின்ன ஒழுங்கையால போனாத்தான் மாமிர ஊடு வரும். நாங்க ஆட்டோவில் போனதால ஒழுங்கையிலேயே ஆட்டோவ நிப்பாட்டினம். அவடத்தையே இறங்கி நடந்து போகும் போது என்ர மனசில் ஒரு சலனம் ஆரம்பிக்குது..." ஏன் ஒனக்கு அப்படி ஒரு சலனம்?" என ஸிறீன் கேட்க...," ஏனென்டா மௌத்தான ஊட்டு வாசல்ல, றோட்டுலயெல்லாம் கூடாரம் அடிச்சிருப்பாங்க, அங்குமிங்கும் ஆக்கள் மயமா இரிக்கிம், கதிரைகள் நிறையக் கெடக்கும் சனங்கள் வந்தா இருப்பாட்டணுமே அதுக்கு. அது அங்க ஒண்டுமே இல்லாம இருந்திச்சே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ அப்ப ஒனக்கு வந்த கோள் தவறுதலா வந்திச்சோ?" என்று ஸிறீன் கேட்க...
"சரியாத்தான் சொன்னாய்....

நீ யோசிக்க மாரித்தான் நானும் யோசிக்கத் தொடங்கினன்... சரி வாசலுக்கு போனா விளங்கும் என்டு எனக்கே நான் மனசுக்குள்ளேயே ஆறுதல் படுத்திக்கிட்டு மெல்ல நடந்தன். வாசல்ல கால் வச்சதும் அதிர்ச்சியில உறஞ்சு போயிற்று என்ர இதயம். மாமி மௌத்தாகிட்டாங்களா?
இல்ல மரணப்படுக்கையா? ஒண்டும் விளங்குதில்லையே... உள்ளுக்குள்ளே முணுமுணுத்துக்கே நடந்து போறன்... அங்க வாசல்ல 10, 15 உம்மாமார் இருந்தாங்க. ஆங்காங்கே ஒரளவு வயசான ஆம்புளயளும் நின்டாங்க. அங்க நின்ட ஆம்புளயள் சொந்தகக்காறாக்கள் எண்டு பொறகுதான் தெரிஞ்சுது". "என்னம்மா சொல்றாய்..." என ஸிறீன் தலை சொறிந்தாள்...
"பொறன் முழுசா கேளு! என்றாள் நிஸா. "செரி..செரி... சொல்லு!..."
"இன்னம் உள்ளுக்கு போகணும் முன்னால ஆம்புளயள் நிக்காங்க என்டு பின்னால (சமையல் அறை வழி) போனன். அங்கேயும் ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்திச்சி..."

""ம்ம்..." என்று தலையை உயர்த்தி நிமிர்ந்து நிஸாவைப் பார்த்தாள் ஸிறீன்.
"அங்கபோனா மாமிச்சுத்தி (ஜனாஸாவைச் சுற்றி) பெரிய பொம்புளயள்

உம்மாமார் ஒரு 15, 18 பேர் இரிக்கிம் அவங்க வளச்சிக்கி ஏதோ ஒன்ட புதினம் பாக்க மாதிரி நிக்காங்க. பக்கத்துல எங்கட மச்சிக்காறி கொளறி கொளறி நிக்கா. ஒரு பக்கம் ஜன்னல தொறந்து போட்டுட்டு வெளியாலயும் கொஞ்ச பொண்டுகள் புதினம் பாக்காங்க..." "நிப்பாட்டு... நிப்பாட்டு... இதென்ன ஜனாஸா ஊடா? இல்ல உலியாண ஊடா? ஒனக்கு கோபம் வரலயா நிஸா? எனக்கு கோபம் வரலயா வி.பி ஏறி... நெஞ்சு வெடிச்சு ரத்தம் கொதிச்சிது...."
உயர் மூச்சு வாங்கியவளாய். ஆத்திரம் பொங்கியபடி பேசினாள் நிஸா, ஸிறீனிடம். "யா அல்லாஹ்!
என்னால் நம்பவே ஏலாம இரிக்கிதே...

அது செரி ஜனாஸாவை வளச்சி நிண்டு புதினம் பாத்த பொம்புயள சும்மா பாத்துக்கா நிண்டாய்?" என்றாள் ஸிறீன் கடுகடுத்த கோபத்தோடு. "சும்மா உடுவனா நான் முன்னொருகாலங்கள்ள பேசவேண்டிய இடங்கள்ள பேசாம ஊமையா இருந்து நிறைய இழந்திட்டன் ஸிறீன். இனியாவது வாய் தொறந்து பேசுவொமே என்டு வார்த்தையால அந்த பொம்புளயள கடிச்சு கொதறிட்டன். அவடத்த நிண்டமாரி மெதுமெதுவா நகர்ந்து போனாங்க கொஞ்சப்பேர். "என்றாள் நிஸா. ஓடி வந்து கைகொடுத்துவிட்டு, "சூப்பர் நிஸா இந்த நிஸாவைத்தான் நான் எதிர் பார்க்குறன். வெரிகுட் "என்றாள் ஸிறீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செரி நிஸா அந்த ஜனாஸாவை வளச்சி ஏன் நின்டாங்க எல்லோரும்?" "ஜனாஸாவை குளிப்பாட்டுறதத்தான் பாத்துக்கு நின்டாங்க ஸிறீன்." "அல்லாஹ்வே!...

என்ன நிஸா சொல்றாய்? "மீண்டும் மீண்டும் அதிர்ச்சியில் ஸிறீன் உறைந்தே போனாள். "ஓ.. புதினம் பாக்கமாரி நல்லா பாக்க வேண்டியது மறுகா ஊரெல்லாம் போய் ஜனாஸாவைப் பத்தி கொற கதச்சி திரியிற. இதுக்குத்தானே குளிப்பாட்டுறதுக்கு ரத்த உறவுகள் மட்டும் அனுமதிச்சிருக்கு இஸ்லாம்." என்று ஸிறீன் முடித்து மீண்டும், "செரி அங்கே ஒங்கட மச்சிக்காறி மட்டும் கொளறிக்கி நிண்டா என்டு சொன்னாய் ஒங்க மாமிக்கி பிள்ளையள் எத்தின?..." "எங்கட மாமிக்கு ஒரு மகளும் ஒரு மகனும்தான். மச்சிக்காறிதான் ரெண்டாவது. மகன் மூத்தவர் அவர் வெளிநாட்டுல இப்ப." " அப்ப் ரெண்டு பேரும் கலியாணம்?..." "ம்ம்... முடிச்சிட்டாங்க! ஆனா மாமிர குடும்பம் பெரிசு ஸிறீன்." "அவங்கட சம்மந்தக் காராக்களே வரலயா?" "ஒரு சம்மந்தத்திலே இருந்து ஒருத்தர்தான் ஸிறீன் வந்திருந்தாங்க..." என்று கவலையாக சொன்னாள் நிஸா. "ஹ்ம்ம்.." பெருமூச்சு விட்டவளாய்... "ஆக்களையே காணல கொஞ்சப்பேர்தான் நிண்டாங்க என்டு சொன்னாய், ஜனாஸாவை தூக்குற நேரமாவது யாராச்சும் வந்தாங்களா?..." "அதத்தானே இப்ப சொல்ல வந்த நான்,
புதினம் பாத்தவங்களை பேசி வெளியாக்கிட்டு, நானும் ஓரிடத்த போய் இருந்திட்டன். சரி இனித்தான் அயலவர் அடுத்தவர் வருவாங்களோ எண்டு மனசை நானே ஆறுதல் படுத்தி எதிர்பார்த்தன், ஏமாற்றமே கெடச்சது. கபனிட்டும் முடிஞ்சிற்று, மீண்டும் ஒரு அதிர்ச்சி எனக்கி காத்திருந்திச்சு..." "குளிப்பாட்டிய உம்மாக்கு காசு கொடுத்து அனுப்புங்க" "எண்டு ஆண் தரப்பிலிருந்து குரலொண்டு வந்திச்சு."

"வெந்த புண்ணுல வேல் பாஞ்சமாரி இரிந்திச்சு ஸிறீன்." "குளிப்பாட்ட கூலியா???... "யா அல்லாஹ்! "என்ன சொல்றாய் நிஸா!" "இதே கேள்விதான் என்னைப் போட்டு கொடஞ்சுது. அது மட்டுமில்ல ஸிறீன் இன்னொரு விசயத்தையும் கேளு" "மேலே மேலெ நீ சொல்றத கேக்க கேக்க நெஞ்சு பொறுக்குதில்ல நிஸா." ஒனக்கே இப்பிடி இருக்கிது என்டா நான் அவடத்த எப்படி இருந்திருப்பன்? ஹூம்... "பெருமூச்சு விட்டவளாய் நிஸா. "ஜனாஸா அடக்கம் செஞ்சிட்டு ஆக்கள் வந்தாச்சு. மையவாடிக்கு எத்தன பேர் வந்தாங்க வாப்பா? என்டு உள்ளுக்கு வந்த வாப்பாக்கிட்ட கேட்டன்." "அங்க பெரிசா ஆக்கள் வரல. இஞ்ச நின்டவங்களோட மேலதிகமாக ஒரு 10 பேர் மட்டுக்கு வந்தாங்க என்டு வாப்பாவும் அலுத்துக்கிட்டார்.." "என்னால் இதைக் கேட்டதும் அங்க இரிக்கவே முடியல ஸிறீன்." உடனே கொஞ்சம் தள்ளி இருக்கிற மத்த மாமி ஊட்டுக்கு போய் இருந்திட்டு வந்தன்." "என்ன நிஸா நீ சொல்றத பாத்தா எல்லாம் சேத்து ஒரு 30, 40 பேர்தான் ஜனாஸாவோட போனமாரி விளங்குது." "போனமாரி இல்ல ஸிறீன் அவ்வளவு பேரும்தான் போன." "செரி நீ சொன்னியே குளிப்பாட்ட காசு குடுத்த என்டு. எவ்வளவு குடுத்தாங்க." "அதுவா அது 2100/-"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஆ.... 2100/- ஆ..." என்று வாயைப் பிளந்தாள் ஸிறீன். "அந்தளவுக்கு குளிப்பாட்ட குடும்பத்துல ஒருத்தரும் இல்லயா? நீதானே சொன்னாய் மாமிர குடும்பம் பெரிசு என்டு." "பெரிசுதான் ஆனா அவங்க யாரும் முன்வரல யாருக்கும் தெரியாதாம் குளிப்பாட்ட" என்று நிஸா மனவேதனையைக் கூறினாள். "எனன நிஸா இந்த காலத்துல இப்படி ஒரு அறியாமையா?.. பாமர மக்கள் இன்னமும் இரிக்காங்கதானே..."

"ஓ ஸிறீன். இதில நாம இன்னொரு விசயத்த யோசிக்கனும் ஸிறீன் அங்க யாரு மௌத்தானாலும் அந்த வயதான உம்மாதானாம் குளிப்பாட்டுறதாம் என்டு விசாரிச்ச போது தெரிச்சிது." "அப்ப அந்த வயதான உம்மா மௌத்தானா யாரு குளிப்பாட்டுறதாம்?..." என்று ஸிறீன் கேள்வியைப் போட்டாள்." இதைத்தான் நானும் அங்கு கேட்டேன். அவங்க பதில் தெரியாம தடுமாறினாங்க ஸிறீன்."

குளிப்பாட்ட தெரியாம ஒரு ஜனாஸாட கடம தெரியாம, மனிதநேய பண்பாடுகள் தெரியாம இன்னும் வாழுற மனித நேயமற்ற மக்கள் இருக்கத்தான் செய்றாங்க ஸிறீன்." "ம்ம். உண்மைதான் நிஸா. இது போல அந்த ஊருல மட்டும் இல்ல நிறைய இடங்கள் இரக்கும். நமக்கு தெரியாம இரிக்கலாம். அப்படியான சனங்கள, இடங்கள அறிஞ்சு அறிவு புகட்டப்படனும் நிஸா." "ம்ம். நீ சொல்றது செரிதான். அது மட்டுமல்ல ஸிறீன் அங்க பணமும் பதவிகளும் உயர்ந்த கட்டடங்களும் ஏராளமா இரிக்கி மனித நேயம் மருந்துக்கும் இல்ல. இழப்பு வீடுகள்ள ஆறுதல் கட்டாயம் தேவ ஸிறீன் அதுக்கு கூட சொந்தக்காரங்களாவது நிக்கலயே உடனே போயிட்டாங்க. எல்லாம் முடிஞ்சு இரவாக அந்த ஊடு வெறிச்சோடிக் கிடந்திச்சு ஸிறீன்." "என்ன மனசு பாசு ச்சே...

எண்ணி கணக்கெடுக்க ஏலாதளவுக்கு சனம் வரும் நம்மட ஊருல. இதென்னடா என்டா விசித்திரமா இரிக்கி கவலயாவும் இரிக்கி. ஹூம்.." என்று அலுத்தாள் ஸிறீன். "பணக்காரங்களுக்கு ஒரு மதிப்பு, ஏழைகள ஒரு விதமா ஒதுக்கி பாக்குறாங்க ஸிறீன்." தொய்ந்த குரலில் நிஸா கூறினாள்." என்ன நிஸா பணம்? பிணமாகும் வரைக்கும்தான் இந்த பணம்.

குணம் இல்லாத இடத்த பணம் என்னத்துக்கு. இத உடு நாம என்ன செய்யலாம். நீ கவலப்படாத நிஸா."

"இல்ல ஸிறீன் இந்த விசயத்த நான் உட மாட்டன் இந்த சமூகத்துக்கு இத நான் எடுத்து சொல்லனும் இப்பிடியும் நடக்குது. இது போல கல்நெஞ்சு மனங்கள் இரிக்க கூடாது ஸிறீன்." என்று ஆவேசப்பட்டாள் நிஸா." ஆ... வெரி குட் நிஸா. நல்ல விசயம்தான். நீதானெ ஏற்கனவே பேப்பர்களுக்கு எழுதிக்கிட்டு இரிக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையும் ஒரு சிறுகதையா எழுதி போடன். அப்ப நீ நினைக்க மாரி எல்லாருக்கும் விசயம் போய்ச்சேரும்." "றியலி சூப்பர் ஸிறீன். எனக்கு இந்த ஐடியா வரலயே...."

"ஒனக்குத்தானே வரணும் நீதானே எழுதுறவள்." "பேப்பருக்கு இல்ல ஸிறீன் எங்கட கலாசார விழா ஒன்டு நடக்கப் போகுது அதில ஒரு சஞ்சிகை ஒன்டு வெளியிடப் போறாங்க அதுக்கு நான் இத சிறு கதையா எழுதி குடுப்பம் என்டு பாக்கன்." " இது நல்லா இரிக்கி இப்பிடியே செய்யன்."

"அப்ப தலைப்பொன்டு நீயே சொல்லு நான் அத வைக்கிறன்." "தலைப்பா?? நீதானெ எழுதுறவ எனக்கென்ன தெரியும் இதெல்லாம்." "இல்ல ஸிறீன் நீ சொல்லு நான் வைப்பன்." "ம்ம்.....

என்ன வைக்கலாம்....."

"ஆ" "அங்கே ஒரு ஜனாஸா வீடு" "எப்படி இரிக்கி?" "சூப்பர் ஸிறீன். ஜஷாக்கல்லாஹ்." "பாறக்கல்லாஹ்

சரி நான் போய்வாறன் நீ எழுது நிஸா."

"சரி அஸ்ஸலாமு அலைக்கும் ஸிறீன்."

"வ அலைக்குமுஸ்ஸலாம் நிஸா."

மு.இ.ஹைறுன்னிஸா
(மருதமுனை நிஸா)
கவியாழினி
ஊடகவியலாளர்
Dip.in.Journalism (SEU)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை பெரும் பொக்கிஷம்



கலை கலாசார விழுமியங்களை தெளிவு படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் வெளியீட்டில் எனக்கும் சில விடயங்கள் எழுதுவதற்கு இடம் கிடைத்ததனால் நான் எனது திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சில வேலைத்திட்டங்களை கலைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்களுக்கு முன் வைக்கலாம் என நினைக்கின்றேன்.

அந்த வகையில்

- அமைதியான ஒழுக்கமான முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசம் ஒன்றை கட்டியெழுப்புதல் இதனுடைய ஒட்டுமொத்த நோக்கங்களாகும்.
- கலைஞர்களுக்கான அடையாள அட்டை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- உதவி அவசியமான கலைஞர்களுக்கு உதவித் தொகை எடுத்துக் கொடுத்தல்.
- நூல் வெளியீட்டாளர்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களின் நூல்களை கொள்வனவு செய்து கொடுத்தல்.
- கலாபூசன விருது வழங்கப்படுகின்றது.
- இலக்கிய விருது வழங்கப்படுகின்றது.
- பண்டிகை, கலை விழாக்கள் நடாத்தப்படுவது
- அரச சிறுவர் ஓவிய, சிற்ப விருது விழங்கப்படுகின்றது.
- எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக கையெழுத்துப் பிரதிகளை நூல் உருவாக்கம் செய்து கொடுக்கப்படுகின்றது.
- கலை மன்றங்கள், கலைச் சங்கங்கள், இசைக் குழுக்கள் பதிவு செய்து கொடுக்கப்படுகின்றது. இதன் செயற்பாட்டிற்கு நிதிகளும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- பிரதேச மட்டங்கள் தோறும் தேசிய, மாவட்ட போட்டிகளை நடாத்தி, இலக்கிய விழா நடாத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலைஞர்களின் நலன் விசாரிப்புடன் "கலைஞர் சுவதம்" என்னும் வேலைத்திட்டம அவற்றுடன் சான்றிதழ்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றன.
- நாடகப் போட்டி, இசைப் போட்டி, நடனப் போட்டி தேசிய மட்டம் வரை இடம் பெற்றுக் கொண்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு பிரதேசய மட்டத்திலும் கலாசார அதிகார சபையை உருவாக்கி பிரதேசத்திலுள்ள அனைத்து கலைகளையும் விழாக்கள் வடிவில் வெளிக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.
- அந்தந்த இனத்துக்குரிய கலை கலாசாரத்தை பாதுகாத்தல்.
- புகைப்படும் எடுக்கும் கலைஞர்களின் புகைப்படங்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- ஒவ்வொரு இனத்துக்குரிய பாரம்பரிய கலைகளை விழாக்களில் முதன்மைப் படுத்தல் (பொல்லடி, சீனடி, சிலம்படி, கம்புவீச்சு)
- மேலே சொல்லப்பட்ட விடயங்களோடு
- சித்திரம், சிற்பம், பேச்சு, அறிவிப்பு, கவிதை, வாசிப்பு, புகைப்படம், கட்டுரை, விவாதம், பாடல், கதைகள் எழுதுதல் போன்ற துறைகளில் பயிற்றுவிப்புக்கள் செய்வதோடு போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான வழிகளை அமைத்துக் கொடுகிறது.

எனவே மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தவிர்த்து இன்னும் பல வேலைத்திட்டங்களும் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரை எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.

இவ்விடயங்களை கலைஞர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைத்து மட்ட உத்தியோகத்தர்களும் அறிந்திருப்பது அவசியமாகும். கலைத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் "மனிதர்களில் ஒரு சிலரே அவர்களுக்குள்ள அறிவாற்றல் மிகவும் வித்தியாசமானது. விசித்திரமானது. அவர்களின் திறமை எளிதாக எவராலும் பெறமுடியாது. கலைகள் பெறுமதியானது அதனைக் காப்பவர்கள் மிகவும் பெறுமதியானவர்கள்"

இவைகளை பாதுகாக்க முன்வருவோம் செயற்படுத்துவோம் ஊக்குவிப்போம் என்று அனைவரையும் விழித்து எனது சிற்றாக்கத்தை முடிக்கின்றேன்.

ஆ.ர்.பௌசுல் ஹிபானா,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்வு அழகானது

உருளும் உலகில்
உருமாறி அலைகிறது
மனிதனின் வாழ்வியல்

வாழ்க்கைப் பாதையில்
அதீத ஆசைகள்
மனதை ஆட்கொண்டால்...
அழிந்தே தான் போகும்
அவரவர் வாழ்வுகள்

தீய எண்ணங்களுடன் - அடுத்தவருக்கு
தீங்கிழைக்கும் எவரும்
வாழ்வில் முன்னேறியதாய்
சரித்திரம் இல்லை

அத்து மீறிய செலவிற்குள் - பலர்
அள்ளுண்டு போவதால் தான்
நடுத்தெருவில் அலைகிறது
அவரவர் குடும்பம்.

வன்மம் அற்ற வாழ்வே
வேண்டும் என்று
பலரும் புலம்ப...

பல திக்கில் வாழ்வு
பலவிதமாய நகர்கிறது
பலரையும் தாவிக் கடந்து

ஒரு தரப் பிறப்பு
ஒரு தர வாழ்வு
ஒரு தர இறப்பு...
அதற்குள் ஏனோ !...
மனித மனங்களில் ஓராயிரம்
எண்ணங்கள்
முறை கேடாய்த் தோன்றி
அடுத்தவர் வாழ்வை
ஒரு புறம் வதைக்க...

இன்னும் பலரது மனங்கள்
நற்பாதைகளில் பயணித்து
பலருக்கு நன்மைகள்
பலதையும் செய்ய...

இன்னும் சிலரோ...
எதையும்... கண்டும்
காணாமலும் வாழ...

வாழ்க்கை மட்டும்
யாருக்காகவும் காத்திருக்காமல்
நகர்ந்தே தான் செல்கிறது
அகிலத்தில் அனைத்தையும்
அழகாய் வருடிக் கொண்டு

ஆதலால்...
அவரவர் வாழ்வு அழகுற
அவரவர் தேடல்கள்
அகிலத்தில் அருமையாய்
இருத்தல் சிறப்பு

ஆக்கம் - மருதமுனை மாஹிறா,
91, அல்ஹம்றா வீதி,
மருதமுனை-04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கவிதை - கலங்கிப் போன நெஞ்சமும்தான் ஆறுதலடைகின்றது**

**கலாபூஷணம் - அ.மு.பாறூக் - புன்னகை வேந்தன்**

கலை இலக்கியம், பாரம்பரியக் கலைகளெல்லாம்
குவலய மாந்தருக்கு வழிகாட்டும் தீபமாகும்
அலைச்சலும் அவலங்களும் வாழ்வில் நிகழ்வதனால்
ஆத்மாவின் அமைதி இருட்டறைக்குள் அடைக்கலமே!

சிலம்பாட்டம், சீனடி, பொல்லடி, நாட்டியமும்
சிந்தைக்கு விருந்தாகிச் சாந்தியை உருவாக்கும்
நலம் பெரும் நோக்கையே இலக்காகக் கொண்டு
நல்ல பல கலைஞரெல்லாம் பாரம்பரியம் பேணுகின்றார்.

இலங்கை அரசாங்கத்தின் கலாசார திணைக்களமும்
இங்கிதமாயக் கலைஞர்களை அரவணைத்தே வருவதனால்
சலங்கை ஒலி நாட்டியங்கள், மத்தளம், வீணை இசை

சிந்தைக்கு மகிழ்வூட்டிக் கவலைதனைத் தணிக்கின்றது.
இலங்கும் இலக்கியங்கள் வாரித் தரும் நாடகங்கள்
இலங்கும் அரங்குதனில் அரங்கேற்றமாகின்றது.
கலங்கிப் போன நெஞ்சமும்தான் ஆறுதலடைகின்றது
கண்டுகளிக்கும் இரசிகர்களோ ஏராளம்! ஏராளம்-

சிறுகதை, கட்டுரை, கவிதை நாவல்களும்
சிந்தனை எழுச்சிக்கு உரமூட்டும் நிஜந்தானே!
மறுவிலாதெழுந்த முழுமதியை வான்பரப்பில்
மகிழ்வோடு நோக்கி நாம் பூரிப்படைகின்றோம்
கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வானும்
கச்சிதமாய் கலாசாரப் பெருவிழா நடாத்துகின்றார்.
உலாவந்து கலைஞர்களை உற்சாகமூட்டுகின்றார்.
உன்னதமாம் சேவையினால் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்.

சங்கீதம், மேளதாளம், இன்னிசைக் கருவியெல்லாம்
சொந்தங் கொண்டாடி எம்மை ஆலிங்கனம் செய்கின்றதே!
அங்கமெல்லாம் கிழுகிழுப்பையூட்டிப் பரவசத்தை
அள்ளிச் சொரித்தெம்மைத் தழுவிக் கொள்கின்றதே!
கலாசார திணைக்களத்தில் பணியாற்றும் றிஸ்வானின்
கச்சிதமான சேவையோடு தியாக மனப்பான்மையுந்தான்
துலாம்பரமாயத் தெரிகின்றது நீண்டகாலம் வாழ்ந்திடவே
தூயவன் ஏகனை நான், கையேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்முனை நகர்

மாநகரம் எங்கள் மாநகரம்
கல்முனை நகர் எங்கள் மாநகரம்
இந்து முஸ்லிம் பௌத்தர் பறங்கியர்
இணைந்து வாழ்ந்திடும் நன் நகரம் - மா

இலங்கை நாட்டின் தேசிய மொழியாம்
இரு விழிபோல சிங்களம், தமிழ்மொழி
பொது மொழியான ஆங்கிலம் பேசி
புன்னகையோடு வாழ்ந்திடும் நகராம் - மா

கடல்வளம் சூழ்ந்து மீன்னிசைபாடும்
நெல்வய் நிறைந்து நெற்கதிர் ஆடும்
நெல்குத்தும் ஆலையின் இடி இசை கேட்கும்
கனதறி ஓசைகள் காதினில் ஒலிக்கும் - மா

தென் கிழக்கின் முக வெத்திலையாம் நகர்
தினம் தினம் சனம் வரும் சந்தை வணிகமும்
மனதைக் கவர்ந்திடும் தங்கக் கடைகளும்
மக்கள் மகிழ்ந்திடும் மாநகராட்சியும் - மா

கலாபூசணம் I.L. நெய்னாமுகம்மது J.P.
*0776915409*
*0672221319*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தற்காலம்

இயற்கையின் இன்பமாய்
நாம் சுவாசித்த காற்றுக்கள்
காலின்றி பறக்கின்றன
அடிமரம் சசிந்து நிற்க

மாடி மனையென
மக்கள் எம்மை போற்ற வேண்டும்
ஓடு வீடு ஒழிய வேண்டும்
ஓய்வின்றி உழைக்கின்றோம்.

ஓடி ஓடி உழைத்து
என்ன பயன் இறுதியில்
பிணியைத்தான் பிடுங்குகின்றோம்.

ஆடம்பர வாழ்க்கையென
நாம் நினைக்கும் அர்த்தமெல்லாம்

பாடிப் பாடிக் கொண்டு வரும்
அழிவைத்தான்

எங்கு பார்த்தாலும்
செயற்கையின் பரினாமம்
உருவெடுக்க
இயந்திரமே எமதியக்கம்
மூளைக்கும் வேலையில்லை
உடல் உறுப்புக்களுக்கும் வேலையில்லை

கொழுப்பும் கரையவில்லை
குருதியும் ஓடவில்லை
உடல் இயக்கம்
திடீரென நிற்கிறது

தினம் ஒரு மரணம்
மறுக்க முடியவில்லை
தெவிட்டி விட்டது
மரணச் செய்தி

கண்கள் கண்ணீர்
சொரிய மறுக்கிறது
அது இயைபாக்கமென்று

காலமும் மிகவேகமாக
ஓடுகின்றது
இதில் நாம் எப்போது
எந்த இடத்தில் விழுந்து
விடுவோம் என்ற அச்சத்தில்

என்றாலும் போதனைகள்
அனைத்தும் எமக்கல்ல
பிறருக்கென எம்மை நாம்
எப்போதும் மாற்றப்போவதில்லை

*திருமதி S. அக்கிலாபானு*
*அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*பெரியநீலாவணை-02*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர் நாங்கள்

மணமுடித்து மகிழ்ந்து
மழலைகளைப் பெற்று
உணவூட்டி உடையணிவித்து
உள்ளம் மகிழ்ந்து
கனவுகளைக் கண்டு
களிப்படைந்து
அன்புகாட்டி அரவணைத்து
ஆனந்தம் கண்டோம்.

மக்களுக்காக
உழைத்து உழைத்து
ஓடாகத் தேய்ந்து
உடல் உருகி
ஊனமாகிப் போனோம்.
கடல் போல்
கனவுகளைக் கண்டு
காலத்தை வென்றோம்.

மக்களோ இன்று
தலைநிமிர்ந்து
தனித்துவமாய் வாழ்கின்றார்கள்
நாங்களோ

நாதியற்று நடைப்பிணமாய்
உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
ஊனமாய் போனோம்.

பெற்ற தாயும்
பேணிவளர்த்த தந்தையும்
பாரமாய் போச்சு மக்களுக்கு
உற்றார் உறவும் தூரமாகி
ஊரார் பராமரிக்கும் காலமாகி
மௌத்தை எதிர்பார்த்து
மண்ணறைக்காக
காத்திருக்கின்றோம்.

**தேச அபிமானி,**
**எம்.ஏ.எம்.ஹைதர் J.P.,**
**கலாசார மத்திய நிலைய**
**உத்தியோகத்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாய்

தாய் என்ற சொல்லிற்கு
அர்த்தம் என்பது
கவிஞர்களுக்கும் அரிதே
சிசுவின் கண்ணீர் துடைக்க
தன் பசியாறியது
உதிரத்தை - தன் சிசு
கண்ணீரை பன்னீராய்ப் பாதுகாப்பாள்
தாய்
பல்லாயிரம் பாடல்கள் வந்தாலும்
தாயவள் தாலாட்டிற்கு
நிகரேது

வலிமையும் சுகமென நினைத்து
பத்து மாதங்கள் இன்புறுவாள் தாய்
பூமிக்கும் பொறுமை உண்டென
கூறும் பூகம்பமும் உண்டு - ஆனால்
தாயின் பொறுமைக்கும்
எல்லை உண்டோ
அவள் காட்டும் பாசத்தில் நலமாய் இருந்து
வரமாய் இருந்து
வரமாய் பெற்றெடுத்தாலும்
உரமாய் இடுவாள்
இம் மனித குலத்திற்கு

கண் இமைக்கும் நேரத்திலும்
கண்டித்தாலும் - பிள்ளையின் கண்ணீர்
கண்டதன் பின் கனப்பது இவள் மனமே
குழந்தையின் குறும்பிலும்
தரும்பும் தீண்டாது
பொறுப்பாய் இருப்பாள் தாய்

வாழ்வில் உண்மை இருக்க
நாவில் தெளிவிருக்க
உணவிலும் உணர்வுகள் - சேர்ந்து
ஊட்டி விடுவாள்
நெஞ்சில் வீரமும் நிகழ....

கவிதை ஆக்கம்,
கட்டுரை, மற்றும்
மல்குரல் கலைஞர்
(தேசாபிமானி சமூக தீபம்)
M.R.C.பயாஸ்
மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை கலாசார மத்திய நிலையத்தின் கலாசார அபிவிருத்திக் குழு – 2018/2019

01. தலைவர் ஜனாப். ஐ.எஸ்.றிஸ்வான் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்)

02. செயலாளர் செல்வி. ஜுல்பிகா ஷரீப் ஆசிரியை (ஊடகவியலாளர்)

03. பொருளாளர் ஜனாப். ஏ.எம்.ஏ.சமட் (ஓய்வு நிலை அதிபர்)

04. உப தலைவர் ஜனாப். ஏ.அப்துல் கபூர்(ஓய்வு நிலை ஆசிரியர்)

05. உப செயலாளர் ஜனாப். ஏ.எல்.ஐ.ஹுஸைஸன் (ஜீனாறாஜ்)

**கௌரவ உறுப்பினர்கள்**

06. ஜனாப். ஏ.ஆர்.முகம்மட் சாலிஹு (சிரேஸ்ட தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர்)

07. புன்னகை வேந்தன் ஏ.எம்.பாறுக்

08. கவிஞர். எம்.எச்.ஏ.கரீம்

09. கவிஞர். எம்.ஐ.எம்.றபீக்

10. கவிதாயினி. ஏ.பி.ஜெஸீமா

11. கவிதாயினி. எம்.ஐ.கைறுன் நிஸா

12. ஜனாப். ஏ.எஸ்.எம்.முர்ஷித் (NWSD)

13. ஜனாப். ஏ.ஆர்.ஏ.நபாயிஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

14. கலாபூஷணம். ஐ.எஸ்.நெய்னா முகம்மட்

15. கவிஞர். எம்.எம்.விஜிலி (ஆசிரியர்)

16. தேச அபிமானி. எம்.ஏ.எம்.ஹைதர் (கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்)

17. ஜனாபா. எஸ்.யஸ்மின் இஸ்ஸத்

18. கலாபூசனம். எம்.எம்.முஹம்மட் ஹஸினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு

01. ஜனாப். ஐ.எல்.றிஸ்வான் (ஆலோசகர்)
02. ஜனாப். ஏ.ஆர்.முகம்மட் சாலிஹ் (தலைவர்)
03. கவிஞர். எம்.எம்.விஜிலி (செயலாளர்)
04. புன்னகை வேந்தன் ஏ.எம்.பாறுக்
05. ஜனாபா. எஸ்.யஸ்மின் இஸ்ஸத்
06. கவிதாயினி. ஏ.பி.ஜெஸீமா
07. ஜனாப். ஏ.ஆர்.ஏ.நபாயிஸ்
08. ஜனாப். ஏ.எஸ்.எம்.முர்ஷித்
09. கவிதாயினி. எம்.ஐ.கைறுன் நிஸா

## விழாக்குழு

01. ஜனாப். எம்.எம்.நஸீர், பிரதேச செயலாளர் (தலைவர்)
02. ஜனாப். ஐ.எல்.றிஸ்வான் (இணைப்பதிகாரி)
03. கவிஞர். எம்.எம்.விஜிலி (செயலாளர்)
04. ஜனாப். ஏ.ஆர்.எம்.சாலிஹ் (உப தலைவர்)
05. கவிதாயினி. ஜுல்பிகா ஷரீப் ஆசிரியை (ஊடகவியலாளர்)
06. புன்னகை வேந்தன் ஏ.எம்.பாறுக்
07. ஜனாப் ஏ.எம்.ஏ.சமட் (ஓய்வு நிலை அதிபர்)
08. ஜனாப். எஸ்.எல்.முகம்மட் ஜலாலுத்தீன் J.P. (ஓய்வு நிலை அதிபர்)
09. ஜனாப். ஏ.எல்.எம்.சினாஸ் (ஊடகவியலாளர், CDO)
10. ஜனாப். எஸ்.எல்.அஸீஸ் (ஊடகவியலாளர், DO)
11. ஜனாப். ஏ.ஆர்.ஏ.நபாயிஸ் (ஊடகவியலாளர், DO)
12. ஜனாப். ஏ.எஸ்.எம்.முர்ஷித் (தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை)
13. கவிதாயினி. எம்.ஐ.கைறுன் நிஸா
14. தேசஅபிமானி எம்.ஏ.எம்.ஹைதர் J.P. (கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்)
15. கலாபூஷணம். ஐ.எல்.நெய்னா முகம்மட்
16. கவிஞர. எம்.ஐ.எம்.றபீக்
17. கவிஞர். எம்.எச்.ஏ.கரீம்
18. கவிஞர். ஏ.எல்.ஐ.ஹுசைன் (ஜீனாறாஜ்)
19. ஜனாபா. எஸ்.யஸ்மின் இஸ்ஸத்
20. கலாபூஷணம். எம்.எம்.முகம்மட் ஹஸனி
21. கவிதாயினி. ஏ.பி.ஜெஸீமா
22. திரு. எல்.பிரதீபன் (கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்)
23. ஜனாப். பி.எம்.நிசாம் (கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்)
24. திருமதி ஏ.ஜி.சித்தி பாஜியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
25. ஜனாப். ஏ.எம்.எம்.நியாஜத் (முகாமைத்துவ உதவியாளர்)
26 திருமதி எம்.எச்.பௌகுல் ஹிபானா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
27. கவிதாயினி. எம்.ஏ.மாஹிறா
28. செல்வன் எம்.ஆர்.காமில் பயாலஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்முனை கலாசார மத்திய நிலையத்தினால் நடாத்தப்பட்ட முனை மகுட விழாவின் போது கௌரவிக்கப்பட்ட மூத்த கலைஞர்களின் விபரம் - 2019.**

| இல. | கலைஞரின் பெயர் | கௌரவிக்கப்பட்ட துறை |
|---|---|---|
| 01. | அல்-ஹாஜ். ஏ.எல்.மதார் சாஹிபு | சமூக சேவை |
| 02. | அல்-ஹாஜ். ஏ.எல்.எம்.இப்றாஹிம் | ஆயுள்வேத வைத்தியம் |
| 03. | அல்-ஹாஜ். எம்.வை.எம்.மனாப் | நாடகத்துறை |
| 04. | அல்-ஹாஜ். எஸ்.ஐ.முகம்மது முஸ்தபா | மல்யுத்தம் |
| 05. | திருமதி. எஸ்.எல்.சாபிறா உம்மா | குரவை |
| 06. | ஜனாப். ஏ.எல்.சக்கரியா லெப்பை | சிலம்படி |
| 07. | ஜனாப். பி.எம்.முகம்மது ஷரீப் | குர்ஆன் கற்பித்தல் |
| 08. | ஜனாப். ஏ.வி.எம்.மஃதூம் | விளையாட்டுத் துறை |
| 09. | ஜனாப். திருமதி எம்.சித்தி றபீக்கா | மூலிகை வைத்தியம் |
| 10. | ஜனாப். ஏ.எல்.இப்றாலெப்பை | சுருட்ட வாள்வீச்சு, பந்தம் வீச்சு |
| 11. | ஜனாப். ஏ.அப்துல் ஹமீட் (தோழர் இஸ்மாயில்) | சமூக சேவை |
| 12. | ஜனாப். எம்.எச்.எம்.அப்துல் காதர் | எழுத்துத் துறை |
| 13. | ஜனாப். ஏ.எம்.ஹூஸைன் | நாட்டுப்பாடல், கவி பாடல் |
| 14. | ஜனாப். ஐ.எல்.நெய்னா முகம்மட் | பல்துறை |
| 15. | ஜனாப். ஐ.எல்.எம்.றபீக் | பொல்லடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை கலாசார மத்திய நிலையத்தினால் நடாத்தப்பட்ட முனை மகுட விழாவில் சேவை நலன் பாராட்டு வழங்கி கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம் - 2019

| இல. | பெயர் |
|---|---|
| 01. | ஜனாப். ஏ.ஆர்.முகம்மட் சாலிஹ் (சிரேஸ்ட தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர்) |
| 02. | ஜனாப். ஐ.எல்.றிஸ்வான் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்) |
| 03. | செல்வி. ஜுல்பிகா ஷரீப் ஆசிரியை (ஊடகவியலாளர்) |
| 04. | ஜனாப். ஏ.எம்.ஏ.சமட் (ஓய்வு நிலை அதிபர்) |
| 05. | ஜனாப். ஏ.அப்துல் கபூர் (ஓய்வு நிலை ஆசிரியர்) |
| 06. | ஜனாப். ஏ.எல்.ஐ.ஹுஸைன் (ஜீனாறாஜ்) |
| 07. | புன்னகை வேந்தன் ஏ.எம்.பாறுக் |
| 08. | கவிஞர். எம்.எச்.ஏ.கரீம் |
| 09. | கவிஞர். எம்.ஐ.எம்.றபீக் |
| 10. | கவிதாயினி. ஏ.பி.ஜெஸீமா |
| 11. | கவிதாயினி. எம்.ஐ.கைறுன் நிஸா |
| 12. | ஜனாப் ஏ.எஸ்.எம்.முர்ஷித் (NWSD) |
| 13. | ஜனாப். ஏ.ஆர்.ஏ.நபாயிஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| 14. | கவிஞர். எம்.எம்.விஜிலி (ஆசிரியர்) |
| 15. | ஜனாப். எம்.ஏ.எம்.ஹைதர் (தேச அபிமானி) |
| 16. | ஜனாபா. எஸ்.யஸ்மின் இஸ்ஸத் |
| 17. | கலாபூசனம் எம்.எம்.முஹம்மட் ஹஸினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித இப்தார் நிகழ்வு



சித்திரப் பாடநெறிக்கான பயிற்சிப் பட்டறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கையில் முதன் முறையாக நவீன தொழிநுட்பத்துடன் சர்வதேச தரத்தில் கல்முனையில் அஹ்மத் அலி வைத்தியசாலை

# இவ்வைத்தியசாலையில்....



- 24 மணி நேர அவசர சிகிச்சைப்பிரிவு (ETU)
- நவீன மகப்பேற்று மருத்துவப் பிரிவு
- அதி நவீன டிஜிட்டல் X-Ray வசதிகள்
- 4D, 3D அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங் வசதிகள்
- சிறு பிள்ளைகளுக்கான நவீன மருத்துவ சாதனங்கள் மூலமான சிகிச்சை



- பற் சிகிச்சைப் பிரிவு
- விரைவான மருத்துவ சேவை வசதிகள்
- குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வாட் வசதிகள்
- 24 மணிநேர பாமசி வசதிகள்
- அனுபவமிக்க வைத்திய நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள்



- நவீன தொழிநுட்ப சாதனங்கள் கொண்ட ஆய்வுகூட வசதிகள்
- 24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு (OPD)
- நவீன தொழிநுட்ப சாதனங்களுடன் கூடிய சத்திர சிகிச்சை வசதிகள்



- கண் சிகிச்சைப் பிரிவு
- காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு (ENT)
- இயன் மருத்துவப் பிரிவு

நவீன முறையிலான வாகன தரிப்பிட வசதிகள், இன்னும் பல மருத்துவ வசதிகளுடன் கல்முனை மாநகரில் புதிதாய் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அஹ்மத் அலி வைத்தியசாலை

இல. 142 F, பிரதான வீதி, கல்முனை, இலங்கை
தொ.பே.: 0777700391, 0757500111
E-mail : info@ahmadalihospital.com Web : www.aah.lk

**"உங்கள் நலம் எங்கள் சேவை"**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Moon Village


## Restaurant & Cafe











Akbar Mosque Road,
Maruthamunai-01
Mob.: 0750494360





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAJATH

**Welding Engineering Work**

**J.Mohamed Najath**







077 2725914

075 2801869

*340, Akbar Road, Periyaneelavanai. (MD) - 01.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# N.S.N.Hardware

கட்டட வேலைகளுக்கான பொருட்களும்,
கட்டட வேலைகளும் செய்து தரப்படும்

Proprietor
S.A.Wahid (Thowfeek)




Abkar Town, Maruthamunai
Mob.: 0770544197, 0758172611

# அகீத் ஸ்டோர்ஸ்



ஜே.எம்.நபார்

167A/1, அல் மனார் வீதி, மருதமுனை.
தொ.பே. 0776681142



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHAFNAM

## Fruit Shop & Ice Age









**Main Street,Maruthamunai.**

**Cont.: 067 2059422, 077 9925876, 077 0849424**

உங்களுக்கு தேவையான அனைத்து விதமான
பேக்கரி உணவுப பண்டங்களையும் தரத்தில் சிறந்ததாய்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

# FARIS BAKERY



Main Street, Maruthamunai    Mob.: 0713348473




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# B4U FABRIC HANDLOOMS

I.M.Mufaris
*Managing Director*



Main Street, Maruthamunai
Mob.: 076 6674797, 072 4921591
mufaris4u@gmail.com

# SAFA LEARNERS

அனைத்து வகையான சாரதி
அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள

L
LEARNING DRIVER



Main Street, Maruthamunai
Mob.: 0758900397, 0756059773




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J FRUITS

*Drink it Daily Feel it Forever...*

**Woodapple Drink**
**விழாம்பழப் பானம்**



**Mixed Fruit Drink**
**பழக்கலவைப் பானம்**



100% NATURAL

**Mango Drink**
**மாம்பழப் பானம்**



திருமண வைபவங்கள், விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள்
விளையாட்டு நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் அனைத்து
வைபவங்களுக்கும் தேவையான குளிர்பானத்தினையும்
குளிரூட்டப்பட்ட நிலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள முடியும்

**Manufactured & Marketed By:**
**167 A, Main Street, Maruthamunal-05 Mob: 0770671640, 0777852695**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகளின் வாசல்



கல்முனை கலாசார மத்திய நிலையத்தின்
முதல் வாசலாய் திறக்கின்றது
இந்த தலைவாசல்

இம் "முனைமகுடம்" விரிந்து
இப்பிரதேச இதயங்களுக்காக
மலர்கின்றது.

பாரம்பரிய முதுசங்களை
மறு சந்ததியினருக்காக
தலைமுறை இடைவெளியில்லாது
எடுத்துச் செல்லும் இவைகள்
ஒவ்வொன்றும்
நம் முன்னேற்றங்களில் துளிர்க்கும்
பொன் ஏடு ஆகும்.

இதனுள் அமர்ந்து ஒத்தாசைகளுக்கு அணி
சேர்த்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்

தட்டச்சிட்ட மருதமுனை
பெஸ்ட் கொம்பியூட்டர் A.F.M.சாதாத்,
அச்சிட்டு வெளியிட்ட
அக்கரைப்பற்று நியூ செலக்ஷன்
ஒப்செட் அச்சகத்தினருக்கும்
அன்போடு நன்றிகளை
தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கவிஞர் விஜிலி**
**விழாக்குழு, மலர்க்குழு சார்பாக**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ABNA Print, MRM.